www.tamilarangam.net

2 8 AUG 1997

ஸரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**சமாதான யுத்தம்!**

கண்ணீருடன்குருதி கலந்து நனைந்திட்ட
மண்ணிலே சமாதானம் மலருமென்று - சொன்னபின்னும்
கண்ணீர் குருதிக்காய் கடுஞ்சமரில் இறங்கியதை
என்னவென்று எதிர்ப்பீர் இனி?

-ஈழமோகம்

இதழ் 129 ஒகஸ்ட் 28-செப்.10, 1997 விலை ரூபா 10



# 77 இனப் படுகொலை 20 ஆண்டுகளின் பின்!

# சிறிசேனகூரே விவகாரம் : விழுந்தும் படவில்லையாம் மண்

# படையினரின் பாலியல் வன்முறை : நிறுத்தக் கோரும் பெண்கள்

2 8 AUG 1997

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

ஆசிரியர் குழு
பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

இதழ் தொகுப்பு
என்.எஸ்.கே.

வெளியிடுபவர்
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

ஆண்டு சந்தா விபரம்
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை
யாவும்
MIRJE என்ற பெயருக்கு
எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு - 05.

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள்
வேண்டுவோர் எழுதுக.
கைவசம் உள்ள பிரதிகள்
அனுப்பிவைக்கப்படும்.

பிரசுரத்துக்கென
அனுப்பப்படும் படைப்புகள்
திருப்பி அனுப்பப்பட
மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு
பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ
அல்லது தெளிவான
கையெழுத்தில் பிரதி செய்தோ
அனுப்பி வைக்கவும்.


# கடற்தொழிலாளர் மீது இராணுவம் சூடு!

திருகோணமலை நகரிலிருந்து உப்புவெளி நோக்கிய பாதையில் நகராட்சிமன்ற எல்லைக்குள்ளேயே அமைந்துள்ள திருக்கடலூர் மீனவக் கிராமத்தில் ஓகஸ்ட் 18ல் இடம் பெற்ற சுற்றிவளைப்பு மக்களை வித்தியாசமாகச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

நகருக்குள் அண்மைக்காலமாக நல்ல பிள்ளைத் தனமாக நடந்து கொண்ட பாதுகாப்புப்படை புனிதமான பூரணைத்தினத்தன்று அதிகாலையிலேயே இவ்வாறான கொடூரமான கொலையைச் செய்யும் என்று அந்தப்பகுதி மக்கள் எவருமே நினைத்திருக்க மாட்டார்கள்.

அவ்வாறு அதிகாலை திருக்கடலூர் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது. வழமையான சுற்றிவளைப்புத்தான். கடற்கரையோரமாக வந்த பாதுகாப்புப்பிரிவினர் வழமைபோல கடற்தொழில் செல்வதற்காக மணலில் படுத்திருந்த இளைஞர்களை எழுந்து வீடுகளுக்குச் செல்லுமாறு பணித்தபோது எவ்வித பதற்றமுமின்றி வீடு செல்லத் தொடங்கினார்கள்.

தெருவழியாக சுற்றிவளைப்பில் வந்து கொண்டிருந்த பாதுகாப்புப் படைப் பிரிவினர் வீடுநோக்கி வந்து கொண்டிருந்த இந்த இளைஞர்களைக் கண்டதும் ''ஏன்'' என்று கூடக் கேட்காமல் துப்பாக்கியால் சுடத்தொடங்கினார்கள். உடனடியாக லட்சுமி காந்தன் தமயந்தன் என்ற இளைஞன் சுருண்டு விழுந்து இறந்தான். கிருஷ்ணமூர்த்தி முரளிதரன் என்ற இளைஞன் சூட்டுக் காயங்களுடன் ஓடிச்சென்று வீடொன்றில் புகுந்து கொண்டான். ஏனையவர்கள் சிதறியோடி எதிர்ப்பட்ட வீடுகளுக்குள் புகுந்து கொண்டனர்.

வேட்டுச்சத்தங்கள் கேட்டு திடுக்கிட்டு நித்திரை விட்டெழுந்த அந்தப் பகுதி மக்கள் நடந்த சம்பவத்தால் கலங்கிப்போய் நிற்க, பாதுகாப்புப்படையினர் துரிதமாக புலி பிடிக்க காயம்பட்ட இளைஞனும் வேறு நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

நிலைமை மோசமடைந்தது. வீட்டில் ஒழுங்காக இருந்து கடற்றொழிலுக்குப் போய் வீட்டாருக்கும் உறவினர்க்கும் உதவியாக இருந்த தங்கள் பிள்ளைகள் கண்முன்னாலேயே கொல்லப்பட்டும், காயப்பட்டும் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டும் போனதால் வெகுண்டெழுந்த மக்கள் வீதியில் இறங்கி எதிர்ப்பைக் காட்டத்திரண்டு விட்டனர்.

வழக்கம் போல இந்த இளைஞர்களைப் புலிக்கணக்கில் இணைத்து விட பாதுகாப்புத்தரப்பு எடுத்த முயற்சிகள் மக்கள் எதிர்ப்புக்கு முன்னால் தோற்றுப்போயின. முதலில் புலி என ஒத்துக்கொண்டால் தான் பிரேதத்தைத் தருவோம் என்றவர்கள் எதிர்ப்புக்கண்டு இறங்கி வந்து பிரேதத்தைப் பெற்றோரிடம் ஒப்படைத்ததோடு ஏனைய நால்வரையும் உடனடியாகவே விடுதலை செய்தனர். முரளிதரன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நிதானமானவர்கள் என்று நகரப் பகுதி மக்களினால் நம்பப்பட்டு வந்த பாதுகாப்புத் தரப்பினருக்கு இந்தச் சம்பவம் ஒரு தோல்வியே. சமயோசிதமும், நிதானமும் இல்லாதவர்களைப் படைத்தரப்பில் வைத்துக் கொண்டு, மக்கள் மனங்களை வெல்லலாம் என்று அதிகாரிகள் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கலாமா?

விவேகி

# சோதனைச் சாவடிக்குள் வேதனை!

மே மாதம் 31ஆம் திகதி மட்டுவில் பகுதியில் மூன்று இராணுவத்தினர் இரவு நேரம் வீடு ஒன்றினுள் புகுந்து சோதனையிடப் போவதாகவும், நீங்கள் புலிகளுக்கு சாப்பாடு கொடுக்கிறீர்கள் எனவும் கூறி வீட்டில் உள்ளவர்களை மிரட்டி அங்கிருந்த கிருபாதேவி சண்முகநாதன் என்ற விதவைப் பெண்ணை வெளியே கூட்டிச் சென்று இருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக இப்பெண் செய்த முறைப்பாட்டையடுத்து சாவகச்சேரி பொலிசார் சம்பத் சமிந்த ரம்புக்பொத்த என்ற இராணுவ சிப்பாயைக் கைது செய்தனர்.

ஜூலை 30 அன்று யாழ் நீதிமன்றத்தில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் இவரை அப்பெண் அடையாளம் காட்டியுள்ளார். மற்ற இராணுவ சிப்பாய்களான மகிந்த பிரிய, கே.ரி.எக்ஸ். நிசாந்த ஆகிய இருவரும் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர்.

காரணம், அன்று தமது 'அலுவலை' முடித்துவிட்டு வெளியே ஓடிய போது வழியில் மறைந்து இருந்த மற்றொரு இராணுவக்குழு இவர்களைப் புலிகள் என்று சுட்டனர். இதனால் இருவரும் காயமடைந்தனர். அதனால் அவர்கள் அடையாள அணிவகுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இப்பெண் நீதிமன்றத்தில் கூறிய சாட்சியத்தில் தனது அறைக்கதவை உதைத்து திறந்து பிள்ளையை உள்ளே விட்டுப் பூட்டி விட்டு வெளியே வரச்சொல்லி ஒருவர் மாறி ஒருவராக இருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர் என்றார்.

ஜூலை 12 வல்லையில் ஒரு பெண் இரு இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ள சம்பவம் நீதிமன்றத்திற்கு வந்துள்ளது. கிட்டன் சந்திரகலா என்ற இப்பெண் யாழ் நீதிமன்றத்தில் 01.08.1997 அன்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சமன் குமார, ரட்னாயக்கா ஆகிய இரு இராணுவத்தினரையும் அடையாளம் காட்டினார்.

அன்றைய தினம் பகல் ஒரு மணியளவில் வல்லை சோதனை நிலையத்தில் தனது 'பாஸை' (வடமராட்சி மக்களுக்கு படையினர் வழங்கும் அடையாள அட்டை) இருவரில் ஒருவர் கேட்டு வாங்கினார். திருப்பிக் கேட்ட போது தன்னை சோதனைச் சாவடிக்குள் இழுத்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கையில் அவர் கூறினார்.

2,3 மணிநேரம் மயங்கி இருந்து எழும்பி வெளியே வர இருவரும் காணப்படவில்லை. பின்னர் இராணுவ முகாமில் முறையிட்டதாக அவர் சாட்சியத்தில் கூறினார்

# பிரபாகரனைப் போய்க்கேளுங்கள்!

யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி, நல்லூர் பகுதிகளில் இராணுவம் இலவச முட்கம்பி வேலி அமைத்துக்கொடுத்துள்ளது. இப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு வீட்டு உரிமையாளர்கள் ஏற்கெனவே மதில் கட்டியுள்ளார்கள். இந்த மதில்களைச் சுற்றி இராணுவத்தினர் முட்கம்பி வேலி அமைத்துள்ளனர். வீதிகளில் உள்ள கடைகளை மூடியும் முட்கம்பி அடித்துள்ளனர். யாராவது கடைகளில் ஏதாவது வாங்க வேண்டுமானால், முள்ளுக்கம்பிக்கு இடையில் தான் வாங்க வேண்டும்.

இந்த முள்ளுக்கம்பி வேலிகளுக்கிடையில் சுமார் நூறு யார் இடைவெளியில் ஒரு சிறு பாதை விடப்பட்டிருக்கும். இந்தப்பாதையால் தான் மக்கள் போய்வரவேண்டும்.

இந்தப்பகுதிகளில் உள்ள பாதைகள் பலபொது மக்களின் பாவனைக்குத்தடை செய்யப்பட்டுள்ளன. இந்தத் தடைசெய்யப்பட்ட பாதைகளில் பொது மக்களின் பாவனைக்கு சிறு வழியாவது விடுமாறு இப்பகுதியில் வாழும் பொது மக்கள் சிலர் இப்பகுதிக்கு பொறுப்பான இராணுவ அதிகாரியைக் கேட்டனர். அதற்கு அவர் பிரபாகரனிடம் போய்க்கேளுங்கள் என்றார். அதற்கு வீட்டு உரிமையாளர் ஒருவர் பிரபாகரன் இப்படி பாதைகளைத் தடை செய்து எமது போக்குவரத்தைத் தடைசெய்யவில்லையே என்றார். உடனே இராணுவ அதிகாரியின் முகம் சிவந்தது. எழுந்து போய் விட்டார்.

ப்ரமர்.

# புதிய 'புரங்கள்'!

ஹபரணையில் இருந்து திருகோணமலை வரையிலுள்ள பிரதான வீதி இருமருங்குகளிலும் பல பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரண்களுக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களின் பெயர் பலகைகளில் புதிய புதிய ஊர் பெயர்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

நாம் கேள்விப்பட்ட வகையில் குறிப்பிட்ட பிரதேசத்தின் ஊர்களுக்கு அல்லது, கிராமங்களுக்கு பெயர் சூட்டுவது அந்தந்த உள்ளூராட்சி சபைகளே. அதுவும் மக்களின் விருப்பத்தின் பேரிலேயே அனுமதி பெறப்பட்டு விதிமுறைகளுக்கேற்ப பெயர் சூட்டுவதே வழமை.

ஆனால் தற்பொழுது மேற்படி வீதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாமைச் சார்ந்தவர்கள் தங்களுக்கேற்ற விதத்தில் பல ''புரங்கள்'' அமைத்துள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் இவ்விதம் பெரும்பான்மை சமூகத்தினருக்கு ஏற்ற வகையில் பல புரங்களை இராணுவத்தினர் அமைத்து அதற்கு பெயர் சூட்டுவது இங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு தெரியாத விடயமுமல்ல. என்னவாக இருந்தாலும் விதிமுறைபிழையென்பதைக் கூட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டாமல் இருப்பது கவலை தரும் விடயமாகும்.

துட்டகெமுன

# விளக்கோடு போ!

வீட்டின் பின்புறமாக உள்ள பற்றை மறைவில் மலம் கழிக்கச் சென்றவர் மீது அப்பகுதியில் பதுங்கியிருந்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது அவர் உயிரிழந்தார்.

02.07.97 அதிகாலை உடுவில் பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. சுன்னாகம் பொலிசார் இவரது சடலத்தை யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

இதேபோல சில நாட்களுக்கு முன்னர் லாம்புடன் சலம் கழிக்க வீட்டில் இருந்து வெளியே வந்த வயோதிபமாது ஒருவரும் படையினர் சூட்டில் பலியானார்.

இரவில் வெளியே நடமாடுவதானால் லாம்புடன் திரியும்படி படையினர் யாழ் மக்களுக்கு அறிவித்துள்ளனர்.

ரூபன்

# இவர்கள் புலிகளாம்?

யாழ்ப்பாண அரச அதிபர் பணிமனையில் பணியாற்றும் தமிழ் அதிகாரிகள் ஐவர் கடந்த 31ஆம் திகதியன்று இரகசிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விக்னேஸ்வரன் மூர்த்தி, எஸ்.சுரேஸ், கந்தசாமி, ரீ.வீரசிங்கம், அரியரத்தினம் ஆகியவர்களே இவ்வாறு இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட அதிகாரிகளாவர். மூர்த்தி சுரேஷ் ஆகிய இருவரும் தொடர்ந்தும் யாழ்ப்பாணக் கோட்டை பாதுகாப்பு பணியகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பானநபர்களா எனக் கண்டுபிடிக்க விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்.

# மண்ணெண்ணை ரூபாய் 50

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு முன்பு புலிகளின் காலம் இந்த மண்ணெண்ணெய் வியாபாரிகளின் உழைப்பு சொல்லமுடியாது. கிளாலியில் படகு ஓட்டம் ஒரு நாள் இல்லை என்றால் 50 ரூபா விற்ற மண்ணெண்ணெய் 100ரூ. 150ரூபா விற்கும்.

கப்பல் கடத்திய செய்தி கேட்ட அன்றைய தினமே 15 ரூபா லீற்றர் விற்ற மண்ணெண்ணெய் 60ரூபாவுக்கு விற்றது. ஒரு எரிபொருள் நிலையம் செய்தி கேட்ட உடனே பரல் பரலாக தனியாருக்கு விற்றுள்ளது. அதுவும் 13ரூபா 75 சதம் லீற்றர் மண்ணெண்ணெயை 50ரூபாவுக்கு விற்றது. இது இராணுவ உயர்மட்டம் வரை சென்றுள்ளது.

சில இடங்களில் பதுக்கிய மண்ணெண்ணெய் படையினரால் மீட்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது சில ஒழுங்கு முறைகளை கைக்கொண்டு மண்ணெண்ணெய் விற்பனையை மேற்கொண்டுள்ளது.

ரூபன்

www.tamilarangam.net





# இது ஒரு அரசியற் கைதே!

**-சிறிசேனகூரே**

**கொழும்பு கெப்பிட்டி பொல மாவத்தையில் ஜனாதிபதியின் 'விருந்தினராக' இருந்த அண்மைய அனுபவத்தின் பின் கசந்து போயுள்ளீர்களா?**

இல்லை. நான் சந்தோஷமாயிருக்கிறேன். ஏனென்றால் ஜனாதிபதியும், அவரது அரசாங்கமும் நான் குற்றம் செய்யவில்லையென்று எனது பெயரை தூய்மைப்படுத்த உதவியுள்ளனர். எனக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட எனத நற்பெயரைக் கொலை செய்யும் நடவடிக்கை (Charrector Assasination)எந்த அடிப்படைகளுமின்றி வெறும் ஊகங்களாலும், வதந்தி களாலும் இடம் பெற்றதாகும். உங்களுக்குத்தெரிந்திருக்கும். ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவிலும் சாட்சியங்களின் சட்டம் கண்டிப்பான ஒன்றாக நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. இது குறிப்பிட்ட சிலர் ஏனை யோரை உறுதிப்பாடுகள் இன்றி ஊகங்களின் பேரில் நற்பெய ரைக்கொலைசெய்ய வழிய மைத்துக் கொடுப்பதாகப் போய் விடுகிறது. என் விடயத்தில் எனக்கெதிரான துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தப்பட்ட சாட்சியங்களை நிறுவுமாறு வேண்டப்பட்டது. அரசால் அதன் குற்றச் சாட்டுக்களை நிறுவ முடியாமல், நியாயப்படுத்த முடியாமற் போய் விட்டது. உயர்நீதிமன்றம் எனது அடிப்படை உரிமைகள் மீறப் பட்டதாகக் கூறி என்னை விடுவித்தது. அரசியல் காரணங்களுக்காக என்னைத் துன்புறுத்த நினைத்த அரசாங்கம் எனது பெயரைத் தூய் மைப்படுத்தவே உதவியிருக்கிறது. இதனால் தான் நான் சந்தோஷமாயிருக்கிறேன் என்று கூறுகிறேன். அவர்கள் விட்ட 'பூமராங்' அவர்களையே திருப்பித் தாக்கியுள்ளது.

**உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது தடுப்புக்காவல் உத்தரவு மேல்மட்ட உத்தரவு இன்றி இடப்பட்டிருக்கும் என்று கருது கிறீர்களா?**

அது எனக்குத் தெரியாது. வேண்டுமானால், இவ்வாறு மட்டும் சொல்வேன். இவ்வாறான தீர்மானங்கள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்பதை இந்த முழுநாடுமே அறியும். எனது தடுப்புக்காவல் முற்றிலும் அரசியல் காரணங்களுக்கானதே.

**உங்கள் கைதுக்கும் தடுப்புக் காவலுக்கும் எதுவிதமான அடிப் படைகளும் இல்லையென்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. நீங்கள் உங்கள் தடுப்புக் காவலுக்கான காரணங்களாக எவற்றைக் கருதுகிறீர்கள்?**

நான் நாட்டுக்கு திரும்பியிருந்த போது பிரேமதாச மன்றம் நிதி நெருக்கடிக்குட்பட்டு செயற்பட முடியாதிருந்ததை அறிந்தேன். எனவே நான் அதை மீண்டும் இயங்க வைக்கும் நோக்குடனும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப் படையிலும் மக்களிடமிருந்து நிதி திரட்டினேன். அப்போது பல தப்பபிப்பிராயங்கள் உருவாக்கப் பட்டன. ஐ.தே.கவுக்கும் பிரேமதாச மன்றத்திற்கும் இடையே சில தவறான புரிதல்களும் இருந்தன.

பிரேமதாச மன்றத்தினால் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் ஒழுங்கு செய்யப்பட்ட ஜுன் 19ம் திகதிய கூட்டத்திற்கு ஐ.தே.க தலைவர் ரணிலும் ஏனைய கட்சி உறுப்பினர்களும் வருவதாக இருந்தது. ஐ.தே.க. ஆட்களின் இவ்வாறான மாபெரும் ஒற்றுமையான ஒன்று கூடலைக் கண்டு அரசாங்கம் அச்சமுறும் என்று நான் நம்பினேன். இதையெல்லாம் நடக்க விடாமல் தடுப்பதற்காகவே நான் கைது செய்யப்பட்டேன். இவ்வாறு கைதான பின்னர் நான் அடிப்படை உரிமைமீறல் வழக்குத்தொடர்ந் தேன். இந்நிலையில் அரசாங்கம் தன் நடத்தையை நியாயப்படுத்தி நிறுவ வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்காகச் சில குற்றச்சாட்டுக்களை இட்டுக் கட்டியது. கொலைச் சதியும் அதிலொன்று. அரசாங்கம் எங்களுக்கிடையேயான வேறுபாடுகள் எப்பவும் தீர்த்துக்கொள்ளப்பட முடியாதது என நினைத்து ஐ.தே.க.விடையே பிளவையும் உருவாக்கப் பார்த்தது. பின்னர் அதுவும் சரிவராது போகவே என்னைக் கைது செய்தது.

**இவ்வரசாங்கத்தின் மூன்று வருடச் செயற்பாடுகளை / சாதனைகளை எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?**

செயற்பாடுகள் சாதனைகள் என்று பேசுவதற்கு எதுவும் இருக்கிறதா? பொருளாதாரம் சிக்கலில் இருக்கிறது. ஜனநாயகம் அச்சுறுத்தலில் இருக்கிறது. தேர்தலுக்காக கொடுக்கப்பட்ட எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட வில்லை. இதை விட மேலும் சொல்ல வேண்டுமா?

**உங்கள் கைதுக்கான காரணங்களாக எதைக் கருதுகிறீர்கள்/ சி.ஐ.டியினர் சொல்வது போல் ஜனாதிபதியைக் கொல்லும் முயற்சிகள் பற்றிய திட்டத்துக்காக சொத்தி உபாலியையோ அல்லது அவரது சகாக்களையோ சந்தித்தீர்களா? அல்லது உங்கள் கைது அரசியல் குடும்பப்பகை யானதா?**

ஏன் நான் தடுத்து வைக்கப்பட்டேன் என்பதை ஜனாதிபதியிடம் அல்லது பாதுகாப்பமைச்சின் செயலாளரிடம் கேளுங்கள். நான் சொத்தி உபாலியையோ சகாக்களையோ சந்தித்ததில்லை. உபாலி சிறையிலிருக்கும் போது நான் எவ்வாறு சந்திப்பது? நான் 1994ம் ஆண்டுக்குப் பிறகு சொத்தி உபாலியைச் சந்திக்கவேயில்லை. சந்திக்க அவர் எனக்கு மிக நெருக்கமானவரும் இல்லை. மாறாக அவர் ஒரு ஐ.தே.க உறுப்பினரே.

**நீங்கள் தடுப்புக்காவலில் இருந்த போது பல குற்றச்சாட்டுக்கள் பற்றி பேசப்பட்டன. அதில் சிரேஷ்ட ஐ.தே.க. அமைச்சர் ஒருவர் பற்றியும் சாடை காட்டிப் பேசப் பட்டது.- பிரேமதாச கொலை யுண்ட இடத்தில் சிதறியிருந்த இரத்தக் கறைகளை அகற்றுமாறு பணித்தாராம். சில அறிக்கைகள் பிரேமதாசவின் மரணம் தொடர்பான விசாரணை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு விட்டதென்று கூறுகின்றன இது பற்றி...**

நான் ஏன் அவ்வாறு உத்தரவு வழங்கியிருக்க வேண்டும். அது பொலிசாரின் வேலை. கொழும்பு மேயராக இருந்திருந்தாலாவது ஏதாவது சொல்லலாம். அதைவிடுவோம். நான்கு வருடங்களாக சும்மா இருந்து விட்டு ஏன் இப் போது அவர் மரணம் பற்றிய 'ஆராய்ச்சியை' மேற்கொள்கிறார்கள்? கறைபடிந்த இடத்தைக் கழுவுவதற்கான உத்தரவை யார் பிறப்பித்தார்கள் என்பது எனக்குத் பிறப்பித்தார்கள் என்பது எனக்குத் தெரியாது.

*நன்றி:*

***சண்டே டைம்ஸ் -சண்டே லீடர்***




படையினரின் பாலியல் வன்முறைகளிலிருந்து

# விடுதலை வேண்டிப் பெண்கள்

**கோணேஸ்வரி கொல்லப்பட்டு 90ம் நாள் நினைவுக் கூட்டம்**

கோணேஸ்வரி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு 90வது நாள் நினைவாகவும், அரச படைகளினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த, வருகின்ற பெண்கள் மீதான வன்முறைகளைக் கண்டிக்கும் முகமாகவும், ஓகஸ்ட் 15ம்திகதி பகல் 12.30 மணி தொடக்கம் 1.30மணிவரை கொழும்பு ஹைபார்க் கோணர் வீதியில் 'விழிப்பு ஒன்றியம்' எனும் அமைப்பினரால் மௌன எதிர்ப்புக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளாலான சுலோகங்களை ஏந்தியவாறு பல அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மௌனமாக தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந் தார்கள்.

இவ்விழிப்புக் குழுவினரால் சிங்களத்திலும், தமிழிலுமான துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

இங்கிருந்து நாம் எங்கு செல்கிறோம்? எனும் தலைப்பில் கடந்த ஜூலை 1996ம் ஆண்டு தொடக்கம் ஜூலை 1997ம்ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அரசாங்கப்படைகளினாலும், படைகளில் இருந்து தப்பியோடியவர்களாலும் எல்லாச் சமூகத்துப் பெண்களுக்கெதிராகவும் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்கள்.

அத்தோடு ஜனாதிபதியிடம் பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கேட்டிருந்தார்கள். அவையாவன:-

1. பெண்களுக்கெதிரான சகல வன்முறைகளையும் விசாரிப்பதற்கும், உரிய நடவடிக்கையெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் அனுபவமும், திறமையுள்ள பெண் மனித உரிமைவாதியொருவரைத் தலைவராகக் கொண்ட விசேஷ வழக்காடு மன்றமொன்று நியமிக்கப்பட வேண்டும்.

2. அரச படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவரானாலும், அரசர சட்டத்தரணியின் உதவி வழங்கப்பட வேண்டும்.

3. அரசாங்கப் படையினரால் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படும் போது குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு பாதிக்கப்பட்ட பெண்ணின் மீது சுமத்தப்படாமல், குற்றஞ்சாட்டப்பட்டவரே தன்னை நிரபராதியென்று நிரூபிக்கும் பொறுப்பு விடப்பட வேண்டும். இதற்கான சட்டமூலத் திருத்தம் செய்யப்படவேண்டும்.

அத்தோடு மூன்று மொழிகளினால் ஆன இக்கோரிக்களைக் கொண்ட தபால் அட்டைகளில் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்புவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

ஓகஸ்ட் 1996 லிருந்து ஜூலை 1997 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் வடக்குத் தெற்குப் பகுதிகளில் இராணுவத்தினராலும் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களாலும் எல்லாச் சமூகத்துப் பெண்களுக்கெதிராகவும் மேற் கொள்ளப்பட்ட வன்முறைகள்.

1. பெண் ஒருவர் காவலில் இருக்கும் போது நான்கு பொலிஸாரினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டார்.

*மாஹோ,குருணாகல் ஜூலை 1996.*

2. யுவதி ஒருவர் காவலில் இருக்கும் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார்.

*மருதானை, ஜூலை 1996.*

3. மணம் புரிந்த பெண் ஒருவர் இராணுவத்திலிருந்து தப்பியவரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டார்.

*அத்தங்கன, சிலாபம், ஆகஸ்ட் 1996.*

4. 15 வயது மாணவி ஒருவர் பொலிஸ் பயிற்சியாளரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார்: *கல்கமுவ, குருணாகல், செப்டெம்பர் 1996.*

5. கிருஷாந்தி குமாரசாமி 11 இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். அவருடைய தாயார், சகோதரன், அயலவர் ஒருவரும் கொலை செய்யப்பட்டனர்:

*கைதடி, யாழ்ப்பாணம், செப்டம்பர் 1996.*

6. இராஜினி வேலாயுதபிள்ளை ஆறு இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

*கோண்டாவில் , யாழ்ப்பாணம், செப்டம்பர் 1996.*

7. 10 வயதுச் சிறுமி இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்டார்:

*அச்சுவேலி, யாழ்ப்பாணம் நவம்பர் 1996.*

8. பெண் ஒருவர் மத்திய கிழக்கு நாட்டிலிருந்து திரும்பி வரும் பொழுது ரிசர்வ் பொலிஸ் ஒருவராலும், வேறு மூவராலும் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார். *கட்டுநாயக்க, நவம்பர் 1996.*

—> !4

www.tamilarangam.net



# வவுனியா: பாஸ் கெடுபிடிகள்!

வவுனியாவில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் குடியிருப்பவர்கள் பொலிஸாரினால் வழங்கப் படுகின்ற வதிவிடப் பாஸ் இல்லாமல் அங்கு வசிக்க முடியாது. இதே போல வெளியிடங்களில் இருந்து வருபவர்களும் வவுனியா நகரப் பகுதியின் நுழைவாயிலில் உள்ள சோதனை நிலையங்களில் இந்தப் பொலிஸ் பாஸ் பெற்றுத்தான் உள்ளே வரவேண்டும்.

இது அவசர கால விதிகளின் கீழ் பாதுகாப்பு காரணங்களுக்காக வவுனியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்ற சட்ட நடைமுறையாகும். இந்த நடைமுறை குறித்த அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப சட்டரீதியாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா என்பது எவருக்கும் தெரியாது

இந்த பாஸ் நடைமுறைகள் பல்வேறு விதங்களில் செயற்படுத்தப்படுகின்றன. ஒரு நாள் பாஸ், ஒரு வார பாஸ், இரு வார பாஸ், ஒரு மாத பாஸ், மூன்று மாத பாஸ், நிரந்தர பாஸ் என பல தரப்பட்ட பாஸ்கள் வழங்கப் படுகின்றன.

வவுனியாவுக்குள் தற்காலிகமாக வந்து போகிறவர்களுக்கு ஒரு நாள், ஒரு வார பாஸ் வழங்கப்படுகிறது. இது முடிவுற்றதும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிப் போய் விட வேண்டும்.

கடமையின் நிமித்தம் வவுனியாவுக்குள் வருபவர்களும் அத்தியாவசிய, சொந்த தேவைகளுக்காக வந்து தங்கியிருக்க வேண்டியவர்களும் பொலிஸாரைத் திருப்திப்படுத்தக் கூடிய அதிகார பூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பித்து நிரந்தரமாக குடியிருப்பவரின் உத்தரவாத பிணையோடு இரு வார பாஸ் பெற்றுக் கொள்ளலாம். இது பின்னர் தேவைகளின் முக்கியத்தின் அடிப்படையை பொலிஸார் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஒரு மாதமாகவும் பின்னர் மூன்று மாதமாகவும் நீடிக்கப்படும்.

இந்த பாஸ் வழங்கும் நடைமுறைகள் இங்கே எழுதப் படுவதைப் போல அவ்வளவு இலகுவாக நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. இதற்குரிய சட்டரீதியான ஆவணங்களை வைத்திருப்பவர்களும் கிராம சேவகர் வீட்டுக்கும் பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கும் பின்னர் பொலிஸ் நிலையத்துக்கும் அலையோ அலையென்று அலைய வேண்டும்.

அதன் பின்னர் பொலிஸ் பொதுமக்கள் அலுவலகமென்று அழகான பெயர் கொண்ட அலுவலகத்துக்கு செல்ல வேண்டும். இந்த அலுவலகம் வவுனியா கச்சேரி வளவில் அமைந்துள்ளது. பல்வேறு விசாரணைகள் பதிவுகள் மேற்கொண்ட பின்பே இங்கே பாஸ் வழங்கப்படும். இந்த அலுவலகத்தின் நடைமுறைகளுக்கு ஒருவர் உள்ளாவதற்கு அசாத்தியப் பொறுமை வேண்டும். இவ்வளவு கஷ்டமும் சாதாரணமாக ஒருவர் வவுனியாவில் தங்கியிருப்பதற்குரிய பொலிஸ் பாஸ் பெறுவதற்காகத் தான்.

"வவுனியாவுக்கு மட்டும்" என்ற கட்டுப்பாடு இல்லாத மூன்று மாத பாஸ் வைத்திருப்பவர்களும் நிரந்த பாஸ் வைத்திருப்பவர்களும் மட்டுமே தாங்கள் விரும்பிய வேளைகளில் வவுனியாவிலிருந்து நாட்டின் தென் பகுதிக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ செல்ல முடியும்.

"வவுனியா மட்டும்" என்ற நிபந்தனையுடன் கூடிய மூன்று மாத கால பாஸ் வைத்திருப்பவர்களும் ஒரு மாதம் இரண்டு வாரம் பாஸ் வைத்திருப்பவர்களும் வவுனியாவிலிருந்து வெளியே செல்ல முடியாது. அவ்வாறு செல்ல வேண்டுமானால், மீண்டும் பொலிஸாரை முழுமையாகத் திருத்திப்படுத்தக் கூடிய காரணத்தைத் தெரிவித்து அதனை உறுதிபடுத்தக் கூடிய அதிகார பூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இவையாவும் விசாரணையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் வவுனியாவில் நிரந்தர வதிவிட பாஸ் வைத்திருப்பவர், பிணை நிற்க வேண்டும். அப்போது தான் தற்காலிக பாஸ் வைத்திருப்பவர் தனது பிரயாணத்தை மேற்கொள்வதற்குரிய பொலிஸாரின் அனுமதியை பெற முடியும்.

பிரயாணத்துக்குரிய காரணம் ஏற்கப்பட்டு பிணையாளியும் உறுதியான பின்னர் ஒரு வார காலம் சென்ற பின்னர் தான் பிரயாணத்துக்கான அனுமதி வழங்கப்படுகிறது.

இவ்வாறு அனுமதி வழங்கப்படும் போது மூன்று தினங்கள், அல்லது ஏழு தினங்கள் மட்டுமே வவுனியாவுக்கு வெளியே தங்கியிருக்க அனுமதியளிக்கப்டுகிறது. இக்காலக்கெடு முடிவடையும் போது அல்லது மறுநாள் சம்மந்தப்பட்டவர் திரும்பி வந்து வவுனியா பிரவுன் கம்பனி கட்டிட பொலிஸாரிடம் ஆஜராக வேண்டும். அது வரையிலும் பிணை நிற்பவரின் நிரந்தர பாஸ் பொலிஸாரின் வசமே இருக்கும். இது தான் வவுனியாவின் நடைமுறைச் சட்டம்.

இந்தச் சிக்கல்களுக்கு மத்தியிலேயே மக்கள் இங்கு வாழ்கிறார்கள். வைத்தியத் தேவைகள் மற்றும் அவசர காரியங்கள் என்பவற்றுக்கான பிரயாண அனுமதியை அசாத்தியப் பொறுமையோடும், சகிப்புத் தன்மையோடும் பெற்று பிரயாணத்தை மேற்கொள்கிறார்கள்.

தற்காலிக பாஸ் வைத்திருப்பவர் மரண வீடுகளுக்கு செல்ல வேண்டுமானால் கூட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் விசேட அனுமதிக் கடிதத்தைப் பெற்றால் தான் பிரயாண அனுமதி பெற முடியும். விடுமுறை தினங்களாகவோ அல்லது பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இல்லாவிட்டாலோ அவசர காரியக்காரர்கள் தமது காரியத்தை கைவிட்டு விடவேண்டியது தான். கடந்த 90ம் ஆண்டு காலப்பகுதியில் இந்த பாஸ் நடைமுறை முதல் முதலாக அமுலுக்கு வந்தபோது 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பாஸ் தேவையில்லையென்று கூறப்பட்டது. பின்னர் கடந்த வருடம் முதல் அனைவரும் பாஸ் வைத்திருக்க வேண்டுமென்ற நியதியைப் பொலிஸார் நடைமுறைப்படுத்தினர். இப்பகுதியிலேயே தொடர்ச்சியாக வசித்தவர்கள் பணிபுரிந்த பின்னர் ஓய்வுபெற்றவர்கள் என பலதரப்பட்ட முதியவர்களும் இங்கு புதிதாக வந்த அந்நியர்களாக கருதப்படுவதுபோல முதலில் ஒருவாரகாலத்துக்கும் பின்னர் இரு வாரம், ஒரு மாதம் எனப் படிப்படியாக வழங்கி வவுனியாவுக்குள்ளேயே முடங்கியிருக்குமாறு மட்டுப்படுத்தப்பட்டார்கள்.

இதனால் அவசர காரியங்களான திருமணங்கள், மற்றும் நற்காரியங்களை ஒழுங்கு செய்யவும் நடத்தி வைக்கவும் உறவினர்களின் மரண வீட்டு கிரியைகளின் கலந்துகொள்வும் முடியாமல், பெருங்கஷ்டத்துக்கும் மணவேதனைக்கும் ஆளாகின்றனர் இந்த முதியோர். இந்த நிலையில் அண்மையில் தேசிய அடையாள அட்டைப் போன்ற புகைப்படத்துடன் கூடிய நிரந்தரப் பாஸ் வழங்கும் பணிகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் வவுனியா நகரசபை மண்டபத்திலே மேற்கொண்டனர்.

முறையாக விண்ணப்பித்தவர்களுக்கு பாஸ் கிடைக்கவில்லை. செல்வாக்கு உள்ளவர்களுக்கும். பணம் படைத்தவர்களுக்கும் மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

இராணுவப் புலனாய்வுத் தேவைகளின் நிமித்தம். அவசியமானவர்களுக்கு நிரந்தர பாஸ் வழங்குவதற்குரிய இந் நிபந்தனைகளைப் பாராமல் பாஸ் வழங்கினோம். என்ற சமாதானமும் இராணுவத் தரப்பில் தெரிவிக் கப்பட்டது. முதல் நாளன்று ஆண்கள் பெண்கள் என்று பாராமல் பாஸ் வழங்கப்பட்டது. இளைஞர், வயோதிபர் என்ற பேதமின்றி இடியுண்டு நெரிபட்டு நகர சபை மண்டபத்தினுள்ளே நுழைவதற்கு அலைமோதினார்கள். பலர் பல மணித்தியாலங்கள் காத்திருந்து ஏமாற்றமடைந்தனர்.

இந்நிலையில் 90, 91, 94 ஆகிய ஆண்டு தேர்தல் இடாப்புகளில் வவுனியா பகுதியில் பதிவு பெற்ற பத்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓர் ஒழுங்கு முறையில் பாஸ் வழங்கப்படுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

வன்னிப்பகுதியின் போர் நிலைமைகள் காரணமாக இந்த நிரந்தர பாஸ் வழங்கும் பணிகள் இப்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் அரச ஊழியர்களுக்கு நிரந்தர பாஸ் வழங்கப்படுமென அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள். இதற்குரிய விண்ணப்பப் பத்திரங்களை பெறுவதற்காகவும் அவற்றை நிரப்பி கையளிப்பதற்காகவும் பலரும் அலைமோதிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நாட்டுப் பிரஜைகள் இங்கேயே பிறந்து வளர்ந்து வசித்தவர்கள் தமது சொந்த பிரதேசத்தில் தங்கியிருப்பதற்காக வெளிநாடொன்றில் குடியுரிமை அந்தஸ்தை பெறுவதற்காக அலைமோதுவதைப்போல அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களை இக்கஷ்டங்கள் கேவலமான அவல நிலைகளிலிருந்து காக்கப் போறவர்கள் யாரோ?

*-தம்பு தருநாவுக்கரசு.*

# நீதிமன்றத்திற்குக் கல்லெறிதல்

உயர் நீதிமன்றத்துக்கு கல்லெறியும் பணி ஜே.ஆரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜே.ஆர். அவர்கள் பரிஸ்டர் பரீட்சையில் வெற்றி பெற்ற சட்டத்தரணி. அத்துடன் அவரது தந்தையும் சட்டத்தரணியாவார். கல்லெறிய அது தடையாக இருக்கவில்லை.

கல்லெறிதல் தனியே உயர் நீதிமன்ற நீதியரசர் வீடுகளுக்கு கல்லெறிவதற்கு மட்டும் வரையறுக்கப் படவில்லை. அது அரசியல் கல்லெறிதல் வரைக்கும் ஜே.ஆர். காலத்தில் வளர்ச்சியுற்றது. நீதியரசர் வீடுகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீதியரசர்கள் அனைவரும் ராஜினாமா செய்ததும் ஜே.ஆர் ஆட்சிக் காலத்திலேயே ஆகும்.

இந் நடவடிக்கைகளுக்கு காரணமாயிருந்தது, உயர்நீதிமன்றத்தினால் இந்நாட்டு ஜனநாயக மற்றும் மனித உரிமைகள் பேணப்படுவதைப் பலப் படுத்த எடுத்த முடிவுகளே.

இன்றைய பொ.ஐ.முவினர், அன்று ஐ.தே.க. நடவடிக்கைகளுக்கு எதிராக துணிச்சலாக முன் நின்றனர்.

தற்போது, 1997 ஒகஸ்ட் 19ம் திகதி இரவு ஜனாதிபதி நேரடியாக கேள்வி பதில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உயர் நீதிமன்றத்திற்கு எதிராக முன் வைத்த விடயங்கள் எம்மை கிலேசத்தில் ஆழ்த்தியுள்ளன.

முதலாவதாக கோடிக்கணக்கில் அரச வங்கிகளுக்கு கடன் கொடுக்காதிருக்கும் வர்த்தகர்கள், நீதிமன்றத்தின் உதவியுடன் கடன் கொடுக்காமல் இருக்கின்றனரென்றும், அதனால் இதற்கெதிராக சட்டங்கள் கொண்டு வரப்படும் எனவும் கூறினார்.

இரண்டாவது, சிறிசேனகுரே விடுதலை செய்யப்படுவார் என்பது பற்றி இரண்டு தினங்களுக்கு முன்னரே ஐ.தே.க. அறிந்திருந்தது தொடர்பானது.

இதற்கு முதலும் அரசாங்கத்தின் சில தலைவர்கள் இதற்கு ஒப்பான அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை முடியாதிருப்பதற்கு காரணம் உணர் நீதிமன்றம் அல்ல அரசாங்க அரசியல்வாதிகளாவர் இதனை ஜனாதிபதியும் நன்கு அறிவார்.

மறுபுறம், எந்தவொரு நபருக்கும், உயர்நீதிமன்றம்வரை சென்று தமது சுய கருத்துக்களை முன்வைக்கவும், அதுவரை சுற்றவாளியாக கருதப்படவும் இருக்கும் உரிமையை நாம் ஆரோக்கியமான ஜனநாயக இலட்சணமாக கருதவேண்டும்.

லட்சாதிபதி வர்த்தகர்களின் கடன் தொடர்பான பிரச்சினையில் உயர் நீதிமன்றம் தடையாக கருதப்பட்டு சட்ட திட்டங்கள் கொண்டுவரப்படுமானால், அது 1972இல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட குற்றவியல் நீதி விசாரணை ஆணைக் குழுவைப் போன்று தவறானதாக மாறிவிடும். அதில் குற்றவாளியாகக் கருதப்பட்ட அனைவரும் 71 கிளர்ச்சியாளர்களைப் போலவே, கைது செய்யப் பட்ட வர்த்தகர்களும் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர் என்பதை மனதில் இருத்திக்கொள்ளல் வேண்டும்.

சிறிசேன குரேயை தடுத்து வைத்திருத்தது குற்றமாகும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது, முதலிலேயே தெரிய வந்தது என்பது தேவையற்ற பிரச்சினையை உருவாக்கி கொள்வது போன்றதாகும்.

அச்சம்பவத்தின்போது அரசாங்கம் செயற்பட்டவிதம் எவ்வளவு தூரம் பலவீனமானது என்பதற்கு நல்ல உதாரணங்கள் உண்டு. உயர் நீதிமன்றத்தின் இயல்பு வழக்கறிஞர்களுக்கு உண்டு. அத்துடன் இவ்வாறான ஒரு விடயத்தை கூறுவது மக்கள் உயர்நீதிமன்றத்தின் பால் வைத்திருக்கும் நம்பிக்கையை குலைப்பது போன்றதாகும்.

நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையை பாதுகாப்பதும் பலப்படுத்துவதும் நாட்டின் ஜனநாயகத்தின் இருப்பிற்கு அத்தியாசவசியமானதாகும்.

பொ.ஐ.முவினால் முன்வைக்கப் பட்டுள்ள யாப்பில், நீதிமன்றத்தினை பலவீனப்படுத்தும் விடயங்கள் பல அடங்கியுள்ளன என சட்ட வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். ஜனநாயகம், மனித உரிமை தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் சுயாதீனமான நடவடிக்கைகள், நிகழ்கால ஆட்சியாளர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்க முடியாது, இலங்கையின் ஜனநாயகத்துக்கு ஏற்றதாக அமையாது.

யுக்திய ஆசிரியர்
தலையங்கம்

24-08-97

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறிசேன குரேயின் விவகாரம்:

# மீசையில் ஒட்டாத மண்!

''இந்த நாட்டிலே நீதித்துறை சுதந்திரமாக இயங்குகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு''

முன்னாள் ஐ.தே.க அமைச்சரும், இன்றைய பிரேமதாச மன்றம் என்ற அமைப்பின் தலைவருமான சிறிசேன குரே உயர்நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டதையடுத்து அரசுதரப்பினால் வெளியிடப்பட்ட அறிவிப்பு இது.

'விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறியது போல' என்பார்களே, அது போன்ற ஒரு அறிவிப்புத்தான் இது.

சிறிசேன குரேயை சட்டவிரோதமான முறையில் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருந்த போதெல்லாம், இலங்கையில் நீதி நிலவுகிறதா என்பது, பற்றி கொஞ்சமும் சிந்திக்காத ஒரு அரசாங்கம் விடுதலை செய்யப்பட்ட பின் இவ்வாறு கூறுவதை விட வேடிக்கையான விடயமாக வேறொன்றும் இருக்க முடியாது.

'பாதுகாப்பு செயலாளர் சந்திரானந்த டி சில்வா பொறுப்பற்ற விதத்தில் சட்டவிரோதமான வகையில், போதிய ஆதாரங்கள் எதுவுமின்றி ஒருவரை கைது செய்து தடுப்புக் காவலில் வைக்க முடிவு செய்ததன் மூலம் அவரது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளது மட்டுமல்லாமல் எந்த ஒரு நியாயமான மனிதராலும் ஏற்றுக்கொள்ள முடியாத விதத்தில் நியாயமற்ற ஒரு முடிவை எடுத்துள்ளார்' என்று மிகவும் கடுமையாக தமது தீர்ப்பில் எழுதிய நீதியரசர் அமரசிங்க தமது 48 பக்கத் தீர்ப்பில் ஒரு பாதுகாப்பு செயலாளரின் பொறுப்பு எத்தகையது என்பதையும் வலியுறுத்தித் தெரிவித்துள்ளார்:

*''அவசர கால சட்ட விதிகளின் 17வது சரத்து மூலமாக பாதுகாப்பு செயலாளருக்கு வழங்கியுள்ள அதிகாரமானது, இதுவரை எந்தக் குற்றமும் இழைக்காத, எந்தக் காலத்திலுமே குற்றமெதுவுமே செய்யாத நபர்கள் உள்ளடங்கலான அனைவரது சுயாதீன நடமாட்டம் குறித்தும் கவனம் கொள்வதாக அமைகிறது. இது மிகவும் அதிகபட்சமான ஒரு அதிகாரமாகும். எனவே இத்தகைய பெரும் அதிகாரத்தை மிகமிகப் பொறுப்புணர்வுடனேயே ஒருவர் பயன்படுத்த வேண்டும். பாதுகாப்பு செயலாளரின் நடவடிக்கைகள் சுதந்திரமானதும், பக்கச்சார்பற்றதுமாக அமையும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கின்றது. இதை ஒருவகை பக்தியும் பயமும் கலந்த நம்பிக்கை என்று கொள்ளலாம். எனவே ஒரு செயலாளர் மக்களின் இந்த நம்பிக்கையை, எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் விதத்தில் சுதந்திரமாகவும் சார்பற்றும் நிறைவு செயற்பட வேண்டும்......*

*''எம்முன்னே உள்ள இந்த விவகாரத்தில், என்னுடைய அபிப்பிராயத்தில், பாதுகாப்பு செயலாளர் தனது அதிகாரத்தை, வெறுமனே பொறுப்பற்று இயந்திரப்பாங்கான விதத்தில் தடுப்புக்காவல் உத்தரவில் கையொப்பம் இட்டதன் மூலம் தவறாகப் பயன்படுத்தியுள்ளார். அவரது முடிவு, போதிய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு நியாயமான மனிதரால் எடுக்கப்படும் முடிவாக அமையவில்லை. அவரது முடிவு வெறும் தவறானது மட்டுமல்ல நியாயமற்ற ஒரு தவறுமாகும்''*

நீதியரசரின் இந்தக் கடுமையான வாசகங்களடங்கிய தீர்ப்பு, சிறிசேன குரேயின் 60நாள் தடுப்புக் காவலில் இருந்து அவரை விடுவித்தது மட்டுமல்லாமல் அவருக்கு நஷ்ட ஈடாக ரூபா இரண்டு லட்சமும் செலவுத் தொகையும் செலுத்தப்பட வேண்டுமென்றும் கூறியது. இத்தகைய நஷ்ட ஈடுவழங்கப்பட வேண்டும் என்று கூறும் தீர்ப்பு ஒரு வகையில் முன்னுதாரணமற்ற ஒரு கடுமையான தீர்ப்பு என்பதில் சந்தேகமில்லை.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் இவ்வாறான கடுந் தீர்ப்பொன்றை வழங்குவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. அவர் மீது சுமத்தப்பட்ட எந்தவொரு குற்றச்சாட்டுக்களுக்கும் போதிய ஆதாரத்தை அரச





தரப்பினால் காட்ட முடியாதது மட்டுமல்ல, அவற்றில் பல அவரைக் கைது செய்தபின் அதை நியாயப்படுத்தச் செய்யப்பட்ட சோடனைகளுமாகும் என்பதும் வழக்கு விசாரணையின் போது தெரியவந்தது. *''பொலிஸ் யார் மீதாவது சந்தேகப்படலாம். சில தடயங்கள் தமது சந்தேகம் நியாயமானதெனக் கருத இடமளிப்பதாக நம்பலாம். ஆனால், வெறும் சந்தேகமோ அல்லது நம்பிக்கையோ அல்லது உறுதியான ஒரு அனுமானமோ ஒருவரைக் கைதுசெய்வதற்கான நியாயமான அடிப்படைகளைத் தரும் என்று கருதுவது கைது செய்யப்போதுமானதல்ல''* என்று கூறுகிறது உயர் நீதிமன்றத் தீர்ப்பு.

சிறிசேன குரேயை கைது செய்ய உத்தரவிட்டதற்குக் காரணம் சந்திரானந்த டி சில்வாவுக்கு இரகசியப்பொலிசின் தலைவராலும் தேசிய உளவுப் பிரிவுத் தலைவரான பொலிஸ் மா அதிபராலும் வழங்கப்பட்ட தரவுகளின்படி சிறிசேன குரே ஜனாதிபதியை கொலைசெய்யும் சதியில் ஈடுபட்டார் என்பதுவும், அதற்காக சொத்தி உபாலி என்ற 'பாதாள உலக' கொலையாளியின் கோஷ்டியினருடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதுவும் ஆகும். இந்த நோக்கத்திற்காக சொத்தி உபாலி, ஜனாதிபதியின் கொரகொல்லை வீட்டிற்கு அருகில் நிலமொன்றை வாங்கியதாகவும், இதில் சிறிசேன குரேக்கு சம்பந்தமிருந்ததாகவும், கொலைச்சதி முயற்சிக்கு அவை ஆதாரங்களாக உள்ளன என்பதுவும் சந்திரானந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட தகவல்களாகும். ஆனால் இந்தத் தகவல்கள் அனைத்தும் பொய்யெனசிறிசேன குரே வாதிட்டார். சிறிசேன குரேக்கும் சொத்தி உபாலிக்குமான தொடர்பு (பழைய கட்சித் தொடர்புக்கு அப்பால்) எதுவும் நிரூபிக்கப் படவில்லை. (சொத்தி உபாலி ஏற்கெனவே தடுப்புக் காவலில் உள்ளார்) தவிரவும் சொத்தி உபாலி காணிவாங்கியது தொடர்பாகவும் எதுவும் கூற முடியவில்லை. அவர் வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் கொரகொல்லையில் சொத்தி உபாலிக்கு ஒரு காணியை வழங்கினாரா என்ற ஒரு கேள்வியையே விசாரணையின் போது அரச தரப்பால் கேட்கமுடிந்தது. சிறிசேன குரே அமைச்சராக இருந்த போது ஜனாதிபதி இப்பதவிக்கு தெரிவு செய்யப்படவே இல்லை என்பதால், இந்தக் காணி விவகாரம் ஒரு பயனற்ற தகவலாகவே போயிற்று.

சிறிசேன குரே கைது செய்யப்பட்ட போதும் சரி அதற்குப் பிறகும் சரி இந்தக் காரணங்களுக்காகவே கைது செய்யப்பட்டார் என்பது அவருக்குக் கூறப்படவில்லை.

ஜூன் 22ம் திகதிய சண்டே ரைம்ஸ் பத்திரிகையில், 'சிறிசேன குரேக்கும் உபாலி குழுவுக்கும் தொடர்பிருப்பதுபற்றிய சில தகவல்கள் கிடைத்துள்ளன. நாம் தொடர்ந்து விசாரிக்கிறோம்' என்று இரகசிய பொலிஸ் உதவி பொலிஸ் மா அதிபர் சுமணசேகர கூறியதாக வெளிவந்த செய்தி மூலமே தான் கைது செய்யப்பட்டது ஏன் என்பதை சிறிசேன குரே அறிந்து கொண்டதாகக் கூறினார். உண்மையில் 'இன்னமும் விசாரிக்கும் நிலையிலே கைது செய்து ஒருவாரத்தின் பின்னும் இருக்கும் ஒருவரை எப்படி அதற்கு முன் பொலிஸார் கைது செய்ய முடியும் என்ற கேள்வி இங்கே எழுகிறது. நீதிமன்றம் இந்த விவாதத்தை ஏற்றது. போதியளவு ஆதாரமற்ற தகவலையே இரகசிய பொலிஸ் சந்திரானந்த டி சில்வாவுக்கு வழங்கியிருக்கிறது என்பதும், அதை வைத்தே அவர் கைது உத்தரவு பிறப்பித்திருக்கிறார் என்பதுவும் இதன் மூலம் வெளிப்பட்டது.

இதையும் விட நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்த இன்னொரு முக்கிய விடயம், கைது செய்யப்படும் ஒருவருக்கு அவரது கைதுக்கான காரணங்கள், கட்டாயமாக சொல்லப்பட வேண்டும் என்பதாகும். அவரசர கால சட்ட விதிகளின் கீழ், அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் புறக்கணிக்கப்படலாம் என்ற வாதத்தை நிராகரித்த நீதிமன்றம், பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவது அவசியம் என்பது கூறப்பட்டுள்ளது என்று கூறியது. அவசர காலச் சட்டத்தின் கீழ் பிடிவிறாந்து இன்றி கைது செய்யப்படும் ஒருவர் எந்தக் காலதாமதமும் இன்றி ஒரு நீதிவான் முன் நிறுத்தப்பட வேண்டும். அப்படித் தாமதிக்கும் நிலைமைகள் இருப்பினும் கூட, 24 மணி நேரத்திற்கு மேல் அத்தாமதம் நீடிக்கப்படக்கூடாது என்று நீதிமன்றம் அவசரகால சட்டத்தின் 17 பிரிவின் 36ம், 37ம் சரத்துக்களை சுட்டிக்காட்டிக் கூறியது. அத்துடன் *''சந்தேக நபருக்கு கைதுக்கான காரணங்கள் கூறப்படவேண்டும். அதாவது எந்தத் தகவல்களும், ஆவணங்களும் செயலாளருக்கு இப்படி ஒரு முடிவை எடுக்கத் தூண்டியவையோ அவை அனைத்தும் தெரிவிக்கப்பட வேண்டும். வெறும் முடிவுகள் அல்ல''* என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியது.

உண்மையில் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதே இத்தகைய ஒரு தீர்ப்பை யாரும் எதிர்பார்த்திருக்க முடியும். ஏனென்றால் அரசு தரப்பு தான் செய்த செயலை அரும்பாடு பட்டு நியாயப்படுத்த முயன்றதே ஒழிய அதனால் எந்தக் காரணங்களையும் கூற முடியாமலே இருந்தது. இந்தத் தீர்ப்பு வெளிவருவதற்கு ஒரு நாள் முன்பே சிறிசேன குரேயை வாழ்த்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது. இதற்கு நல்ல உதாரணமாகும். (ஆனால் ஜனாதிபதி இதை ஏதோ நீதிபதியினூடாக கசிந்த தகவல் என்பது போல சாடியிருந்தார். உண்மையில் அவர் இப்படி ஒரு தீர்ப்பை எதிர்பார்த்திருக்க மாட்டார் என்பது உண்மையே!)

ஆயினும், அரசினது அவசரகால விதிகளின் கீழான நடவடிக்கைகள் தொடர்பாக நீதிமன்றம் இப்படியான ஒரு போக்கை தொடர்ந்து கடைப்பிடித்து வந்ததாகக் கொள்ள முடியாது. கடந்த ஆட்சிக் காலத்தின் போது நீதிமன்றங்கள் ஒரு வகையில் அரசின் 'பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட' விடயங்களில் 'தலையிடாக் கொள்கை'யையே கடைப்பிடித்து வந்தன.

ஆனால், ஐ.தே.க ஆட்சியின் இறுதிக் காலங்களில் இந்த நிலை மாற்றம் காணத்தொடங்கியிருந்தது. பாதுகாப்பு செயலாளர்களின் நியாயமற்ற முடிவுகளை அது கண்டனம் செய்யவும் தொடங்கியிருந்தது.

இந்தப்போக்கின் ஒரு தொடர்ச்சிதான் சிறிசேன குரே, மீதான இந்தத் தீர்ப்பும். ஆனால், நீதித்துறையில் 'மனித உரிமைகட்கு முன்னுரிமை வழங்கும்' இந்தப் போக்கு முற்றுமுழுதாக வளர்ந்து விட்டதென்று சொல்லமுடியாது. இதன் காரணமாக பாதுகாப்பு வட்டாரங்கள் இன்னமும் அதே பழைய நடைமுறைகளிலிருந்து அதாவது பொறுப்பற்று எதேச்சையாக நடக்கும் போக்கிலிருந்து முற்றாக விடுபட்டுவிடவில்லை. இதுவே சந்திரானந்த டி சில்வாவின் முடிவுக்கும் அடிப்படையாக அமைந்தது என்று சொல்லலாம்.

ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தின் தன்மையைப் பொறுத்தே, அது நாட்டின் பிரதான விடயமாக எதைக் குவியப்படுத்துகிறது என்பதைப் பொறுத்தே நீதித்துறையின் இந்தப் போக்கு தீர்மானிக்கப்படுகிறது. நாட்டின் பாதுகாப்பு எல்லாவற்றையும் விட முக்கியமானது, எனவே அரசைப் பாதுகாப்பது முக்கியமானது; மக்களின் உரிமைகளை அடுத்ததாகப் பார்த்துக்கொள்ளலாம் என்ற போக்கு நீதித்துறையில் ஒரு கோட்பாடாகவே இருந்தது. இது அரசு தலைவரது அபிப்பிராயத்தைப் பொறுத்து மாறுபடக்கூடும். புதிதாகப் பதவிக்கு வந்தபோதிருந்த சந்திரிகா அரசாங்கத்தின் கோட்பாடுகள் இப்போக்கில் தளர்ச்சியை ஏற்படுத்தியதால், அதன் வளர்ச்சியுற்ற ஒரு வடிவமாக இத்தீர்ப்பு நடந்திருக்கிறது.

ஆனால், இன்றைய சந்திரிகா அரசின் போக்கு நீதித்துறையின் இப்போக்கை திரும்பவும் மாற்றக் கூடும் என்று எண்ண வைக்கின்றன. நீதிபதிகளே, தீர்ப்பை முன்கூட்டியே வெளியே கசிய விட்டவர்கள் என்று எச்சரிக்கும் பாணியில் சந்திரிகா தெரிவித்ததை இதன் ஆரம்பம் என்றும் கொள்ளலாம்.

உண்மையில் நடந்தது என்ன?

சிறிசேன குரேயின் இந்தக் கைது ஒன்றும் பாதுகாப்பு அடிப்படையில் ஆனது அல்ல. அது அரசியல் ரீதியானது. சுகததாச உள்ளரங்கில் நடக்கவிருந்த பிரேமதாச மன்றத்தின் கூட்டத்தில் சிறிசேன குரே கலந்து கொள்வதைத் தடைசெய்ய விரும்பிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கையே இது. ஐ.தே.கவும் இதை விரும்பியதால் இது அரசியல் பிரச்சினையாக மாறாமல் சட்டப்பிரச்சினையாக மாறிற்று.

கொழும்பு கெப்பிற்றிப்பொல மாவத்தையில் உள்ள C- 38 இலக்கம் கொண்ட தொடர்மாடி வீடொன்றினை உடைத்து தூசியும் துணிக்கையுமாகப் பாழடைந்திருந்த அந்த அறையை பொலிசாரே சுத்தப்படுத்தி அதனுள் சிறிசேன குரேயை காவல் வைத்தனர். பொலிசார் எவ்வளவுகு அவசர அவசரமாக இந்த விடயத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதற்கு,

→ 17

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிட்ட இராணுவ வெறியாட்டம் கடந்த ஜூலை மாதம் 15ம்திகதி வாழைச்சேனை புதுக்குடியிருப்பில் நடந்தேறியது. இந்நிகழ்வு 90ம்ஆண்டு ஓட்டமாவடி, மீராவோடையில் உள்ள நூற்றுக்கும் அதிகமான தமிழ் குடும்பங்களின் வீடுகள் இராணுவத்தினரால் எரிக்கப்பட்டதையும், அங்கு நடந்த இராணுவ அத்துமீறல்களையும் மீண்டும் ஒரு தடவை நினைவு படுத்திப் பார்க்க வைத்து விட்டது.

### நகர் காவலில் நடந்த பயங்கரம்

சம்பவதினம் இராணுவ ரோந்து நடவடிக்கையின் போது புலிகளின் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியானதைத் தொடர்ந்து இச்சம்பவம் நடைபெற்றது. வாழைச்சேனைப் பகுதியில் இராணுவமும் பொலிசாரும் பொது மக்கள் மீதான வன்முறைகளில் ஈடுபடுவது வழமையாக இருந்தாலும் இந்தளவுக்கு பாரிய பயங்கர அழிவுகளை யாரும் எதிர்பார்க்கவில்லை.




மதன்

வாழைச்சேனை பொது நூலகக் கட்டிடத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் துறைமுக இராணுவத்தினரே இவ்வாறான நாசகார வேலையில் ஈடுபட்டவர்கள். இவர்களுடன் ஊர்காவல் படையில் இருந்து பிரிந்து இரா ணுவத்துடன் சேர்ந்துள்ள சிலரும் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தாகத் தெரிய வருகிறது. இவர்களுள் 'துக்கானின்' மகன் முக்கியமானவர். துக்கான் ஆரம்ப காலகட்ட ஊர்காவற் படை உறுப்பினர். அண்மையில் வாழைச்சேனை சந்தையில் கைக் குண்டை எறிந்து பரபரப்பை ஏற்படுத்தியவன். அதன் பின் இவனுக்கென்ன நடந்தது என்று இதுவரைக்கும் யாருக்கும் தெரியவில்லை. தற்பொழுது துக்கான் இல்லாத இடத்தை நிரப்புவதற்கு துக்கானின் மகன் இராணுவத்துடன் சேர்ந்து இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றான்.

இச்சம்பவத்தில் 34 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் 131வீடுகள் வேலிகள், பக்கக் கொட்டில்கள் தீக்கிரையாக்கப் பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிள்கள், தொலைக் காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் துப்பாக்கிச் சூட்டினால் சேதமாக்கப் பட்டிருக்கின்றன. சில வீடுகளில் பெறுமதியான பொருட்கள், நகை கள், பணம் என்பன சூறையாடப் பட்ட பின்பே வீடுகள் சேதமாக்கப் பட்டிருக்கின்றன. தாக்குதல் சத்தம் கேட்டதுமே மக்கள் வீடுகளை விட்டு விட்டு அயற்கிராமத்துக்கு வெளி யேறிச் சென்று விட்டனர். படை யினர் வீடு வீடாகச் சென்று ஆட்க ளைத் தேடிய போது அனேகமா னவர்கள் வீடுகளில் இருக்கவில்லை. இவ்வாறு இவர்கள் சென்ற வேளையில் இவர்களின் கைகளில் அகப்பட்டவர் மின்சாரசபை ஊழியரான கே. சங்கரமூர்த்தியே. தீப்பந்தத்துடனும் ஆயுதங்களுட னும் வந்தவர்களில் ஒருவன் சங்கரமூர்த்தியைக் கண்டவுடன் கூரிய கிறிஸ் கத்தியை அவரின் வயிற்றில் குத்தி இழுத்தான். இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. வயோதிபர்கள் கூட இவர்களால் தாக்கப்பட்டு சப்பாத்துக் கால்களினால் மிதிக்கப் பட்டுள்ளனர். இர்ாணுவத்தினரின் வெறியாட்டம் முடிந்து வெளி யேறும்போது புதுக்குடியிருப்பு கிராமம் சுடுகாடு போலவே தோற்ற மளித்திருக்கிறது. இராணுவம் எந்த நேரத்திலும் இது போன்ற வன்முறையில் மீளவும இறங்கலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் இன்றும் நிலவுகின்றது.

இப்பகுதிகளில் கால்நடையாக ரோந்து செல்லும் போது இருமருங்கிலும் மக்கள் வசிக்கின்றனர் என்று தெரிந்து கொண்டும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் விசமம் புரிகின்றவர்களிடம் உயிரின் பெறுமதியை எப்படி எதிர்பார்க்க முடியும்?

வாழைச்சேனை ஆற்றுக்கப்பால் இருந்து புலிகள் ஏவுகின்ற எறிகணைகள் குறிதவறாமல், முகாம்களில் விழுகின்றன. ஆனால், இராணுவத்தினர் ஏவுகின்ற எறி கணைகள் அப்பாவிப் பொது மக்களின் வீடுகளிலேயே விழுந்து வெடிக்கின்றன.

இவை ஒரு புறம் இருக்க வாழைச்சேனை துறைமுக இராணுவத்தினர் இரவு நேரங்களில் வாவியை நோக்கி எறிகணைகளை ஏவிவருகின்றனர். வாவியூடாகவே விடுதலைப் புலிகள் வாழைச்சேனைக்கு வந்து செல்லக் கூடும் என்பது இராணுவத்தின் சந்தேகம். இரவு முழுக்க கேட்கின்ற எறிகணைச் சத்தங்களால் மக்கள் தூங்க முடியாமல், கதிகலங்கி நிற்கின்றனர். இராணுவம் ஏவுகின்ற எறிகணைகள் பெரும்பாலும் வாவியில் சென்று விழுவதில்லை. வாவிக்கு அப்பாலுள்ள நாசிவன் தீவில் தான் விழுந்து வெடிக்கின்றது. இதனால், நாசிவன் தீவில் வசித்த பெரும்பாலான மக்கள் எறிகணைக்குப் பயந்து இடம்பெயர்ந்தே வ.ாழ்கின்றனர். இந்நிலைமைகளை ஓட்டு மொத்தமாகப் பார்க்கப் போனால், வாவிக்கு அப்பால் பாரிய விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் புலிகள் அடுத்த கட்டமாக வாழைச்சேனையை தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள் என்பதையேப் புலப்படுத்துகின்றது. புலிகளின் ஊடுருவலையும், அரசியல் நிலைப் படுத்தலையும் இராணுவம் கட்டுப் படுத்த முடியாது தவிக்கின்றது என்பதே உண்மை.

### தொடரும் அற்புதங்கள்

புதுக்குடியிருப்பில் வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவம் நடந்த இரு வாரத்துக்குள் மீளவும் கடந்த ஜூலை 20ம்திகதி தியவெட்டுவான் காவலரண் மீது புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து மயிலங்கரைச்சி கிராமத்தில் இரு கடைகள் உட்பட 13 வீடுகள் எரிக்கப்பட்டன. இவர் களின் உடைமைகள் முற்றாக எரிக்கப் பட்டதனால், இவர்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

### யாருமில்லாத மக்கள்

வாழைச்சேனையிலிருந்து நாசிவன் தீவுக்கு சென்ற பஸ்வண்டியையே புலிகள் தாக்குதலுக்குப் பயன் படுத்தியதால், வெருகல், நாசிவன் தீவு போன்ற இடங்களுக்கான பஸ்போக்குவரத்து இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தீவைப்பு சம்பவங்கள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தும் யாரும் இது தொடர்பாக கவனம் செலுத்திய தாகத் தெரியவில்லை. இராணுவ உயர் மட்டங்களும் கூட, பெரியதாக இது பற்றி அலட்டிக் கொள்ள வில்லை.

வாழைச்சேனைப் பிரதேசம் 30 கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டது. இதில் பத்து பிரிவுகள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ளன. இந்தப் பத்துப் பிரிவிலும் உள்ள 3,300 குடும்பங்கள் 90ம் ஆண்டு வன்செயலின் போது இடம்பெயர்ந்து அகதிகளாக கடந்த 6 வருடங்களாக பேத்தாளை, கல்மடு அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றார்கள். இராணு வத்தினர் திடீர் திடீரென இவ்வகதி முகாம்களைச் சுற்றி வளைத்து இளைஞர்களை கைது செய்வதா லும், அடித்து ஆக்கினைகள் செய்வ தாலும், இவ்வகதிகளின் வாழ்வு பெரும் திண்டாட்டமாகியுள்ளது.

### புதிய நோய்

வாழைச்சேனைப் பகுதிகளிலும் மேற்படி அகதி முகாம்களிலும் புதிதாக ஒரு நோய் இனங் காணப்பட்டுள்ளது. சிலரது உடம்பில் கொப்பளிப்பான் மாதிரி கொப்பளங்கள் தோன்றுகின்றன. இக்கொப்பளங்கள் உள்ளவர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய போது எறிகணைகள் வெடித்து சிதறுகின்ற வேளையில் ஏற்படும் இரும்புதுகள்கள் தசையினுள் புகுவதனாலேயே இவ்வாறான கொப்பளங்கள் உருவாகின்றன என வைத்தியர்கள் கூறுகின்றனர். இராணுவக் கட்டுப்பாடில்லாத ஏனைய 20 கிராம சேவர்கள் பிரிவில் வசிப்பவர்களில் 70%மக்கள் விவசாயத்தையும், ஏனைய 25% மக்கள் மீன்பிடியையும் நம்பி வாழ்பவர்கள். ஆனால், இந்த 95% மக்களும் தமது தொழிலை செய்து குடும்பம் நடத்த முடியாத நிலையில் உள்ளனர். இரவிலோ பகலிலோ மீன்பிடிப்பதை இராணுவம் முற்றாக தடைசெய்துள்ளது. இதனைமீறி மீன் பிடிக்கச் செல்பவர்கள் நையப் புடைக்கப்படுவதோடு மீனும் பறிமுதல் செய்யப்படுகிறது.

விவசாயத்தில் ஈடுபடுகின்றவர்கள் ஆற்றுக்கப்பாலே விவசாயத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது ஆனால் இராணுவத்தினர் அப் பகுதிக்கு செல்வதற்கு தடை விதித துள்ளனர். அது மட்டுமல்லா மல் விவசாயம் செய்வதற்கு தேவையான இரசாயன பொருட் களுக்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது.

### பயிர் செய்யவும் தடை

அகதி முகாம்களில் இருக்கும் வடமுனை, ஊற்றுச்சேனை, முறுத்தானை, கோராவெளி பகுதி மக்கள் தமது பகுதிகளுக்குச் சென்று சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். ஆனால் இராணுவத்தால் ஏவப்படும் எறிகணைகள் சேனை செய்யும் இடங்களில் விழுந்து வெடித்து சிதறுவதனால், பயிர்கள் அழிந்து போவதுடன் மீண்டும் பயிர் செய்ய முடியாத நிலையே உருவாகின்றது.

### பாதையும் தடை

வாழைச்சேனை நகருக்கு செல்வதற்கான நேர்வழிப்பாதை 96ம் ஆண்டு முதல் தடை செய்யப் பட்டுள்ளது. வாகனங்கள் செல்வதற்கு சுற்றுப்பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டது. அண்மையில் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் புலிகளால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுப் பாதையால் வாகனங்கள் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், நகருக்கு எட்டு கிலோ மீற்றர் தூரம் நடந்தே செல்லவேண்டியுள்ளது. இது இவ்வாறிருக்க வாழைச்சேனை நகரிலிருந்து வைத்தியசாலைக்கு வரவேண்டியவர்கள் ஓட்ட மாவடியினூடாகவே வரவேண்டி யுள்ளது. இருந்தும், இரவு வேளை களில் பாதுகாப்பு காரணம் கருதி ஓட்டமாவடியினூடாகவும் வர முடியாது. இந்நிலையில் இரவு நேர வைத்தியத்திற்காக போராடிய நோயாளிகள் இறந்த சம்பவங்களும் இங்குண்டு.

1997 ஜனவரி முதல் இதுவரை வாழைச்சேனை பகுதியில் சேதமாக்கப்பட்ட மொத்த வீடுகள் 96. (131பகுதி சேதமான வீடுகளைத் தவிர்த்து)

மொத்த கடைகள் 27. அரசாங்கக்கட்டிடம் 3. (ஷெல் தாக்குதலினால்)

இந்து கோயில் 2. (ஷெல் தாக்குதலினால்)

அங்கவீனர்களும் காயமடைந்தவர்களும் 112.

இறந்தவர்கள் 55.

கைது செய்து காணாமல் போனவர்கள் 4.

## தலை கீழாகத் தொங்கும் சங்கிலியன்

யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியன் தற்போது தலை கீழாகத்தொங்குகிறார். கடந்த ரிவிரச -2 இராணுவ நடவடிக்கையின் போது சங்கிலினின் சிலையும் இராணுவத்தினரால் உடைத்தெறியப்பட்டது. சங்கிலியனின் சிலை உடைக்கப்பட்டதற்குதான் மிகவும் மனம் வருந்துவதாகவும் இறுதி வரை பிரிட்டிஷ் சாம்ராச்சியத்திற்கு எதிராகப் போராடிய சங்கிலியனுக்குத்தான் தலை வணங்குவதாகவும் யாழ். மாவட்ட இராணுவப்பொறுப்பதிகாரி கூறியதாக உதயன் பத்திரிகையின் வார வெளியீடான சஞ்சீவியில் செய்தி வெளி வந்தது. சங்கிலியனின் சிலையை புனரமைப்பதற்கு மூன்று லட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் உடனடியாக இவ்வளவு பெரிய தொகையை தமது நிதியிலிருந்து ஒதுக்க முடியாதுள்ளதாகவும் பிரிகேடியர் கூறியதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நீர்வேலியில் புலிகள் அமைத்திருந்த மாவீரர்களின் நினைவுச் சின்னம் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் ரிவிரச இராணுவ நடவடிக்கையில் களப்பலியான இராணுவ வீரர்களுக்கு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் புலிகளால் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் பெயர்களும் பொறிக்கப் பட்டுள்ளன. இதற்கு எங்கிருந்து நிதி கிடைத்தது. இராணுவத்திடமிருந்தா, வெண்தாமரை இயக்கத்திடமிருந்தா, அல்லது பாதுகாப்பு நிதியிலிருந்தா, அல்லது ஜனாதிபதியிடமிருந்தா யாரிடமிருந்து இதற்குரிய நிதி உடனடியாகக் கிடைத்தது.

பரமர்

## உரிமை வழக்கு

யாழ்ப்பாணக்குடாநாட்டில் குற்றச் செயல்களான கொலை, களவு, பாலியல் வல்லுறவு போன்ற சம்பவங்கள் மட்டுமல்ல, காணி எல்லைச் சண்டை, பெண் கடத்தல், விவாகரத்து, ஜீவனாம்சம், என்பவற்றுடனும் ஆலயங்களுக்கு உரிமை கோரும் பிரச்சினையும் எழுந்துள்ளது.

கரவெட்டி யார்க்கரு விநாயகர் ஆலயம், நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம் இரண்டுக்கும் உரிமைகோரி யாழ் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு இரு குருமார்கள் உரிமை கோரியுள்ளனர். பழையபடி யாழ்ப் பாணத்தில் இவ்வாறான வழக்குகள் நீதிமன்றத்துக்கு வருகின்றன.

பொலிசார் சட்டத்தரணிகளுக்கு நல்ல காலம் பிறந்துள்ளது. அதுவும் புலிகளின் நீதிமன்றங்களில் நடைபெற்ற வழக்குகளும் இங்கு வருகின்றன.

பருத்தித்துறை, மல்லாகம், யாழ்ப்பாணம், ஊர்காவற்படை, சாவகச்சேரி நீதிமன்ற வழக்குகள் எல்லாம் யாழ். நீதிமன்றத்திலேயே விசாரிக்ளகப்படுகின்றன. காரணம் யாழ் நீதிமன்றம் வசதி, பாதுகாப்பு. அத்துடன் அருகில் மறியல் சாலை இருப்பதனாலுமாகும்.

ரூபன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தீர்வுத்திட்டம்: அப்படியொன்று இருந்தால்தானே!

*சர்வதேச இஸ்லாமிய இளைஞர் முன்னணி, யூலை மாதம் 13ம் திகதி கொழும்பு மிகுந்து மாவத்தையில் நடாத்திய "இனப்பிரச்சினையும் தீர்வுத்திட்டமும்" என்னும் கருத்தரங்கில் நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்ரமபாகு கருணாரத்ன ஆற்றிய உரையின் சுருக்க வடிவம் இது. இக் கருத்தரங்கில் தீர்வுப் பொதியின் உள்ளடக்கம் பற்றியும் தமிழர், முஸ்லிம் மலையக மக்களின் உரிமைகள் குறித்தும் பல்வேறு கருத்துக்கள் பேச்சாளர்களால் முன்வைக்கப்பட்ட போதும் "அப்படியொரு தீர்வுப்பொதி இருந்தாலல்லவா அதைப்பற்றிப் பேசுவதற்கு" எனும் தொனியில், அதனை நிறுவும் வகையில் உரையாற்றினார் விக்ரமபாகு. அவரது உரையடங்கிய ஒலிப்பதிவு நாடாவை எமக்கு கிடைக்கச் செய்த சர்வதேச இளைஞர் முன்னணியின் செயலாளர் நஜிமுதீன் அவர்களுக்கு நன்றி.*



தொகுப்பு : ரத்னா

நாம் இன்று தமிழ் மக்களுக்கு அதிகாரம் வழங்குவது தொடர்பாக கதைத்தோம். அத்துடன் முஸ்லிம் மக்களுக்கு அதிகாரம் வழங்குவது தொடர்பாக கதைத்தோம். இதனால் ஏற்படும் உரிமைப்பிரச்சினை பற்றியும் கதைத்தோம். அதிகாரங்களை தமிழ் மக்களின் தாயகத்துக்கு வழங்குவதன் மூலம் மட்டும் ஏனைய பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்றில்லை. தீர்வுக்கான முயற்சிகளை மேலும் மேலும் முன்னெடுக்க வேண்டும் என்பதை முஸ்லிம் மக்களும் அறிவர். கார் ஒன்றிற்கு எஞ்சினைப் பூட்டிவிட்டு ஸ்டார்ட் செய்தவுடன் பிரச்சினை தீர்ந்துவிடும் என்றில்லை. பிரதான பிரச்சினை தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை வழங்குவதாகும். அதுபோலவே முஸ்லிம் மக்களின் உரிமை குறித்தும் கூடுதலான அக்கறை செலுத்துவது அவசியம். 1989ல் தொண்டமான் நாடு முழுவதும் அலைந்து திரிந்து நான்கு சித்தாந்தங்களினால், இந்தப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றார். தமிழர்களின் தாயகத்தை ஏற்றுக்கொண்டு அதிகாரங்களை வழங்கல், அவ்வதிகாரம் மிக பரந்ததாக இருத்தல், முஸ்லிம் மக்களுக்கு உபபிராந்தியம் வழங்கல், அப்பகுதிகளில் சிறுபான்மையாக இருக்கும் சிங்களவருக்கு, தமிழ் முஸ்லிம் மக்களைப்போல் அனைத்து சம உரிமைகளும் கிடைத்தல்.

### திட்டம் இருக்கிறதா?

நாம் இவை பற்றி ஓயாது கதைத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது நாங்கள் பொதி என்ற ஒன்றைப்பற்றி கத்திக்கொண்டு இருக்கிறோம். ஆனால் முதலில் அரசாங்கம் தீர்வு என்ற ஒன்றை வைத்தால் அல்லவா மேற்கொண்டு கதைக்க முடியும். தீர்வுத்திட்டம் நல்லதா, கூடாதா என அலசுவதற்கு முன் அப்படி ஒன்று இருக்கின்றதா என எமக்குள் கேட்டுக்கொள்வோம். இல்லாத ஒரு விடயத்தைப்பற்றி ஆராய்ந்து அலசுவதில் பிரயோசனமில்லை. இந்த அரசாங்கம் எதைக்கூறிக்கொண்டு ஆட்சிபீடம் ஏறியது. நிலாவிலிருந்து அரிசி கொண்டு வருவேன் எனக் கூறவில்லை. அதற்காக சந்திரிகாவை நான் மதிக்கிறேன். ஒரு ராத்தல் மா எட்டு ரூபாய்க்கு தருவேன் எனக் கூறவில்லை. நான் நாடு முழுவதும் சென்று சிங்கள இராணுவத்தை மீட்டுக்கொண்டு வந்து தமிழர்களுக்கு நியாயமான தீர்வை வழங்குவேன். ஏகாதிபத்தியவாதிகளின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு தைரியமாக முகம் கொடுப்பேன் என சந்திரிகா கூறினார். இவ்வாறு கூறியவுடன் இனவாதிகள் சந்திரிகாவை 'இலட்சுமி' என நாடுமுழுவதிலும் பிரச்சாரம் செய்து அவரது படங்களுக்கு பொட்டு வைத்தனர். தேர்தல் காலத்தில் பலரும் இனவாதம் கதைத்தனர். ஆனால் சந்திரிகா இனவாதம் கதைக்க வில்லை. தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு வழங்குவேன் எனக்கூறினார். அதற்காக மக்கள் நிலாவிலிருந்து அரிசி கொண்டு வா என்று கூடகூற வில்லை. மா எட்டு ரூபாய்க்கு கேட்கவும் இல்லை. தமிழர் பிரச்சினையைத் தீர்த்து, யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவேன் என்ற ஒரே காரணத்துக்காக 65% வாக்குகளை அவருக்கு மக்கள் வழங்கினர். இது முக்கியமான வாக்குத்தொகை. மக்கள், சிங்கள இனவாதிகளை விலாசம் தெரியாதளவிற்கு தோல்வியுறச் செய்த தேர்தல் அது. தேர்தலுக்குப் பின் அவர்களது விலாசத்தைக்கூட கூற முடியாதுள்ளது. தமிழ் முஸ்லிம் மக்கள் அனைவரும் வேறுபாடின்றி 'லட்சுமிக்கு' ஆதரவு நல்கினர்.

### மக்கள் தீர்வை எதிர்க்கின்றனரா?

ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. தீர்வு இருக்கின்றதா? இன்னும் தீர்வு வந்தபாடில்லை. ஏன் இன்னும் தீர்வு வரவில்லை. தீர்வுக்கெதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா? இல்லையே. தீர்வுக்கெதிராக மக்கள் எதிர்ப்பு ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்கின்றனரா? இல்லையே.

1956போல் தீர்வு வழங்க வேண்டாம் என ஜே.ஆர். ஊர்வலம் போனதைப் போல் போகின்றனரா? இல்லை. 1966 டட்லிக்கெதிராக ஊர்வலம் சென்றது போல் இதற்கும் எதிர்ப்புச் காட்டுகின்றனரா? இல்லை. 1988ல் மாகாண சபைக்கெதிரானது போன்று எதிர்ப்பு உள்ளதா? இல்லை. ஓரிருவரைத் தவிர இனவாதிகளின் குரலையே கேட்கக்கூட முடிவதில்லை.

எதிர்ப்புகாட்ட வீதியில் இறங்க ஆட்களும் இல்லை. இறங்கினால் எலும்பு உடைக்கவும் இப்போது ஆட்கள் உள்ளனர். அவ்வாறெனில் ஏன் தீர்வை முன்வைக்காமல் உள்ளது அரசு. மூன்று வருட காலமாக ஒன்றையும் காணவில்லை., இப்போது எமக்கு சொல்லப்படுகிறது யுத்தமும் செய்வதாக. புலிகளுக்கு யுத்தம் தான் வேண்டும். சமாதானம் தேவையில்லை. புலிகளுக்கு யுத்தம் தான் வேண்டும் என்றால் அவர்களுக்கு தேவையான யுத்தத்தை நீங்கள் ஏன் கொடுக்கிறீர்கள். புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்கின்றோம் என்கின்றனர். சமாதானம் எமக்கு வேண்டும் எனில், நாம் யுத்தம் செய்யாதிருக்க வேண்டும். யாப்பை மாற்றியெழுத வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் புலிகள் யுத்தம் செய்ய காரணம் இல்லாது போகும்.

### தமிழர்களுக்கு பொலிஸ் இராணுவம் தேவை

தமிழர்களுக்கென அவர்கள், பொலிஸ் இராணுவம் படைகளை நியமிக்கட்டும். ரெஜிமெண்டுகளுக்கு தமிழ் முஸ்லிம் பெயர் வைக்கலாமே. சங்கிலியன், ராமநாதன் சித்திலெப்பை என்றவாறு. இந்தியாவில் இவ்வாறே ரெஜிமெண்டுகளுக்கு பெயர் வைத்துள்ளனர். இங்கிலாந்திலும் கூட ஸ்கொட்லாந்து ரெஜிமெண்ட், வேல்ஸ் ரெஜிமெண்ட் என பெயர் வைத்துள்ளனர். அது அவரவரது சம்பிரதாயங்களுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ரெஜிமெண்டை அமைத்தோ அல்லது வேறு முறையிலோ தீர்வை வழங்குவர் என எதிர்பார்த்தே காத்திருக்கிறோம். ஆனால் அப்படியாயின், ஏன் நாம் புலிகளுக்கு தேவையான யுத்தத்தையே செய்து கொண்டிருக்க வேண்டும். இந்தியா, அமெரிக்க, இங்கிலாந்து ஆகிய நாடுகளிடம் பெருந்தொகை கடன் பட்டு, கோடிக்கணக்கான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து புலிகளுக்கு தேவையான யுத்தம் செய்கின்றோம். 26கிலோ மீற்றருக்குச் சென்று தாக்கக்கூடிய ஆயுதங்களை வாங்கி வாங்கி குவிக்கின்றோம்.

### தாக்கப்படுவது புலிகள் தானா?

புலிகளைத் தாக்குகின்றோம் எனக் கூறுகின்றனர். சரியாக புலிகளையா தாக்குகின்றனர். புலிகளை தனித்து துல்லியமாக அடையாளம் காண முடிகின்றதா? ஆயுதங்கள் ஐம்பதாயிரம் அடிக்கு மேல் இருந்து தாக்குகின்றது. அவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கும் போது மக்கள் நுளம்புகளைப்போன்றே தெரிகின்றனர். புலிகள் தெரிகின்றனரா? இல்லை. ஆனால், காட்டுப்புலி, செடி, மரம், கொடி அனைத்தும் சரி. அங்கு ஒரு தமிழ் அல்லது முஸ்லிம் நபர் கூட இல்லையென்று கூற முடியுமா? அல்லது எல்லாப் புலிகளும் தான் இறந்து விடுகின்றனரா?

தமது தாயகத்துக்கெதிராக சிங்கள பௌத்த, தமிழ் பேசத்தெரியாதவர்கள் வந்து தாக்கும் போது சும்மா இருப்பதா என அங்குள்ள இளைஞர்களை ஆவேசப்படுத்தி பிரபாகரன் தான் ஒருவர் தான் தலைமைத்துவத்தை ஏற்று போரிட தகுந்தவன் எனக்கூறிக்கொண்டு யுத்தம் செய்கிறார். மாறாக, புலிகள் தோல்வி அடைய பிரபாகரன் வெற்றி பெறுகிறார். பிரபாகரனை தோல்வியடையச் செய்யும் யுத்தம் அல்ல இது. அரசியல் ரீதியாக பலம் அடையச் செய்யும், வீரனாகச் செய்யும் யுத்தம் இது. பிறரிடம் கடன் பட்டு நாம் நம் நாட்டு மக்களில் ஒரு பகுதியினரை அழித்துக்கொண்டிருக்கிறோம். 'மேடம்' தீர்வுத்திட்டம் தருவீர்களா? தீர்வு தருவதில் ஏதேனும் பிரச்சினைகள் உண்டா என வினவும் போது ''நாம் என்ன செய்வது. ஐ.தே.க ஆதரவு தருகிறதில்லையே'' என்கின்றார். ஐ.தே.க சொல்வதைக்கேட்கவா நாம் இவர்களை நியமித்தோம். ரணில் பட்டலந்தவில் கொலை செய்துள்ளார் எனக்கூறிக்கொள்கின்றனர். கொலை செய்த கட்சியிடமிருந்தா நாம் ஜனநாயக ஆதரவு கோருவது? ஐ.தே.கவை எதிர்பார்த்தா உங்களுக்கு வாக்களித்தோம்? தாம் கொண்டு வந்த மாகாண சபையையே அமுல்படுத்த முடியாத, முதுகெலும்பில்லாத ஐ.தே.கவை விலக்கி விட்டு உங்களுக்கு ஆதரவு அளித்தது யுத்தம் முடிவடைந்து தீர்வு கிட்டும் என்னும் நம்பிக்கையில் தானே.

### யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்

யுத்தம் முடிந்து தீர்வு வழங்கும் போது யாப்பை மீளவும் தயாரிக்க வேண்டும். அதில் முஸ்லிம் மலையக மக்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். முக்கியமாக யுத்தத்தை நிறுத்துவதற்கு தமிழர்களின் தேசியத்தை ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்க வேண்டும். வேறு எந்த முறையிலும் அது சரிவராது. இந்தியா பல இன மக்கள் வாழும் நாடு. அவர்கள் ஐக்கியமாக இல்லையா? மிக சிறிய நாடான சுவிஸ்ஸில் கூட அதிகாரப் பரவலாக்கம் தான் சாத்தியப்பட்டுள்ளது.

### பதவிக்கு வர முன்னர் ஏன் கூறவில்லை?

ஐ.தே.க ஆதரவு வேண்டும் என இவர்கள் பதவிக்கு வருமுன்னர் கூறவில்லையே. இவர்களுக்கு 65% மான ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. பரம்பரையாக ஐ.தே.கவுக்கு வாக்குப்போடுபவர்களைத் தவிர அனைவரும் உங்களுக்கு வாக்கு அளித்தனர். ஆனால் இப்போது என்ன நடந்துள்ளது. ஜயசிக்குறு நடந்து கொண்டிருக்கிறது. இதில் சுமார் 1500 சிங்கள இளைஞர்கள் இறந்துவிட்டனர். நான் இருக்கும் யட்டிநுவர பிரதேசத்தில் என் வீட்டைச் சுற்றி ஐந்து மரணங்கள். அப்பாவி ஏழை இளைஞர்களே அதிகம் இறந்துள்ளனர். இராணுவத்தில் இப்போது மார்சல் லோ. தப்பியோடும் இராணுவத்தினரைப் பிடித்து வர அரும்பாடுபடுகின்றனர். இராணுவத்தில் சேராதோரையும் பிடிக்க அரும்பாடு படுகின்றனர். அவர்களோ ஓடி ஓடி ஒளிகின்றனர். இந்த அப்பாவி இளைஞர், யுவதிகள் என்னிடம் உதவிகேட்டு வருகின்றனர். இராணுவத்தில் இல்லாத நபர்களது பெயர்களை எடுத்துக் கொண்டு படையினர் வருகின்றனர். இவர்கள் கோட்மார்சல் செய்ய ஏழை இளைஞர் யுவதிகள் துன்பப் படுகின்றனர். இதில் அப்பாவி பொலிசாரும் அடக்கம்.

பொலிசில் சேருபவர்களை யுத்தம் செய்ய அழைத்துச் செல்கின்றனர். பொலிசார் குற்றச்செயல்களைத் தடுக்கவே இருக்கின்றனர். மாறாக யுத்தம் செய்யவல்ல. இதையா நாம் ஜனாதிபதியிடம் எதிர்பார்த்தோம்?

ஜே.ஆர். ஆட்சிக்காலத்தில் எட்டு பொலிஸ் கூடுகளிலும் நான்கு சிறைச்சாலைகளிலும் அடைபட்டுக்கிடந்தேன். ஒரு வருடம் தலை மறைவாக வாழ்ந்து வந்தேன். அவர்கள் முன்வைத்த மொழி உரிமை, சம உரிமை, மாகாண சபை, மலையக மக்கள் உரிமை என்பன தொடர்பாக தீவிரமாக பேசிவந்தோம். அதற்காக இனவாதிகள் என் வீட்டைக்கொளுத்த வந்தனர். சிறுபான்மையினரின் உரிமைக்காக பரிந்து பேசியதற்காக பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேற்றினர். நான் பட்ட கஷ்டங்கள் அவை.

மேடம் என்ன சொல்கிறார்? இன்னும் ஒன்றும் இல்லை.

மாகாண சபையைஅமுல்படுத்தும்படி ஜனாதிபதியிடம் ஈ.பி.டி.பி. கோரியுள்ளது. இப்பொழுது இனவாதிகள் அனைவரும் அமைச்சரவைக்குள்ளும், அலரிமாளிகையிலுமே இருக்கின்றனர். வீதியில் அல்ல. தீர்வுக்கெதிராகவும் இவர்கள் உள்ளார்கள். அதனால் அமைச்சரவைக்குள் கூட ஒருமித்த கருத்துக்கு வந்து விட முடியாது.

### சந்திரிகா வளர்த்த சக்திகள்

தற்போது சந்திரிகா தான் ஸ்ரீ.ல.சு. கட்சியை விட்டு விலகப்போவதாகவும், சந்திரிகாவைக்கொல்ல சதிசெய்வதாகவும் கூறப்படுகின்றது. இனவாத யுத்தவாத சக்திகளைப் பலப்படுத்தி வளர்த்துவிட்டதால் தானே சந்திரிகாவுக்கு அதற்குள் சிறைப்படவேண்டியிருக்கிறது. இதே நிலை பண்டாரநாயக்கா அவர்களுக்கும் நிகழ்ந்தது. அவர் பிலிப் குணர்வர்த்தனவை வெளியேற்றி விட்டு, செல்வநாயகம் உடன்படிக்கையை கிழித்து வீசினார். இறுதியில் வலதுசாரிகளிடம் அகப்பட்டு அச்சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நிலைமையின் கீழ் பயங்கர சதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாடு முழுவதும் பயங்கரமான நிலை.

தீர்வுத்திட்டத்தைப்பற்றிக் கூற சொல்கிறீர்கள். வாசுதேவ நாணயக்கார இதைப்பற்றிக் கூறியிருக்கிறாரா? இல்லை. ஐ.தே.க வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக தெரிகின்றது. ஐ.தே.கவும் ஒன்றும் செய்யப்போவது இல்லை. தான் செய்யவேண்டியதைக் கூட செய்யாத ஜனாதிபதியும் நமக்குத் தேவையில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புகலிடம் தேடியும் புலராப் பொழுதுகள்



''நான் முன்பு எனது நாட்டிலிருந்த சர்வாதிகார அரசுக்கு எதிராகப்போராடினேன். ஆனால் தற்போது இங்கு நெதர்லாந்து அரசுக்கெதிராக எனது போராட்டத்தை தொடரவேண்டியுள்ளது.'' ஓர் அகதி கூறிய மேற்குறிப்பிட்ட வாக்கியத்தை இங்கே மறுப்பவர் யாரும்கிடையாது. அகதிகளுக்காக நியமிக்கப்பட்ட பிரதி அமைச்சர் கூட இதனை ஒரு பேட்டியின்போது ஒத்துக்கொண்டார். சிலருக்கு இச்செய்தி வியப்பை அளிக்கலாம். ஆனால் அது தான் இங்கே யதார்த்தம்.

அகதிகளைக் கட்டுப்படுத்தவும் அதற்காகச்சட்டங்களைஇயற்றவும் தற்போதைய ஒல்லாந்து அரசு ஒருபோதும் தயங்கியதில்லை. இவ்வாறான சட்டங்களை நடைமுறைப்படுத்த அரசினால் விசேடமாக நியமிக்கப்பட்ட பிரதி அமைச்சர் ஸிமிட்ஸ் அவர்கள் தன்னாலான பணிகளைச் செவ்வனே செய்து வருவதுடன் தன்னை இவ்வரசின் நம்பத்தகுந்த பணியாளாக காட்டிக் கொள்கின்றார். அதே நேரம் இவரது பொறுப்பில் உள்ள குடிவரவுத் திணைக்களம் கடும் கண்டனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் செயற்பட்டு வருகின்றது.

உண்மையான அகதிகளை நாடுகடத்தல், பொருளதார/ போலி அகதிகளை அங்கீகரித்து சலுகை வழங்குதல், குறிப்பிட்ட சில நாடுகளை பாதுகாப்பான நாடுகள் என அறிவித்தல் (இலங்கை உட்பட), அந்நாடுகளில் இருந்து வந்த அகதிகளின் விண்ணப்பங்களை எக்காரணமுமின்றி நிராகரித்தல், சர்வதேச சட்டங்களுக்கு முரணாக செயற்படுதல் என இந்த திணைக்களத்தின் அநீதியான செயல்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அகதிகளுக்கான பிரதியமைச்சரின் அரசியல் செல்வாக்கு காரணமாக அண்மையில் உயர்நீதிமன்றம் தமிழ் அகதிகளுக்கெதிராக தீர்ப்பு வழங்கியது. அகதிகளுக்கான ஒல்லாந்து குடிவரவுத் திணைக்களத்தின் பின்னணியை அறிந்த எவரும் இத்தகைய பாரபட்சமான தீர்ப்பை புரிந்து கொள்ள இயலும்.

நெதர்லாந்தினுள் அகதியாக பிரவேசிக்கும் எவரும் இங்குள்ள மூன்று பதிவு நிலையங்களில் ஏதாவது ஒன்றில் தன்னைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். முதலாவது நிலையம் ஸ்கிப்போல் (அம்ஸ்ரடாம்) விமான நிலையத்திலும் மற்றைய இரண்டும் முறையே ஜேர்மனி, பெல்ஜியம் எல்லைகளிலும் அமைந்துள்ளன. இந்தப் பதிவு நிலையங்கள் உண்மையில் தடுப்பு முகாம்களாகவே காட்சி தருகின்றன. கம்பிவேலிகளாலும் உயர்ந்த மதில்களாலும் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாலும் கடும் காவலிடப்பட்ட இந்த நிலையங்களில் புதிதாக வரும் அகதிகளுக்கு விசாரணை நடைபெறும். 24 மணி நேரத்திற்குள் அவர்களை மேற்கொண்டு அகதி முகாமிற்கு அனுப்புவதா அல்லது நாடுகடத்துவதா என தீர்மானிக்கப்படும். அண்மையில் இவ்வாறு பல்கேரியாவில் இருந்து வந்த 15 தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டனர். அகதிகளுக்கான பூர்வாங்க விசாரணைகள் ஒரு கண்துடைப்பு நாடகமாகவே நடைபெறுகின்றன. அதாவது எந்தெந்த நாடுகளில் இருந்து வரும் அகதிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற முடிவுகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டிருக்கும். இந்த குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நாடுகளில் இருந்து வரும் அகதிகளினால் நெதர்லாந்தின் வெளிநாட்டு அரசியலுக்கு சாதகமான பலன்கள் ஏற்படுமெனில் அவர்களுக்கு அகதி அந்தஸ்து அல்லது வதிவிட உரிமை வழங்கப்படும்.. உதாரணமாக முன்பு பொஸ்னியா, தற்போது ஈராக், இலங்கை உட்பட மற்ற நாடுகளைச் சேர்ந்த அகதிகள் தமக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய அகதி அந்தஸ்தைப் பெற கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

முதலாவது விசாரணையின்போதே சில சோதனைகள் ஆரம்பித்து விடும். விண்ணப்பதாரி சொல்வது சரியா என்பதை விசாரணை அதிகாரி மொழிபெயர்ப்பாளர் மூலம் அறிய முனைவார். ''விண்ணப்பதாரி ஏதாவது இடத்தில் பொய் சொன்னால் எனக்கு சமிக்ஞை மூலம் அறிவி'' என ஒரு மொழிபெயர்ப்பாளரிடம் விசாரணை அதிகாரி கூறினாராம். இவ்வாறாக காட்டிக்கொடுக்கும் அல்லது வேண்டுமென்றே பிழையாக மொழிபெயர்க்கும் (அதாவது சொல்லாததைச் சொல்லும்) மொழி பெயர்ப்பாளர்களைப் பற்றி தகவல் தெரிவித்த இன்னொரு மொழி பெயர்ப்பாளர் தொலைபேசி மூலம் மிரட்டப்பட்டார். சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்ட தகவல்களை அண்மையில் பகிரங்கப்படுத்தியது.

விசாரணை அதிகாரி தொடுக்கும் திணறடிக்கும் கேள்விகளுக்கு ஒரு அகதி சரியாக பதில் கூறாவிட்டால், அல்லது போதுமான ஆதாரங்களுடன் தான் அகதி என்பதை நிரூபித்துவிட்டால், அவர் அங்கீகரிக்கப்படுவார் என்பது நிச்சயமல்ல. ஒரு முறை விசாரணைக்குட்படுத்தப்பட்ட ஒரு அகதியின் புலம்பெயர்ந்த கதையில் எந்தவொரு பலவீனமான பகுதியையும் கண்டுபிடிக்க முடியாத விசாரணை அதிகாரி இறுதியில் சொன்னார். ''இவையெல்லாம் உன்னுடைய சொந்தத் தவறுகள். நீயே தேடிக் கொண்ட பிரச்சினைகள். திரும்பிப்போ!'' இவ்வாறான இயந்திரத்தனமான மேலிடத்து கட்டளைகளை மட்டுமே நிறைவேற்றத் தெரிந்த அதிகாரிகளிடம் அகப்பட்ட அகதிகள் தஞ்ச மனு நிராகரிப்பை தவிர வேறெதையும் எதிர்பார்க்க முடியாது. இந்த நிராகரிப்புக் கடிதத்தில் 24 மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டிருக்கும்.

இது தமது மனதில் அவநம்பிக்கையை தோற்றுவிப்பதற்காகவே என்பதை பலர் புரிந்து கொண்டாலும், அந்த 24 மணிநேரத்திற்குள் தேடப்படும் வக்கில்களில் பலர் தமது கடமையை சரிவரச் செய்வதில்லையென்பது பரவலாக எழுந்துள்ள குற்றச்சாட்டு. மேலும் இதன் மூலம் சிறந்த வழக்கறிஞரை தேடிச்செல்லும் சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுகின்றன. அவ்வாறே தஞ்சமனு நிராகிரிப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டாலும் இரண்டாவது அல்லது இறுதி முடிவுகள் குறுகிய காலத்திற்குள் எடுக்கப்படுவதில்லை. இதற்காக வருடக்கணக்காக காத்திருப்பதென்பது இங்கே சர்வசாதாரணம். இந்தக் காலகட்டத்தில் அகதி முகாம்களில் காத்துக் கிடக்கும் அகதிகள் இறுதியில் விரக்தியுற்று நாட்டை விட்டே ஓடிவிடுவர் என அரசு எதிர்பார்க்கின்றது. அரசின் விருப்பத்திற்கேற்ப பலர் நாட்டை விட்டு ஓடுவதுமுண்டு. இந்த நீடிக்கும் காலதாமதத்திற்கெதிராக பல்வேறுபட்ட நிறுவனங்களும் அகதிகளும் ஒன்றிணைந்து கடந்த வருடம் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை பாராளுமன்ற முன்றலில் ஒழுங்கு செய்தனர். ஆனாலும் பலனேதுமில்லை. அரச நிர்வாகம் ஆமை வேகத்தில்தான் நகர்கிறது.

குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த அகதிகளுக்கு அனுப்பப்படும் தஞ்சமனு நிராகரிப்புக் கடிதங்களில் ஒல்லாந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 'அறிக்கை' காரணமாக காட்டப்படுகின்றது. ஒரு நாடு பாதுகாப்பானதா அங்கு அகதிகள் திரும்பிச்செல்லலாமா என்பதையிட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும். இந்த அறிக்கைகள் பெரும்பாலும் சரியான தகவல்களைக் கொண்டிருப்பதில்லை. அது தனது நலன்களுக்கேற்ப அதாவது நெதர்லாந்தின் வெளிவிவகார கொள்கைகளுக்கு உட்பட்டு ஒருபக்கச் சார்பானதாகவே அறிக்கை தயாரிக்கும் என்பதைச் சொல்லத்தேவையில்லை. குடிவரவுத் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கும் சபையின் அங்கத்தவரொருவர் ஒரு பத்திரிகைப் பேட்டியின் போது இவ்வாறு தெரிவித்தார். ''இவையெல்லாம் முன்கூட்டியே செய்யப்பட்ட உடன்படிக்கைகள். குடிவரவுத் திணைக்களத்தின் நோக்கம் என்னவென்பது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்குத் தெரியும். அதற்கேற்பவே அறிக்கையும் தயாரிக்கும்''

இவ்வாறான அநீதியான முடிவுகளால் பாதிக்கப்படும் அகதிகள் இறுதியில் நாடுகடத்தப்படும் நிலைக்குத் தள்ளப்படுவர். இதற்கெனவே நாட்டின் வெவ்வெறு பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுவர். இங்கிருந்தபடியே அவசரகாலக் கடவுச்சீட்டு பெறப்பட்டு அவரது தாயகத்திற்கு திருப்பி அனுப்பப்படுவர். அவ்வாறு திருப்பியனுப்ப முடியாவிட்டால்? தடுத்து வைக்கப்பட்ட நபர் விடுதலையாவார். ஆனால் எந்த வித அனுமதிப்பத்திரமோ அல்லது 'விசாவோ இன்றி நடுத்தெருவில் விடப்படுவார். அத்தோடு சட்ட விரோத குடியேற்றக்காரர் என்ற பட்டமும் சூட்டப்படும். அரசின் இவ்வாறான பொறுப்பற்ற நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக பல உள்ளூராட்சி சபைகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தன. 'சட்டவிரோதமாக' நாட்டில் தலைமறைவு வாழ்க்கை நடத்தும் இவ்வாறான அகதிகளுக்கு பல உள்ளூர் மக்கள் ஆதரவளித்து வருகின்றனர். வைத்தியர்கள் தமது தன்னலங்கருதாத சேவையை வழங்குகின்றனர். இதனைத் தடுக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தன.

வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கும் நெதர்லாந்தின் தவறான புகலிட விதிகள் மற்றும் அகதிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள் என்பன தற்போது பரபரப்பாக பேசப்படும் விடயங்களாகி விட்டன. இவ்வருடங்களின் முன்பு ஐரோப்பிய ஒன்றியத்தினுள் நடைமுறைக்கு வந்த 'செங்கன் ஒப்பந்தம்' மனிதாபிமானமற்ற முறையில் அகதிகளை கட்டுப்படுத்தவே கொண்டு வரப்பட்டதென்பது பலரது அபிப்பிராயம்.

இதனை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஐரோப்பிய நாடுகள், ஒரு பொதுவான வெளிநாட்டுக்கொள்கையை வகுப்பதைப் பற்றிப்பேச்சே எடுக்கவில்லை. பரந்தளவில் கடும் கண்டனத்திற்குள்ளான ஒல்லாந்தின் அகதிகளுக்கான பிரதியமைச்சருக்கு இன்றும் பெரும்பாலான பாராளுமன்ற அங்கத்தவர்கள் (இடதுசாரிக் கட்சிகள் தவிர) ஆதரவு தெரிவித்து வருவது நெருடலான விடயம். ஆளும் கூட்டணி அரசில் வளர்ந்து வரும் தீவிர வலதுசாரிக் கட்சியின் செல்வாக்கு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் பங்கு என்பன சில நாட்டு அகதிகளுக்கு பாதகமான முடிவை எடுக்க வைக்கின்றன. இதனால் ஒல்லாந்து அரசின் பார்வையில் கடந்த 10 ஆண்டுகளாக இலங்கை மனித உரிமைகளுக்கு மதிப்புக்கொடுக்கும் ஒரு 'பாதுகாப்பான' நாடாக காட்சி தருகின்றது.

அடிப்படை மனித உரிமைகளை மீறும் அரசின் அகதிகளுக்கெதிரான செயற்பாடுகளை பகிரங்கப்படுத்தும் பத்திரிகைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், சில அரசியற் கட்சிகள் என்பன ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. சர்வதேச மன்னிப்புச்சபை பல நகரங்களில் அகதிகளைப் பற்றிய கண்காட்சிகளை ஒழுங்கு செய்து வருகின்றது. பச்சை இடது (Groen Links) கட்சியினரும் மற்றும் D66 கட்சியைச் சேர்ந்த Ditrichம் பாராளுமன்றத்தில் இது குறித்து குரலெழுப்பி வருகின்றனர். INLIA மற்றும் சில கிறிஸ்தவ தேவாலயங்கள் தஞ்சமனு நிராகரிக்கப்பட்ட அகதிகளுக்குஅடைக்கலமளித்து வருகின்றன. இவற்றை விட அகதிகளுக்கு சேவை செய்யும் VWNம் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டும், நிலைமை சீரடைவதாகத் தெரியவில்லை. ஒல்லாந்து அரசு சிறிதளவேனும் விட்டுக் கொடுக்க தயாராகவில்லாதபடியால் நிலைமை மோசமடையும் அறிகுறிகள் தோன்றுகின்றன.

இதுவரையில் 26 அகதிகள் தற்கொலை செய்து கொண்டதிலிருந்தும் மற்றும் சிலர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்ததில் இருந்தும் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

இனி நெதர்லாந்து வரும் தமிழ் அகதிகள் பற்றி ஒரு சில வார்த்தைகள்.

பெரும்பாலான தமிழ் அகதிகள் விமான நிலையத்தில் வந்திறங்கி தஞ்சம்கோரிய போதும் இவர்களில் மிகக்குறைந்த எண்ணிக்கையினரே நெதர்லாந்தில் தங்க விரும்புகின்றனர். அநேகமானோர் வந்து இறங்கி அடுத்த நாளே மாயமாக மறையும் மர்மம் இவ்வரசுக்குத் தெரியாததல்ல. ''இங்கு வரும் தமிழ் அகதிகளின் பார்வையில் நெதர்லாந்து பாலும் தேனும் ஒடும் நாடாகத் தெரிவதில்லை'' இவ்வாறு எழுதியது பிரபல தினசரி ஒன்று. இவ்வாறு 'காணாமல் போபவர்களால்' இங்கு தங்கும் மற்ற அகதிகள் பாதிக்கப்படுகின்றனர் என்பதை மறுக்க முடியாது. இந்தக் காரணத்தைக் கூறியே அமைச்சு 15 அகதிகளை தடுப்பு முகாமில் தடுத்து வைத்தது குறிப்பிடத்தக்கது. விமான நிலையத்தில் வந்திறங்கியவர்களை திருப்பி அனுப்பப்போவதாக இராணுவப் பொலிஸ் மிரட்டிய சம்பவம் இங்கு வெளிவரும் பத்திரிகைகளால் கண்டிக்கப்பட்டது.

மொத்தத்தில் ஒல்லாந்து அரசின் அகதிகள் தொடர்பான பிழையான அணுகுமுறைகளும், அநீதியான தீர்ப்புகளும் முற்றிலும் புரிந்து கொள்ள முடியாதனவல்ல. இலாபம் நோக்கிய வர்த்தகக் கொள்கைகள் மனித உரிமைகளை கண்டு கொள்ளாத வெளிவிவகார அரசியல் மற்றும் புதிய காலனித்துவம் என்பன இங்கு வரும் அகதிகளின் தலை விதியையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன. இத்தகைய சுயநல அரசியலே மூன்றாம் உலக நாடுகளில் போர்களுக்கு வித்திடுவதுடன் அதன் தொடர்பாக அகதிகள் உருவாக்கத்திற்கும் வழி சமைக்கின்றது. இந்தக் காரணிகள் களையப்படாதவரை புதிய அகதிகளின் வருகையும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

*கலையரசன்*
*நெதர்லாந்து*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ஓவியத்தை உங்கள் அனுபவத்தில் எவ்வாறு புரிந்து வைத்துள்ளீர்கள்?**

நான் ஓவியத்தை Body of knowledge ஆக கருதுகிறேன். அதற்கு சொந்த வரலாறும் ஆய்வு முறையும் உண்டு (Methodology). எமக்கு முன்னால் இருந்த ஓவியர்கள் பற்றியும் அவர்கள் குறிப்பிட்ட விஷயங்களை எப்படி கையாண்டார்கள் என்றும் தெரிந்திராவிட்டால் இவற்றுடன் எம்மை இணைத்துக்கொள்ளலும் நல்ல படைப்புகளைப் படைத்தலும் கூட சாத்தியமாகாது. எனினும் இரண்டாம்தரப் படைப்புகளை நிகழ்த்தலாம். படைப்புகள் முன்னேற்றகரமானதாயும், ஓவிய மொழியை வளப்படுத்துவனவாயும் இருக்கவேண்டும் என்றால் எமக்கு வரலாறு தெரிந்திருக்க வேண்டும். உதாரணத்துக்கு அரூப ஓவியங்களைப் பாருங்கள். அதற்கு ஓர் வரலாறு உண்டு. அது ஒரு காலத்தில் தோன்றி அதன் தேவையைப் பூர்த்தி செய்தது. இன்று வரலாற்றைப் புரியாமல் அரூப ஓவியங்களைச் செய்தால் காலச் சக்கரத்தை மீள கண்டு பிடிப்புச் செய்வீர்கள். எதுவும் புதிதாய் இரசனைக்குரியதாய் இருக்காது.

மைக்கல் அஞ்சலோ (Michel Angelo) தனக்கு முந்திய ஓவியரான மெசாச்சியோவின் (Masaccio) சில படைப்புகளை பிரதிபண்ணினார். இதனால் சில விஷயங்களை அறிந்து கொண்டார். அத்துடன் தனது சமகாலத்துடன் ஒத்திசைந்தார். இதற்கு அவரது தாவீது (David) என்ற சிற்பம் நல்ல உதாரணம். வேதாகமத்தில் தாவீது ஓர் 13க்கும் 19க்கும் இடைப்பட்ட வயதினனாக தன்னால் கொல்லப்பட்ட கோலியாத்தைக் கீழ் நோக்கிப் பார்ப்பவனாக சித்தரிக்கப்படுகின்றான். ஆனால் மைக்கல் அஞ்சலோ அவனை 25க்கும் 35க்குமிடைப் பட்ட மிகுந்த அறிவாற்றலும் தெளிந்த பார்வையும் உடைய நிறைவான மனிதராக கண்டார். சில உடற்பகுதிகளைப் பெரிது படுத்தி பாரம்பரிய வேதாகம தாவீதை ஒரு சமகால தாவீதாக மாற்றியமைத்தார். தாவீதின் சித்திரிப்புப்பற்றியும் மனித உருவ சித்திரிப்புகள் பற்றியும் நிகழ்ந்த தொடர் மாற்றங்களை அவர் தெரிந்திருந்தமையால் இதைச் செய்ய முடிந்தது. இதை லியானோ டாவின்சி (Leonardo da Vinci) இடத்திலும் மனப்பதிவு வாத, பின் மனப்பதிவுவாத ஓவியர்களிடத்திலும் கூடக் காணலாம். இவர்கள் இப்பேறுபட்ட புத்திபூர்வமான சம்பாஷனை ஒன்றை உருவாக்கி தமக்கு முன்னாளிருந்த படைப்புகளிடையே நடாத்தி வந்தார்கள். இது இன்றும் முக்கியமானதும் எந்தப் படைப்பாளியும் செய்ய வேண்டிய தொன்றும். எந்தப்படைப்பாளியும் தனது கால சிந்தனைகள், தத்துவங்கள், எண்ணங்கள் பற்றிய அறியாமையுடன் இருக்க முடியாது அல்லவா? சமகால நிகழ்வுகளுக்குரிய எதிர்வினையைப் படைப்புகள் கொண்டிருக்க வேண்டும் என்று பிக்காசோவும் (Picasso) நம்பினார். ஆனால், தங்கள் தனிப்பட்ட அனுபவங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துகிற படைப்பாளிகளும் இருக்கிறார்கள். எனினும் அவையும் தங்கள் காலத்தின் பிரதிபலிப்புதான்.

***அவ்வாறாயின் கலை, அழகியலுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்கிறீர்களா?***

ஆம்... அதே சமயம் இல்லை. நாங்கள் அடிப்படையான கேள்விக்கு வந்துள்ளோம். அழகியல் என்றால் என்னவென்று.. அழகு, அழகியல் எல்லாம் அந்தக்காலத்திற்குரிய கலாசார உற்பத்திகள். கலாசாரம் என்று பாரம்பரிய ரீதியில் நான் குறிப்பிடவில்லை. கலாசாரம் என்பது நாங்கள் உருவாக்குகின்ற அனைத்தும் செய்பவை. இது பொருள் சம்பந்தமானதல்ல. எமக்கும் பொருளுக்கும் (Matter) கோட்பாட்டிற்கும் (Theory) இடையிலான உறவு அல்லது தொடர்பு தான் கலாசாரம். நாங்கள் என்ன செய்தாலும் அது இதனுடன் தொடர்புடையது. அழகியலும் அப்படித்தான். எனவே நாங்கள் இன்று வெளிப்பாட்டிற்கு பயன்படுத்துகிற மூலப்பொருட்களும் சாதனங்களும், உருவங்களும் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பார்வையாளருக்கு அழகற்றனவாய் இருந்திருக்கலாம் அல்லவா?

எல்லா உன்னத படைப்புகளும், படைப்பாளிகளும் சமகாலத்திற்குரியன. மீண்டும் தாவீதை(David)ப் பார்ப்போம். அது உன்னதமானது. ஏனெனில் சமகாலத்து விஷயத்தை அது வெளிப்படுத்துகிறது.

16ம் நூற்றாண்டில் புளோரன்ஸ் (Florence) நகரத்து சமூகம் ஒரு நாயகனை எதிர்பார்த்திருந்தது. மைக்கல் அஞ்சலோ வரலாற்று மூலங்களில் இருந்து உணர்ந்து கொண்ட தகவல்களின் அடிப்படையில் சமகாலத்துக்குரிய தாவீதை உருவமைத்தார். வேறு எந்தப்படைப்பையும் பாருங்கள். அஜந்தாவிலும், சீகிரியாவிலும் சமகாலச் சமூகத்தைத் தானே பார்க்கிறீர்கள்.

Art body of knowledege என்ற காரணத்தினால் அது விரிவாக்கப்பட்டு வரும் ஒன்று. ஒவ்வொரு புதிய சந்ததிப் படைப்பாளியும் பல்வேறுவழிகளில் அதை விரிவாக்கியாக வேண்டும். உதாரணமாக பல புதிய சாதனங்கள் ஒவ்வொரு சந்ததியினராலும் புகுத்தப் படும். 15ம் நூற்றாண்டில், வெளிப்பாட்டிற்கு சலவைக் கற்களையும் உலோக வார்ப்புகளையும் உபயோகித்தனர். இன்று நாங்கள் எதைப் பயன்படுத்தவில்லை காகிதக்கூழ், பிளாஸ்ரிக், கண்ணாடி நாரிழைகள் எனவே அழகு - பொருட்களில்/ சாதனங்களில் இருந்தும் வருகிறது. ஒருவன் மனித உருவைப்படைக்க பிளாஸ்ரிக்கை பயன்படுத்தலாம். இன்னொருவன் பிளாஸ்ரிக்கின் அழகிற்காகவே அதனைப் பயன்படுத்தலாம்.

*ஜெகத் வீரசிங்க (43) இலங்கையில் சமகாலத்து ஓவியர்களில் முக்கியமானவர். கறுப்பு ஜூலைக்கு எதிராக இவர் செய்த படைப்புகள் இலங்கை ஓவிய மொழிக்கு ஓர் புதிய பரிமாணத்தைக் கொடுத்தன. சர்வதேச அளவிலும் நிறைய ஓவியக் காட்சிகளில் கலந்து கொள்வதுடன் அண்மைக் காலமாக பரவலாகி வருகிற பயனூறு நிலை இணைப்புக்கலை (Installation art)யிலும் தன்னை வெளிப்படுத்தி வருகிறார். அகழ்வாராய்ச்சிக்கான பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் விரிவுரையாளராயும், அழகியற் கற்கை நிறுவனத்தின் வருகைதரு ஓவிய விரிவுரையாளராகவும் இருந்து வருகிறார்.*

*காணாமற்போன தமது புத்திரர்களின் புகைப்படங்களுடன் ஒவ்வொரு இராணுவ முகமாய் ஏறி இறங்கும் தாய்மாரின் நிலைமையை பௌத்த புனித யாத்திரையுடன் இணைத்து புதிய பயனூறு நிலை இணைப்புக் கலைகாட்சி ஒன்றை நடாத்துகிறார். Yantra Gala and the Round Pilgrimage என்ற இக்காட்சி ஓகஸ்ட் 23 தொடக்கம் 31 வரை இலக்கம் 61, தர்மபால மாவத்தை, கொழும்பு -7லுள்ள கெரிடேஜ் (Heritage) ஓவிய கூடத்தில் நடைபெறுகிறது.*


***உங்கள் வாழ்க்கை, ஓவியனாக உங்களின் வளர்ச்சி இவற்றைப்பற்றி சொல்ல முடியுமா?***

எனது இளமைக்காலம் கொழும்பைச் சுற்றியே கழிந்தது. உண்மையில் பள்ளிக்கூடத்தில் நான் ஓவியத்தைக் கற்றுக்கொள்ளவில்லை. மற்றவர்களைப் போல் எனது தாய் தந்தையரும் நானும் வைத்தியனாக அல்லது பொறியியலாளனாக வரவேண்டும் என்று விரும்பினார்கள். நான் என் உயர்தரக் கல்வியை உயிரியல் விஞ்ஞானத்தில் தொடர்ந்தேன். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய பின் நான் இத்துறைக்கு ஏற்றவன் இல்லை என உணர்ந்தேன். பின்னர் தாய் தந்தையரின் அனுமதி பெறாமலே அழகியல் கற்கைநிலைய அனுமதி பரீட்சைக்கு தோற்றித் தெரிவானேன். இவ்வாறு தான் ஓவியத்தில் முறையான கற்கை ஆரம்பமானது. அந்த நேரத்தில் பலர் இதை ஒரு பைத்தியக்காரத் தனமான முடிவாக கருதினார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நான் மேற்கொண்ட எனக்கேற்ற முடிவுகளில் ஒன்று. இக்காலப் பகுதியில் தான் நான் அரூப பாணி ஓவியன் இல்லை (Abstract painter) என்பதையும் எனக்கு நிறைய சொல்ல இருப்பதால் மனித உருக்களை உபயோகிக்கலாம் என்றும் உணர்ந்துகொண்டேன் மனித உருக்களை திருப்புபடுத்தி பல முயற்சிகளை செய்தேன். மனித உரு எனது ஓவியங்களில் பெரிய பகுதியை நிரப்பியதுடன் மனித அவலங்களும் வாழ்வியல் நிலைகளும் முக்கிய கருப்பொருளாயின.

எனது வாழ்க்கையில் நடந்த மூன்று சம்பவங்கள் அதை முற்றாக மாற்றியமைத்தன. நான் அழகியல் கற்கை நிலைய மாணவனாய் பல்வேறு மாணவ இயக்க செயற்பாடுகளில் பங்கெடுத்திருக்கிறேன். என்னை அன்றைய அரசின் காடையர்கள் கடத்திச் சென்று, சிறிகோட்டாவில் சித்திரவதைக்குள்ளாக்கிய பின் கடற்கரையில் கொணர்ந்து போட்டார்கள் நான் ஒருபோதும் இவ்வாறு நடக்கும் என்று நினைத்ததே இல்லை. நீதி, ஜனநாயகம் பற்றி எனக்குள் இருந்த எண்ணங்கள் ஓர் இரவில் மறைந்து போயின. எனது தந்தை நீதிமன்றத்தில் பணியாற்றியவர் யாழ்ப்பாணத்தில் அவர் பணியில் இருந்தபோது நான் அங்கு சென்றிருக்கிறேன். ஒரு நீதியான உலகில் நான் வளர்க்கப்பட்டிருந்தேன். எனது தந்தை எங்களிடத்தில் சில ஒழுக்க நெறிகளைப் பேணினார். இதன் படி நாங்கள் குற்றம் செய்தால், எம்மை நியாயப்படுத்த எங்களால் முடியாது போனால் தண்டனையை அனுபவிக்க வேண்டி இருக்கும். எனது வாழ்க்கை பற்றிய முழு அணுகுமுறையும் இது சார்ந்தே இருந்தது.

## "எங்கள் உடம்பு எங்கள் சிந்தனை எல்லாமே அரசியற்தனமானவை தானே!"

*-ஜெகத் வீரசிங்க*



சந்திப்பு: தா.சனாதனன்

அழகியல் கல்வி முடிந்ததும் பயிற்சி காலணி வடிவமைப்பாளராக ஒரு வருடம் வேலை பார்த்தேன் ஆனால் திருப்தி அடைய முடியவில்லை. அதை விட்டு விட்டு தம்புள்ளவில் கலாசார முக்கோணத்திட்டத்தின் கீழ் புராதன ஓவிய காப்பாளராக ஓர் குறைந்த வருமானம் தருகிற தற்காலிக வேலையில் அமர்ந்தேன். இது நான் எடுத்த இரண்டாவது முக்கியமான முடிவு. இதையும் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

1983ஆம் வருடம் நான் தம்புள்ளவில் இருந்து கொழும்பு திரும்பிக்கொண்டிருந்தேன். நான் சார்ந்துள்ள இன, மதத்து மக்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனங்களையும், வன்முறைகளையும் கறுப்பு ஜூலை அன்று காண நேர்ந்தது. ஒரிரு கணங்களுக்கு நான் என்னுள் குழம்பிப் போனேன். எனக்கு அவை அனைத்தும் சரியாகப்பட்டது. நான் அவற்றை ஏற்றுக்கொண்டேன். ஆனால் நான் பல்கலைக் கழகத்தில் ஓர் மாக்சியவாதியாக அறியப்பட்டேன். எனது தந்தை இடதுசாரிகளுடன் நின்றவர். நான் வாழ்க்கை சார்பாக மிகுந்த மனிதாபிமான சார்பான அணுகுமுறை உடையவன் என்று நம்பியவன். 83இல் அந்த சில கணங்களுக்குள் நடந்தவற்றை நான் ஏற்றுக் கொண்டேன். பின்னர் இது எவ்வாறு நிகழ முடியும் என்று எண்ணினேன். எப்படி இந்த இனவாத மிருகம் எனக்குள்ளும் சீவித்தது. எப்படி அது அந்த தருணத்தில் எனக்குள்ளும் தலைகாட்டியது என்று எண்ணினேன்.

1992ல் ஏக்கம் (Anxiety) என்ற தலைப்பில் கொழும்பில் ஓர் கண்காட்சி நடாத்தினேன். அதில் எனக்குள் இருந்த மிருகம் என்னையறியாமல் வெளிப்பட்டு பல உயிர்களைக்காவுக் கொண்டது... என மறைமுகமான முறையில் எனது எண்களை, உணர்வுகளை, தினக் குறிப்பை வெளியிட்டேன். இதன் போது மனிதப்படுகொலைகளைச் சித்திரிக்கும் பல படைப்புகளைச் செய்தேன். இக்காலத்தில் இரண்டு உன்னத எண்ணங்களை நான் இழந்திருந்தேன்.

1. ஜனநாயகம், நீதி போன்ற சமூகம் பற்றிய உன்னதங்கள்.
2. மனிதாபிமானி போன்ற என்னைப்பற்றிய உன்னத எண்ணங்கள்.

இதுதான் பின்னைய படைப்புகளுக்கிடையிலான சிந்தனைப் போக்கை வடிவமைத்தன. சுய விமர்சனத்துக்கும், சமூக விமர்சனத்துக்கும் இட்டுச் சென்றன. எனது படைப்புகளைப் பார்த்துவிட்டு அவை சமூக பிரச்சினைகள் பற்றியவை என்பார்கள். ஆனால் அவை சொந்தப் பிரச்சினையையும் பற்றியவை. சொந்த பிரச்சினைகளினூடு சமூக சிக்கல்களை உணர்ந்து கொள்ள இவ்வனுபவங்கள் உதவின. நான் யார் என்ற கேள்விக்கான பதிலையும், உண்மையில் நான் எதனால் உருவாக்கப்பட்டிருக்கிறேன் என்றும், தேடிக் கொண்டிருக்கிறேன். எல்லாரும் சொல்வார்கள் நீ ஒரு நல்ல சிங்களவன் அல்லது பௌத்தன் என்று. நல்ல மாக்சியவாதி என்று. ஆனால் அது மேற்பரப்பு தோற்றம் தான்.

என்னைப்பாதித்த மூன்றாவது விடயம் எனது தகப்பனாரின் இறப்பு. அன்பிற்குரியவரின் இழப்பின் துயரத்தை அறிந்து கொண்டது அப்போதுதான். வேறு சில சம்பவங்களும் இருப்பினும் இவை மூன்றும் தான் என்னைப் பெரிதும் பாதித்தவை. இந்த அனுபவங்களுடன் வாழ்க்கையின் முழுக் காலத்தையும் கேள்வி கேட்பதிலும் மறுகேள்வி கேட்பதிலும் கழிக்கலாம்.

ஒவ்வொரு நாளும் பல்வேறு வழிகளில் எங்களுக்கு சவால் விடப்படுகிறது. எமது ஆத்மாவுக்குள்ளேயே நாம் அச்சுறுத்தலுக்குள்ளாகிறோம். மதஸ்தாபனங்கள், துறவிகள், அரசியல்வாதிகள், சங்கங்கள் எல்லாம் உங்களை உறிஞ்சிக்குடிக்கின்றன, தின்கின்றன. இந்த உணர்வைத்தான் எனது படைப்புக்களில் வெளிப்படுத்த விரும்புகிறேன். இதனூடு நாங்கள் எமது வரலாறு, மதம் அனைத்தையும் மீள கண்டுபிடிக்கிறோம். 2500 வருட வரலாற்றுக்கும், கலாசாரத்திற்கும் நாங்கள் சொந்தக்காரர்கள் என்று மார்தட்டிக்கொள்ளலாம். வரலாற்றுப் புத்தகங்களில் உள்ளதைப்போன்ற ஓர் வரலாறு முன்னர் உண்மையிலேயே இருந்திருக்குமென்றால் அதை உரிமைகோர எந்த இலங்கையருக்கும் உரிமை கிடையாது. நாங்கள் அவற்றை எமக்கு சொந்தமற்றவையாக்கி விட்டோம். ஏனெனில் என்ன காரணத்தைச் சொன்னாலும் ஒரு சிறிய நாட்டிற்குள்ளேயே பெரிய தொகையில் சொந்த சகோதரர்களை கொலை செய்தவர்கள் நாங்கள். எப்படி வாதிட்டாலும் எங்கள் தேசியக்கரங்களில் இரத்தம் இருக்கிறது. தனிப்பட்ட ரீதியில் சொல்லிக்கொள்ளலாம், நான் எந்தப் போரிலும் பங்கு கொள்ளவில்லை, எவரையும் கொலை செய்யவோ, சூறையாடவோ இல்லையென்று. இந்த அந்த அரசியற் கட்சிகளுடன் தொடர்பில்லை என்று. ஆனால், இதற்கான கூட்டுப்பொறுப்பை அனைத்து தனிநபர்களும் ஏற்றுத்தான் ஆக வேண்டும். இது தான் எனது படைப்புகளின் அடிப்படை. சில வேளைகளில் எனது உடைந்த உறவுகள் போன்றவற்றையும் வெளிப்படுத்தியுள்ளேன். ஆனால் இந்த தனிப்பட்ட விவகாரங்களும் இவற்றால் பாதிக்கப்பட்டவை தான். Personal is political எங்கள் உடம்பு, எங்கள் சிந்தனை எல்லாமே அரசியற் தனமானவை தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனப்படுகொலைகளில் ஒன்றான 1977 படுகொலைகள் நடந்து இம்மாதத்தோடு 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஐ.தே.க. அரசாங்கத்தின் கீழ் 17 வருடத்துக்குள் பாரிய அளவிலும் சிறிய அளவிலும் அவ்வாறான எத்தனையோ சம்பவங்கள், நடந்து முடிந்துவிட்டன.

சிலர் அதனை "இனக்கலவரம்" அல்லது "இனவன்செயல்" எனக்கூறுவர். வேறு சிலர் "இனப்படுகொலைச் சம்பவம்" என்பர். இன்னும் சிலரோ "இனச் சுத்திகரிப்பு", "இனஅறுவடை" என்று கூட கூறுவர். இதில் எதைச் சொன்னாலும் அது நிச்சயமாக அவற்றிற்குப் பொருந்தி விடுகிறது. இலங்கையின் வரலாற்றில் 1915, 1958, 1977, 1979, 1981, 1983 என தொடர்ந்து கூறிக்கொண்டே போகலாம் அச்சம்பவங்களை.

1983க்கும் பின்னர் அவை சகஜமாகிப் போய்விட்ட ஒன்றாக மாறிவிட்டன. முன்னர் போல் அவை அதிர்ச்சிதரக்கூடிய சம்பவங்களே அல்ல . தினம் தினம் பழக்கப்பட்டுப் போய்விட்ட அந்த வாழ்வுக்கு எந்த வருடத்தைப் பெயராகக்கொண்டு அழைப்பது? இப்போது அந்தப்படுகொலைகள் வடிவத்தில் மாறுபட்டுள்ளன. அவை நிறுவனமயப்பட்டுவிட்டன. அவ்வாறு நிறுவனமயப்பட்ட அடக்குமுறையை அரசு தனது அதிகாரத்தைக் கொண்டு வழிநடத்தி வருகிறது.

## தேசிய பந்தோபஸ்தின் பெயரால்...

இந்த அதிகாரவடிவம் வழங்கப்பட்டதன் காரணமாக தற்போதைய இனஅழிப்பு யுத்தம் குறித்து உலகம் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறது. இனி, தேசியபந்தோபஸ்தின் பெயரால் அவை நியாயப்படுத்தப்பட்டுக் கொண்டேயி ருக்கும். அந்த இன அழிப்புக்கு (பாதுகாப்பு நிதி) நிதி வழங்க சாதாரண அரச சிற்றூழியர்கள் கூட தயாராக இருப்பர். அரசு என்ன விலையேற்றங்களை செய்யட்டும். எந்த வாக்குறுதி யை மீறட்டும் அவை "யுத்தத்தின் பெயரால்" (தேசிய பாதுகாப்பின் பெயரால்) நியாயப்படுத்தப்படுவதை அங்கீகரிப்பர். இன்றைய இனஅழிப்பு யுத்தத்தின் போக்கில் இதனை நன்றாகவே காணலாம்.

அரசயந்திரம் மாத்திரமல்ல அதன் தலைவர்களின் தனிப்பட்ட மோசகரமான நடத்தைகளும் கூட "யுத்தத்தை நடத்துபவர்கள்" என்ற காரணத்தால் நியாயப்படுத்தப்படும். இதற்கு நல்ல உதாரணம் ஜொயல் பெரேராவின் கொலை. இச்சம்பவத்தில் பிரதிப் பாதுகாப்பமைச்சரின் மகன் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டபோது பாராளுமன்றத்தில் அனுருத்த ஆற்றிய உரையில் "நாட்டினதும் இனத்தினதும் பாதுகாப்புக்கரக பயங்கரவாத ஒழிப்பு யுத்தத்தினை நடாத்திக் கொண்டிருக்கையில் என் மீது களங்கம் ஏற்படுத்துகிறார்கள் சதிகாரர்கள்." என புலம்பியவுடன் ஜொயல் கொலை விவகாரம் பின்னர் அப்படியே அமிழ்ந்து போய்விட்டது.

இந்த இன அழிப்புகளில் சிவிலியன்கள் அதிகமாக ஈடுபடும் சந்தர்ப்பங்களில் அதனை சில லும்பன்களின் நடவடிக்கை, ஒரு சில காடையர்களின், கொள்ளைகாரர்கள் சிலரின் நடவடிக்கைகள் என ஆதிக்க சக்திகளால் வலியுறுத்திப் பிரச்சாரம் செய்யப்படும். அவை திரும்பத் திரும்பச் சொல்லபடுவதால் பாதிக்கப்படுகின்ற-பாதிக்கப்பட்ட மக்கள் கூட அது தான் உண்மை என நம்பிவிடுவர். அமெரிக்காவில் கறுப்பின மக்கள் மீதான அடக்குமுறைகளைக்கூட வெள்ளையர்களால் கட்டவிழ்த்து விடப்படுள்ள பிரச்சாரமும் கூட ஒரு சில நிறவெறிக் காடையர்களின் வேலையே இத்தகைய சம்பவம் என்று தான்.

ஆனால் இதற்குப் பின்னால் ஒரு



நிறுவனமயப்பட்ட வரலாற்றுமரபு சார்ந்த ஐதீக சித்தாந்தங்கள் தொழிற்படுகின்றன. என்கின்ற உண்மை எல்லாம் வெளித்தெரியாமல் போய்விடுகிறது.

அதிகாரம் முழுவதையும் கொண்டுள்ள ஒரு குழுமம், ஏனைய குழுமங்களுக்கு அது கிடைக்காதபடி செய்து கொண்டே அக்குழுமங்கள் மீதான அதிகாரத்தை செலுத்துவதும் அவர்களின் தலைவிதியையும் தாமே தீர்மானிப்பதும் இவற்றிற்கெதிரான நிராயுதக்குரல்களைக் கூட இராணுவ ரீதியில் அடக்கி விடுவதும் நடைமுறையில் இலங்கையில் கண்டுகொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகள்.

## 77' இனப்படுகொலை

1977ஆம் ஆண்டு இனப்படுகொலைச் சம்பவம் அரச படையினரின் அடக்குமுறைக்கு எதிராக தற்காக்க தாமும் ஆயுத பாணிகளாவதைத்தவிர வேறு வழியில்லை என்பதை நிறுவிய இனப்படுகொலைச் சம்பவம். அதன் பின்னர் 1983 இல் நடந்த இனப் படுகொலைச் சம்பவமானது தமிழ் மக்களை தம்மைத்தாமே ஆளக்கூடிய புறம்பான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக அணிதிரள வைத்த கலவரம் அது.

எனினும் 77ம் ஆண்டு இனப்படுகொலையானது, 83 இனப்படுகொலைக்கு சமிக்ஞை காட்டிய கலவரம். 77' கலவரத்துக்கு முன்னர் அது நடக்க ஏதுவான பின்னணிகளை நோக்குவோம்.

70ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன கூட்டுச் சேர்ந்து ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைத்தன. (SLFP-91+LSSP-19+CP-6=116)-பதவிக்கு வந்ததுமே பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு பாரபட்சம் காட்டும்வகையில் அது தரப்படுத்தலை அமுல்படுத்தியது. இதற்கெதிராக பல்வேறுபட்ட போராட்டங்கள் வடகிழக்கெங்கிலும் நடந்தன. அதனைத் தொடர்ந்து 1972இல் பேரினவாத அரசியலமைப்பு தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பின் மத்தியில் நிறைவேறியது. சிங்கள பௌத்த பேரினவாத அம்சங்களைக் கொண்ட இந்த அரசியலமைப்பை எதிர்த்து தந்தை செல்வா பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததுடன் இடைத்தேர்தலை நடத்துமாறு சவால் விட்டார். என்றபோதும் அவசரகால சடடத்தைப் பயன்படுத்தி அரசு அதனை பின்போட்டுக்கொண்டே போனது.

## பின்புல காரணிகள்

இதன் பின்னர் 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று நடந்த கூட்டத்தின்போது நூற்றுக்கணககான பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி பொது மக்கள் மீது தாக்குதல் நடாத்தியதுடன் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர். இதன்போது பலர் படுகாயமுற்றனர். பொதுமக்களில் ஒன்பது பேர் கோரமாக கொல்லப்பட்டனர்.

இத்தகைய சம்பவங்களும் அவற்றிற்கெதிராக தமிழ் மக்கள் மத்தியிலிருந்து எழுந்த எதிர்ப் பிரச்சாரங்களும் அன்றைய எதிர்க்கட்சியாக இருந்த ஐ.தே.க.வுக்கு சாதகமாகின. ஐ.தே.க. தமிழ் மக்களுக்காக முதலைக் கண்ணீர் விட்டது.

இதற்கிடையில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம், (என்.எம்.பெரேரா, குமாரசூரியர், சிறிமா என ஒவ்வொருவராக யாழ்.விஜயம் செய்த போதெல்லாம். இவ் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், எதிர்ப்பு ஊர்வலங்கள் நடைபெற்றன.) பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அல்பிரட் துரையப்பா கொலை, சிவகுமாரன் தற்கொலை, தமிழ் இயக்கங்களின் தோற்றம், கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாடும், தமிழ் ஈழம் அமைப்பதற்கானபிரகடனமும், தமிழ் இளைஞர்கள் வெளிநாட்டு ஆயுதப் பயிற்சிக்காக செல்லல் என தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதனைத் தொடர்ந்து ஐ.தே.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக வாக்குறுதியளித்தது. ஸ்ரீ.ல.சு.க.வை தோல்வியடையச் செய்யும் நோக்குடன் தமிழ் மக்களின் வாக்குகளை வேட்டையாடுவதற்காக போலி வாக்குறுதிகளை வாரி வழங்கியது. ஆனாலும் தமிழ் மக்கள் குறிப்பாக வடகிழக்கு வாழ் தமிழ் மக்கள் அதனை நம்பத் தயாராக இருக்கவில்லை. ஜே.ஆர். யாழ்ப்பாணத்தில் தனது தேர்தல்பிரச்சாரக்கூட்டத்தை நடத்திய போது குழுமியிருந்த கூட்டத்தினர் கல்லெறிந்து கூட்டத்தை குழப்பினர். ஜே.ஆரை அந்த சம்பவம் மிகுந்த கௌரவப் பிரச்சினைக்குள்ளாக்கியிருந்தது.

இதே வேளை த.வி.கூ.வினர் தமக்களிக்கும் வாக்குகள் தமிழ் ஈழத்துக்கு அளிக்கும் வாக்குகள் என்றனர்.

தேர்தலில் 168 ஆசனங்களில் 140 ஆசனங்களை ஐ.தே.க. கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. இது மொத்த ஆசனங்க ஆறில் ஐந்து பங்காகும்.

ஸ்ரீ.ல.சு.க.வுக்கு 8 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களைக் கைப்பற்றி எதிர்க்கட்சி தலைமையைக் கைப்பற்றியது. எதிர்க்கட்சியின் தலைவராக அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். த.வி.கூ.வை எதிர்க்கட்சித் தலைமைப்பதவியிலிருந்து இறக்குவதற்கு சிங்கள ஆதிக்க சக்திகளால் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

யூலை மாதம் தேர்தல் நடந்தது. ஓகஸ்ட் மாதமே அதாவது ஐ.தே.க. பதவிக்கமர்ந்து ஒரு மாதத்துக்குள்ளேயே அந்தப் படுகொலைச் சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டன.

## கலவரத்தின் ஆரம்பம்.

இந்தக் கலவரத்தின் ஆரம்பம் 77 ஒகஸ்ட் 12ம் திகதி யாழ் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற களியாட்ட விழாவொன்றின் போது நுழைவுச்சீட்டு பெறாது நுழைய முயன்ற பொலிஸாருடன் ஏற்பாட்டாளர்கள்



வாக்குவாதப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர். அச்சம்பவம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து களியாட்ட நிகழ்ச்சிக்கோ அதன் அண்மையிலோ பொலிஸார் போகக் கூடாது எனும் உத்தரவை யாழ் மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் சுப்பிரின்டன்ட் அனுப்பியிருந்தார்.







ஆனால் பொலிஸ்காரர்கள் இத் தடையுத்தரவை மீறினார்கள். களியாட்டத்தின் (Carnival) இறுதி நாளான ஓகஸ்ட் 13ம் திகதி சிவில் உடை தரித்து அங்கிற்குள் நுழைந்த பொலிஸார் கலவரத்தை உண்டு பண்ணினர். இந்த சச்சரவில் பொது மக்கள் பலர் காயமுற்றனர். மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் பலத்த மோதல்கள் நடந்தன. அத்துடன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







நில்லாது பாதையெங்கினும் பொது மக்களை திட்டமிட்டுத்தாக்கியதுடன் சொத்துக்களையும் கடைகளையும் கொள்ளையடித்தனர்: தீயிட்டுக் கொளுத்தினர். இந்தச் சம்பவம் அடுத்தடுத்த நாட்களும் தொடர்ந்தன.

இந்தச் சம்பவம் நடக்குமுன்னர் அதாவது, யூன் 3ம்திகதியன்று தந்தை செல்வாவின்சாம்பலை (தந்தை செல்வா ஏப்ரல் மாதல் இறந்திருந்தார்) திருமலைக்கு கொண்டு செல்லும் போதே மோதல்கள் தோன்றி சிங்கள-தமிழ்க் கலவரமாக மாறிவிட்டிருந்தது. அதே போல அதற்கு முன்னைய ஆண்டும் புத்தளத்தில் முஸ்லிம் மக்களின் மத வழிபாட்டுத்தளமான பள்ளிவாசலில் கூடிய முஸ்லிம்களின் மீதும் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி 7 பேரை கொன்றதில் ஒரு கலவரமும் நடந்தது. இத்தகைய பொலிஸ் அடாவடித்தனங்களும் பின்னைய சம்பவங்களுக்கு பொலிஸாரை தைரியமூட்டியிருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஓகஸ்ட் 15ம் திகதி இரவு 1.40 மணியளவில் யாழ் நகரில் உள்ள சந்தையில்பாய்க்கடையில்பொலிஸார் வைத்த தீ தான் தொடக்கம். பாய்க்கடைக்கு தீ வைத்ததால் தீ கூடியளவில் பற்றி பரவி சந்தையை நாசம் செய்யும் என நம்பியிருந்தனர் பொலிஸார். அங்கிருந்த திருவள்ளுவர், அவ்வையார் சிலைகளைக் கூட அவர்கள்சேதம்செய்தனர்.

16ம் திகதி அதிகாலையிலேயே பொலிஸார் பொது மக்களை தாக்கத் தொடங்கினர். கடமைக்குச் சென்று கொண்டிருந்த பஸ்சாரதி ஒருவரையும், நகரசுத்தித் தொழிலாளர் ஒருவரையும் மிகக் கேவலமாகத் தாக்கப்பட்டனர். யாழ் ஹட்டன் நஷனல் வங்கி மற்றும் பெற்றோல் நிலையமொன்றையும் சேதப்படுத்தினர். எரியூட்டப்பட்ட கடைகளின்மீதுரயர்களை எறிந்தனர். தமது கடையின் தீயை அணைக்க முற்பட்ட சிலர் கடுமையாக தாக்கப்பட்டனர். சிலர் துப்பாக்கிச் சூட்டுக்கும்பலியானார்கள்.

## அனுராதபுர சம்பவம்

அதே நாள் நள்ளிரவில் தென்னிலங்கையை நோக்கியும் இக்கலவரம் வேகமாகப் பரவியது. அனுராதபுரம்புகையிரத நிலையத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிய புகைவண்டியும், கொழும்பிலிருந்து யாழ்நோக்கிய புகைவண்டியும் சந்தித்தன. அந்த நேரத்தில் அனுராதபுரமெங்கும் வதந்திகள் வேகமாகப்பரப்பப்பட்டிருந்தன.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சிங்களப் பெண்களின் முலைகள் அறுக்கப்பட்டு ஐஸ், மீன் பெட்டிகளில் இடப்படுகின்றன என்பன போன்ற வதந்திகளும் இதில் அடங்கும். யாழ் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவிகள் சுவருடன் வைத்து ஆணியால்தைக்கப்பட்டார்கள்என்றும், பொலிஸார் பலர் கொல்லப்பட்டனர்



என்றும் அனுராதபுர பொலிஸ் சுப்பிரின்டன்ட் கூறித்திரிந்ததை செவியுற்ற ஆதாரங்களும்கிடைத்தன.

இரு புகையிரதங்களிலிருந்தும் தமிழர்கள்சிதைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டனர். பலர் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். சில தமிழ்ப்பெண்கள் பலாத்காரமாக இறக்கப்பட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர்.

அனுராதபுரத்தில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த தமிழர்கள் மற்றும் தமிழ் அரச ஊழியர்கள் போன்றோரின் வீடுகள் எரிக்கப்பட்டு பொருட்கள் பல சூறையாடப்பட்டு அனுராதபுர புகைவண்டி நிலைய அதிபர், செட்டிக்குள புகைவண்டி அதிபர் ஆகியோரும் கொல்லப்பட்டவர்களில் சிலர்.

பல இடங்களில் பொலிஸார் ஈடுபபடாவிட்டாலும் கண்முன் நடக்கும் சம்பவங்களைக் கண்டும் காணாது விட்டனர்.

## பொலிஸார் ரவுடிகள் கூட்டு

வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் பொலிஸார் தான் பெருமளவு சூறையாடல், தாக்குதல் கொலை, சொத்தழிப்பு, பாலியல் வல்லுறவு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டனர். இவ்விடங்களில் காடையர் கூட்டம்பொலிஸாருடன்கைகோர்த்துக் கொண்டு வேட்டையாடியது. திருமலையில் 22, 23 ஆகிய இரு நாட்களில் 19 தமிழர்களது சடலங்கள் மருத்துவ மனைக்கு கொண்டு வரப்பட்டன. 28ம் திகதி சம்பளம் கொண்டுபோய்க்கொண்டிருந்த பசுபதி, இராசதுரை, மார்க்கண்டு, சித்திரவேலு ஆகியோர் வழியிலேயே சம்பளத்தோடு தங்கள் உயிரையும் பறிகொடுத்தனர். கண்டக்டர்கள் கணபதிப்பிள்ளை சீவரத்தினம் ஆகியோர் குத்திக்கொலை செய்யப்பட்டு வீதியில் கிடந்தனர்.

கொழும்பு, மலையகம் போன்ற பிரதேசங்களில் அதிகளவு சம்பவங்கள் பதிவாகின. அவை மிகவும் கொடூரம் மிக்கதாகவும் இருந்தன. கொழும்பு புறக்கோட்டை, செட்டியார் தெரு, நீர்கொழும்பு போன்ற இடங்களில் பல தமிழர் கடைகள் தீயிடப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன.

இந்தக் கலவரத்தில் தான் பட்டியலிட்டு தமிழ் மக்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் வெளிப்பட்டன. தேர்தல் இடாப்புகளைக் கொண்டு தமிழர் விலாசங்களை அடையாளங்கண்டு தேடி அடிக்கும் சம்பவங்கள் கொழும்பிலும் மலையகத்திலும் பரவலாக நடந்திருந்தன.

முன்னைநாள் நண்பர்களாக இருந்த அயலவர்கள் இன்றைய நாள் எதிரிகளானார்கள். 1958 கலவரத்தை விட கூடிய அளவு இம்முறை பல இந்துக்கோவில்கள் இடிக்கப்பட்டன. யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, களுத்துறை ஆகிய இடங்களில் இத்தகைய சம்பவங்கள் அதிகம் பதிவாகியிருந்தன. அன்றைய பருத்தித்துறைபாராளுமன்ற உறுப்பினர் தனது தொகுதியில் கோவில்களை உடைத்தவர்கள்யார், எவர் என்பதற்கு சாட்சியங்கள் உள்ளதாக பாராளுமன்ற உரையின்போது குறிப்பிட்டிருந்தார்.

## ஜே.ஆரின் புகழ் பெற்ற போர்ப் பிரகடனம்

இவ்வளவும்நடந்து கொண்டிருக்கும் போது ஜே.ஆர். ஜெயவர்தன பாராளுமன்றத்தில் அப்பாவி தமிழ் மக்களுக்கெதிராக போர்ப்பிரகடனம் செய்தார்.

*'நீங்கள் சண்டையிட விரும்பினால் நாங்களும் சண்டையிடத் தயார். போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்.'* என்று கொக்கரித்தார்.

அன்றைய இனப்படுகொலையை அடக்குவதற்குப் பதிலாக அதனைத் தூண்டும் வகையிலேயே இந்த உரை அமைந்திருந்தது. இதே போன்ற உரையை இதே. ஜே.ஆர். 83 கலவரத்தின் போதும் கூறியிருந்தது எம்மில்எல்லோருக்கும்நினைவிருக்கும். 83 யூலை இனப்படுகொலையின் போது தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி ஜே.ஆர். "ஆத்திரமூட்டப் பட்ட மக்களின் செயல்" என வன்செயல்களுக்கு நியாயம் கற்பித்திருந்தார்.

இந்த கலவரத்தில் 300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 10,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 80,000க்கும் மேற்பட்டோர் தங்களது சொத்துக்களை இழந்தனர். 50,000க்கும் மேற்பட்டோர் அகதிகளானார்கள். மலையகத்திலிருந்து பெருமளவு அகதிகள் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடம்பெயர்ந்தனர்.

கொழும்பில் மாத்திரம் 14,000 அகதிகளுக்கென பல முகாம்கள் இயங்கின. மேற்குறிப்பிட்ட சம்பவங்களில் பெரும்பாலானவற்றை தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம் (TRRO) எனும் அமைப்பு சன்சோனிக்கமிஷனிடம் சாட்சியங்களோடு முன்னிறுத்தியது.

கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கென்றே இந்த த.அ.ம.க. ஸ்தாபிக்கப்பட்டது. இந்த அமைப்பு சன்சோனி கமிஷன் முன் அளித்த சாட்சியங்கள் எல்லாவற்றையும் தொகுத்துசுருக்கியவடிவமாக "ஆவணி அமளி" என்ற நூலையும் வெளியிட்டிருந்தது. இந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட அகதிகளைக் கொழும்பிலிருந்து ஏற்றிச் சென்ற "லங்காராணி" கப்பல் அனுபவங்களை தொகுத்து அருளர் (அருட்பிரகாசம்) "லங்காராணி" ஒரு நூலொன்றையும் எழுதி வெளியிட்டிருந்தார். அந்நாவல் பிற்காலத்தில் இரண்டாம் பதிப்பாக ஈரோஸ் இயக்கத்தாலும் வெளியிடப்பட்டிருந்தது.

## போலி விசாரணைகள்

கலவரம் முடிந்ததன் பின் நவம்பர் 11ம்திகதியன்று ஜே.ஆரால்பேருக்காக நிறுவப்பட்டது தான் "77 கலவரம்" பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட எம்.சி.சன்சோனி தலைமையிலான ஆணைக்குழு. இந்த ஆணைக்குழு தனது அறிக்கையின் முடிவில் தமிழ் தலைவர்களே தமிழ் இளைஞர்களை இத்தகைய சம்பவங்களுக்கு தூண்டிவிட்டனர் என்றுகுறிப்பிட்டிருந்தது. மேலும் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படவில்லை. கண்கட்டி வித்தைக்காகவே இப்படியான ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது என்றால் அது மிகையாக இருக்க முடியாது.

இதே போன்ற அதிகாரத்தரப்பினால் நியமிக்கப்படும் இத்தகைய ஆணைக் குழுக்களின் பம்மாத்து வரலாற்றில் ஒன்றும் புதியதல்ல. 1974 உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த வன்செயல்களை விசாரணை செய்ய வென சிறிமா பண்டாரநாயக்க அரசாங்கத்தால் முன்னைநாள் நீதியரசர் கிறெட்சர் தலைமையிலான ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதுபின்னர் வெளியிட்ட அறிக்கையில் "குடிமக்கள் மீது பொலிஸார் நடாத்திய தாக்குதல் குறித்துஎவ்வித ஆதாரமும்கிடையாது" என குறிப்பிடப்பட்டிருந்தது. பொலிஸார் மற்றும் படையினரை அன்றும் தப்பச்செய்தது அரசு. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிட்டச் செய்யவில்லை.

"77 கலவரமானது 83 கலவரத்துக்கான பொலிஸாரின் ஒத்திகை"யென தமிழ்க் குடிமகன் "செந்நீர்க் கடலில் ஈழத்தமிழன்" எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

இந்த 20வருடத்தில்அந்தக்கலவரம் குறித்த மீள் பார்வை பல காரணங்களுக்காக அவசியப்படுகிறது.

பேரினவாதம் நிறுவனமயப்படுவது, அதற்கு அரசு தலைமை கொடுப்பது. அரசின் யந்திரங்களைக் கொண்டே அதனை மேலெழுப்புவது, கலவரங்களை நடாத்துவது, தூண்டுவது, ஒத்துழைப்பது, பின்னர் அதை பற்றி விசாரிப்பதற்கென போலி ஆணைக்குழுக்களை நியமிப்பது, பேருக்காக ஒரு அறிக்கையை வெளியிடச்செய்வது, அதில் குற்றங்கள் முழுவதையும் அப்பாவிகள் மீது சுமத்துவது, குற்றவாளிகளை தப்பச்செய்வது, நியாயமான ஜனநாயகக் கோரிக்கைகளைக் கூட அடக்குமுறைகளுக்கூடாக துப்பாக்கி முனையில் பணிய வைப்பது, என தொடர்ச்சியான போக்கை வரலாறு முழுவதும் கண்டு வருகிறோம்.

இப்படியான போக்குகளை வெறும் காடைத்தனம், ரவுடித்தனம் என குறுக்கி விட முடியாது என்பதையே அனுபவங்கள் காட்டுகின்றன. அவற்றுக்குப் பின்னால் இருக்கும் சிங்கள, பௌத்த, கொவிகம, ஆணாதிக்க, சுரண்டும் பண்புகளைக் கொண்ட சித்தாந்தக் கூறுகளையும் அவற்றின் ஐதீகங்களையும் விளங்கிக் கொண்டால்மட்டுமே இவற்றிலிருந்து தற்காப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். மற்றும்படி இந்தக்கூறுகளை தனியொரு காரணமாக நோக்கினால் அதன் விளைவுகள், பிரதிபலன்கள் எல்லாமே எதிர் விளைவுகளாகவே இருக்கும் என்பதை மட்டும் இப்போதைக்கு கூறி வைக்கலாம்.

-கோமதி




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே.. 37

# பெற்றோரின் தர்மசங்கடங்களும் கையாளும் வழிமுறைகளும் !

ஆங்கிலத்தில்: டொக்டர் ஜெயிம் ஜிஜினோஸ்ட், தமிழில்: அருண்



### கைமைதுனம், சுயஇன்பம் அல்லது சுய துஷ்பிரயோகம்

சிறுவயதுக் கைமைதுனப் பழக்கம் சிறுவர்களுக்கு சந்தோசத்தை அளிக்கலாம். ஆனால் இது நிச்சயமாக பெற்றோர்களுக்கு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. சிறுவர்கள் தாம் தனிமையில் இருக்கும் போது இதை சுய காதலாகவும், சலிப்படையும் போது ஒரு செயலில் ஈடுபடுவதாகவும், நிராகரிக்கப்படும் போது சுய ஆறுதலாகவும் இதைக் காண்கிறார்கள். பெற்றோர்களுக்கோ இது ஒரு வகை வெற்றுப் பரபரப்பையும், வெளிப்படையான அக்கறைக்குரியது என்ற உணர்வையும் ஏற்படுத்துகிறது. தனது ஐந்துவயது மகன் தனது ஆண்குறியை கையில் பிடித்தபடி ஆட்களுக்கு மத்தியில் நடந்து திரிந்தால் அது எந்த ஒரு முற்போக்கான தாய்க்கும் தர்மசங்கடத்தையும், மனவருத்தத்தையும் தரக்கூடிய ஒன்றுதான். பெற்றோர்களில் பலர் கைமைதுனம் ஒன்றும் ஆபத்தானதல்ல; சுகாதாரக் கேட்டையோ, மலட்டுத்தன்மையையோ அல்லது ஆண்மைக்குறைவையோ ஏற்படுத்தக்கூடியதல்ல என்றெல்லாம் படித்தும் கேள்விப்பட்டும் இருப்பார்கள். சிலவேளைகளில் அவர்களுக்கு இவை உண்மைதான் என்ற சொந்த அனுபவம் கூட இருக்கும். ஆனால் இந்த உறுதியளிப்பே அவர்களுக்கு பரபரப்பை ஏற்படுத்திவிடுகிறது. ஒருவர், நச்சுத்தன்மைகளைப் பட்டியலிட்டு இவை எவையும் இந்த உணவு பதார்த்தத்தில் இல்லையென்று குறிப்பிடப்படும் ஒரு உணவை வாங்க எப்படித்தயங்குவாரோ, அல்லது ஒருவன் தான் இந்த இந்தக் குற்றங்களை எல்லாம் செய்பவன் அல்ல என்று சில குற்றங்களைப் பட்டியலிட்டு சொல்லும் போது அவனை நம்பத்தயங்குகின்றோமோ அது போன்றதே இதுவும்.

அறிவு பூர்வமாக, சிறுவர்களது கைமைதுனப் பழக்கம் பாலுணர்வு வளர்ச்சியின் ஒரு இயற்கையான கட்டமே என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்கின்றனர். ஆயினும் உணர்வு பூர்வமாக அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. அதேவேளை, கைமைதனத்தை அனுமதிக்க மறுப்பதில் பெற்றோர்கள் முற்று முழுதாக தவறிழைப்பதாகவும் கொள்ள முடியாது.

சுய இன்பம் காணல், சிறுவர்களை தமது சகபாடிகளதும், பெற்றோர்களதும் செல்வாக்குக்குட்படுவதை குறைக்கக்கூடும். திருப்திக்கான இத்தகைய குறுக்கு வழிகளை ஒரு சிறுவன் நாடும் போது, அவன் தனது சந்தோசத்திற்காக யாரிடமும் தங்கியிருக்கவேண்டிய தேவையில்லாமல் போகிறது. பெரிய முயற்சிகள் எதுவுமில்லாமல், மற்றவர்களது உதவியும் இல்லாமல், முழு உலகமும் அதன் சந்தோசங்களும் அவனது கையில் வந்துவிடுகின்றன, எனவேதான் 'கைமைதுனத்தில் உள்ள குறைபாடு என்னவென்றால் அவன் இந்த வழிமூலம் சுவாரஸ்யமான மனிதர்களை சந்திக்க முடியாமல் போவது தான்' என்ற முதுமொழியில் ஓரளவு உண்மை இருக்கிறது என்கிறார்கள்.

தொடர்ச்சியான கைமைதுனம், விபத்துகட்கும், தோல்விகட்குமான உடனடிப்பரிகாரமாகவும், முயற்சிக்கும், சாதிப்பதற்கும் ஒரு இலகுவான பதிலீடாகவும் மாறிவிடக்கூடும்.

நாகரிக வாழ்வை நோக்கிய சிறுவர்களது புகுதல் ஆனது, அவர்கள் தமது உடனடிச் சந்தோசங்களை தாமதித்தல் அல்லது கைவிடுதன் மூலமே பெற்றோரதும் (பிற்காலத்தில்) சமூகத்தினதும் அங்கீகாரத்தைப் பெறக்கூடிய நீண்டகால சந்தோசங்களை நோக்கி நகரமுடியும் என்பதில் தங்கியிருக்கிறது. பெற்றோரது அன்பும், ஆதரவும் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவது மட்டுமல்ல. அவற்றை உருவாக்கவும் செய்கின்றன. அதாவது அன்புக்கான, அங்கீகாரத்துக்கான தேவைகளையும் உருவாக்குகின்றன. எனவே அன்பை என்னவென்று அறிந்த சிறுவர்களே தமக்குப் பரிச்சயமான உணர்வுக்கும், உதவிக்குமான எதிர்பார்ப்புடன் தமது பழக்கங்களை மாற்றிக்கொள்ளவோ திரும்பவோ அதிகளவு விரும்புவார்கள்.

பெற்றோர்கள் சுயஇன்பத்திற்கு எதிரான ஒரு மெல்லிய அமுக்கத்தைக் காட்டலாம். இக்கண்டிப்பு, இது உடலியல் சம்பந்தப்பட்ட ஒன்று என்பதற்காக அல்ல. மாறாக, முற்போக்கானதல்ல என்பதற்காகவே செய்யப்படவேண்டும். ஏனென்றால் இத்தகைய சுய இன்ப நடவடிக்கை சமூக உறவுகளுக்கோ, தனிப்பட்ட ஒருவரின் ஆளுமை வளர்ச்சிக்கோ உதவப்போவதில்லை. பெற்றோர்கள் வழங்கும் அமுக்கம் மிகவும் மெல்லியதாகவே இருக்க வேண்டும். அல்லது போனால் பலத்த பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். சிறுவர்களது திருப்திக்கு சுய இன்பம் மட்டுமே ஒரே வழியாக இருக்கிறது என்ற உணர்வு ஏற்படாவண்ணம் அவர்களை எமது அன்புள்ளும் வெளியுலகுப்பற்றிய ஆர்வத்துள்ளும் ஈடுபடவைத்தலே இப்பிரச்சினைக்குரிய தீர்வாகும். சிறுவர்களின் பிரதான சந்தோசம் அவர்களது தனிப்பட்ட உறவுகளாலும், சாதனைகளாலுமே வர வேண்டும். இது இவ்வாறு அமைந்தபின் சிறுவர்களிடையே காணப்படும் சுய இன்பம் காணல் ஒரு பிரச்சினையே அல்ல என்று ஆகிவிடும். உண்மையில் அது இன்னொரு தீர்வு மட்டுமே.

### தடுக்கப்பட்ட விளையாட்டுக்களும் பாலியல் விளையாட்டுக்களை கையாள்வதும்

குழந்தைகள் தமது உடல்பற்றி அறியவிரும்புகிறார்கள். சிறுவர்களோ ஒருவரை ஒருவர் முழுமையாக ஆராய விரும்புகிறார்கள். அறிவுக்கான இந்தத் தாகத்தை இலகுவாக மூழ்கடித்து விடமுடியாது. உடற்கூறு தொடர்பான வேறுபாடு அவர்களைக் குழப்புவதுடன், தம்மிடம் இருக்கும் உறுப்பு தவறானதல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே அடிக்கடி பிறரை ஆராயும் விருப்பையும் அது அவர்களிடம் தோற்றுவிக்கிறது.

உண்மைகள் புரியவைக்கப்பட்டு, அவர்களது உணர்வுகள் புரிந்து கொள்ளப்பட்ட பின்பும் கூட, சிறுவர்கள் தமக்குள் பரஸ்பர ஆராய்ச்சிகளிலும், கிளர்வூட்டுதலிலும் ஈடுபடக்கூடும். அவர்கள் 'டொக்டர்' விளையாட்டு அல்லது 'வீடு' விளையாட்டு போன்ற ஏதாவது ஒரு விளையாட்டை கண்டுபிடிக்கக்கூடும். இத்தகைய விளையாட்டுக்கள் அவர்களது ஆராய்ச்சிக்கு ஒருவகை 'சட்டபூர்வத்தன்மை'யை கொடுத்து விடுகிறது. அவர்கள் தமக்குள் பேசி உடன்பாடு கண்டுகொண்டு ஒழித்து பார்த்து விளையாடும் விளையாட்டை விளையாடக்கூடும். சில துணிச்சலுள்ள சிறுவர்கள் சில பெரிய விளையாட்டுக்களில் ஈடுபடக் கூடும். தமக்குள் கலந்து பேசிக்கொண்டு, அவர்கள் தமது பிறப்புறுப்புக்களை ஆராயவோ, உடலுறவில் ஈடுபடவோ கூடும்.

இத்தகைய தர்மசங்கடமான நிலைமைகளில் பெற்றோர்கள் தம்மை இழந்தவர்கள் ஆகின்றனர். அவர்கள் எதிர்காலத்தில் நடக்கக்கூடிய இதன் தொடர்ச்சிகள் பற்றி அளவுக்கதிகமாக பயப்படுகிறார்கள். தமது வீடுகளிலேயே காம வெறியர்கள் வளர்ந்து வருகிறார்களோ என்கிற அளவுக்கு அவர்கள் ஆஞ்சுகிறார்கள்.

பாலியல் விடயங்கள் தொடர்பாக அறிவுடைய பெற்றோர்களுக்குக் கூட, உணர்ச்சிவசப்படாமல் இத்தகைய நிலைமைகளை சமாளிக்க முடியாமல் போய் விடுகிறது. அவர்கள் பிள்ளைக்கு அடிக்காமலோ அல்லது அதை அவமானப் படுத்தாமலோ இருக்கலாம். ஆனால் இதற்கு எப்படி ஒரு நேர்ப்படியான எல்லைப்பாட்டை விதிப்பது என்பதை அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். சிறுவர்களது எதிர்கால பாலியல் வாழ்வை பாழாக்கிவிடும் என்பதற்காகவே தாம், அவர்களது இத்தகைய நடவடிக்கைகளில் தலையிடலாமா என்றும் சில பெற்றோர்கள் நினைக்கிறார்கள்.

இரகசிய பாலியல் விளையாட்டில் உள்ள தவறு என்ன? இது பிள்ளையை குற்ற உணர்வுக்குள்ளாக்கி வருத்துகின்றது. ஆனால் அது அதன் தேவைகளை திருப்தி செய்வதில்லை. ஒரு இரண்டுவயதுப் பெண் குழந்தை, ஒரு சிறுவன் எப்படி சிறுநீர் கழிக்கிறான் என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது என்றால், அது வெறுமனே உடற்கூறு சம்பந்தப்பட்ட ஒன்றே என்று நாம் கருதலாம். ஒரு பாலர் பள்ளியில் ஆண்குழந்தைகளும், பெண்குழந்தைகளும் ஒன்றாக மலசல கூடத்தைப் பாவிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களது ஆர்வம் நேரடிப்பார்வை மூலம் தீர்க்கப்படலாம். ஆனால் முதலாம் வகுபபுக்கு வரும்போது ஒரு குழந்தை இவற்றை போதியளவு பார்த்திருக்கும் என்றே கருதவேண்டும். இந்தவயதுக்குப் பிறகும் நடக்கும் ஒழித்துப் பார்த்தல், ஆராய்தல் என்பனவற்றை வெறும் பால்நிலை வேறுபாடுபற்றி அறியும் ஆர்வத்தால் செய்யப்படுபவையாக கொள்ள முடியாது. இத்தகைய செய்கைகள் மூலம் அந்தக்குழந்தை இவற்றை அறிவதில் ஆர்வமாக இருக்கிறது. அதற்கு உதவி தேவைப்படுகிறது என்பவற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனை இச்செயல்களுக்கு அனுமதிப்பதை விட இது அவசியமானதாகும். ஒரு குடிகாரனது தேவைகள், குடிப்பதன் மூலமாக நிறைவேற்றப்படாதது போலவே இந்தக் குழந்தையின் உண்மையான தேவைகள் எதையும் பார்ப்பதாலோ, தொடுவதாலோ பெற்றுக்கொள்ளப்பட முடியாதவையாகும். ஒழித்து அல்லது கள்ளத்தனமாகப் பார்க்கும் சிறுவர்களுக்கு உடனடியாகவும், அதிமுக்கியமாகவும் தேவைப்படுவது இத்தகைய நடவடிக்கைகளுக்கு அன்பான முறையிலும் நியாயமான முறையிலும் எல்லைகளைப் போடுதலாகும்.

ஒரு சிறுவனும், சிறுமியும் தமது உடைகளை அகற்றிவிட்டு அணைத்துக் கொண்டிருப்பார்களானால் நாம் அவர்களை நோக்கி ''என்ன செய்கிறீர்கள்'' என்று கேட்கக்கூடாது. (இப்படிக் கேட்கும் போது, அவர்கள் முழு உண்மையான ஒரு பதிலைச் சொன்னால் எவ்வளவு சங்கடமாக இருக்கும்?) குழந்தைகள் அவமானப்படுத்தப்படவோ, தரக்குறைவாகப் பேசப்படவோ கூடாது. அதேவேளை, அவர்கள் இலகுவான ஒரு மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பளிப்பதோ அல்லது 'இந்தக் குளிருக்குள் இப்படி உடுப்பே இல்லாமல் இருக்கலாமா?' என்பது போன்ற பொய்யான கேள்விகளைக் கேட்பதோ கூடாது.

உடனடியாக அவர்கள் உடை அணிந்து கொள்ளுமாறு சொல்லப்பட வேண்டும். அத்துடன் வேறு ஏதாவது விளையாட்டு விளையாடுமாறு கூறப்படலாம். மற்றைய சிறுமியோ அல்லது சிறுவனோ போன பின், இந்த விடயம் தொடர்பாக பெற்றோர் உறுதியாகவும், தெளிவாகவும் பேசவேண்டும். மிரட்டல்களோ, விசாரணைகளோ இன்றி தெளிவான வார்த்தைகளில் சொல்ல வேண்டும்.

''நீயும் பென்னியும் ஒருவர் உடையை ஒருவர் கழற்றிக் கொண்டிருந்தீர்கள். இது அனுமதிக்கப்பட முடியாதது. நீர் அவளுடைய பெண்குறியை தொட்டுக் கொண்டாய். இதுவும் அனுமதிக்க முடியாதது. சின்னப்பிள்ளைகள் இதைச் செய்கிறார்கள் ஏனென்றால், அவர்களுக்கு ஆண்பிள்ளைகட்கு ஆண்குறி இருக்கிறது. பெண் குழந்தைகட்கு அப்படி ஒன்று ஏன் இலலை என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். உமக்கும் இந்த விடயத்தில் சந்தேகம் இருந்தால் எங்களை கேட்கலாம். இவற்றை நாம் உமக்குப் புரியவைப்போம். ஆனால் யாரும் யாருடைய உடுப்பையும் கழற்ற முனையக் கூடாது.

எமது, அவர்களைத் திட்டாத இவ்வாறான அணுகுமுறையினால் குழந்தைகளின் பாலியல் பரிசோதனைகளுக்கு ஒரு எல்லை விதிக்கப்படுகிறது. இது குழந்தைகளின் பாலியல் மற்றும் காதலில் உள்ளது. அக்கறையைப் பாதிக்காத விதத்தில் அவர்கள் செயல்களை மட்டுப்படுத்துவதாக உள்ளது.

### ஊத்தைப் பேச்சுக்கள்

எந்த ஒரு பெற்றோரும் தமது குழந்தை அதன் வயது பிள்ளைகளால் உச்சரிக்கப்படும் ஊத்தைப் பேச்சுக்கள் குறித்து எதுவும் தெரியாதவர்களாக இருப்பதை விரும்புவதில்லை. இந்தச் சொற்கள் தடை செய்யப்பட்டவையாகவும், காரமானவையாகவும், வெளிப்பாட்டுச் சிறப்புற்றவையாகவும் இருப்பதால் இவற்றை சிறுவர்கள் மிகவும் பெரிய விடயமாகவும், முக்கியமானதாகவும் கருதுகிறார்கள். ஒரு இரகசிய இடத்தில் நின்று இத்தகைய கெட்டவார்த்தைகளைப் பேசுகையில் அவர்கள் தமது சுதந்திரத்தை பிரகடனம் செய்வதாக உணர்கிறார்கள்.

இந்த இரண்டெழுத்து, மூன்றெழுத்துச் சொற்கள் பேசப்படுவதற்கு சில இடங்கள் இருக்கின்றன என்பதை சிறுவர்களுக்கு தெளிவாக சொல்ல வேண்டும். இது தொடர்பான தமது அபிப்பிராயத்தை உறுதியாக பெற்றோர் தெரிவிக்க வேண்டும்.

தகப்பனார் சொல்லலாம்: ''இது பெண்கள் மத்தியிலோ பலர் மத்தியிலோ பேசும் விடயமல்ல. ஜோர்ஜ்.. இது ஆண்கள் மத்தியில், உனது சகபாடிகள் மத்தியில் பேசப்பட வேண்டிய பேச்சு''

தாயார் சொல்லலாம்: ''பையன்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு அவற்றைப் பேசுவது பிடிப்பதே இல்லை. எனக்கு அவற்றைப் பேசவே பிடிக்காது. வேறெங்காவது இவற்றை வைத்துக்கொள். இங்கே இவை தடைசெய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் குழந்தையின் உணர்வையும், விருப்பத்தையும் நாம் அடையாளம் காண்பதுடன் அதை மதிக்கவும் செய்கிறோம். ஆனால் அதன் நடவடிக்கைகளை வழிநடத்த சில எல்லைகளைப் போடுகிறோம்.

**வரும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடரும் விவாதம்:

# அமைப்பாதலும் ஆயுதந்தாங்குதலும் முற்று முழுதான பெண் விடுதலைக்கு தவிர்க்க இயலாதவை!

இராசம்மா அநாமிகா

காலச்சக்கரம் விரைந்து சுழன்று கொண்டிருக்கிறது. பெண்கள் அடுப்பங் கரையில் இருந்து அரசாட்சிக்கு வந்து விடுமளவிற்கு மாற்றங்களும், வளர்ச்சி களும் அரும்பு விட்டுக் கொண்டிருக்கும் போது, ஏன் மாற்றுக் கலாசாரம் வேண்டி இருபாலாரும் மும்முரமாக பேசிக்கொண்டும், போராடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், 'முற்போக்குப் பெண்ணிலைவாதி' என அழைக்கப்படும் கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்கள் 'பெண் புலிகளும், பெண் விடுதலைப் பிரச்சினையும்' என்ற தலைப்பில் சரிநிகர் பத்திரிகையில், அண்மையில் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரையில், மரபுக் கலாசாரம், பெண்மை பற்றி பிற்போக்குத்தனமான ஆணாதிக்க கருத்துக்களை அரங்கிற்கு கொண்டு வந்தது ஆச்சரியமாகவே உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பெண்கள் தமது கருத்துச் சுதந்திரத்தை வெளியுலகிற்கு (சமூகத்திற்கு) வெளிப்படுத்துவது இன்றியமையாததாகும். நானும் ஒரு பெண். பெண்ணுரிமையில் அக்கறை கொண்டவள் எனும் ரீதியில் இந்த கலந்துரையாடலில் பங்கு கொள்வதை விரும்புகிறேன்.

கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்கள், பேசவிரும்புவதை வெளிப்படையாக தனது நிலைப்பாடு என பகிரங்கமாகவே பேசியிருக்கலாம். தமிழர் மரபுக் கலாசாரம், சங்க கால இலக்கியம், மானிடவியலாளர்களின் ஆய்வு முடிவு என மேற்கோள் காட்டுவது இன்றைய கால கட்டத்தில் பொருத்தமற்ற ஒரு விடயமாகவே உள்ளது. ஆயினும் அவரின் கருத்துக்களை பரிசீலிப்பது இன்றியமையாததாகும்.

அந்த வகையில் முதலில் மரபுக் கலாசாரம் பற்றிப் பார்ப்போம். தமிழ் மரபுக் கலாசாரம் பற்றி மானிடவியலாளரின் காலாகாலமான கணிப்பு 'சமூகத்தில் பல குழந்தைகளைப் பெற்று வசதியுடைய மங்களகரமான பெண்ணே சிறந்த பெண்' என்பதாகும். இதனை மறு வார்த்தையில் கூறினால் தமிழ் மரபுக்கலாசாரத்தின்படி திருமணமான பெண், சேலையணிந்து, செம்பொட்டிட்டு (குங்குமம்) கூந்தல் நிறைய பூவைத்து, கொலுசு அணிந்து இருப்பதுடன், பல குழந்தைகளை பெற்று தனது கஷ்டங்களை யாருடனும் பகிர்ந்து கொள்ளாது, எல்லாவற்றையும் சகித்துக்கொண்டும், சிரித்துக் கொண்டும் அன்பு, இரக்கம், சாந்தம், மென்மை என்பவற்றின் பிறப்பிடமாகவும் தோன்றுபவள் தான் சிறந்த பெண் என்றே அர்த்தப்படும். மானிடவியலாளரின் கணிப்பு என்பது காலத்திற்கு காலம் மாற்றமடைந்து கொண்டிருப்பது ஒரு புறமிருக்க, இவர்கள் ஆணாதிக்க முதலாளிய சமூகத்திலுள்ள ஆணாதிக்க கருத்தியல்களை பரப்பும், பலம் பெறச் செய்யும் ஆண்களே என்றால் மிகையாகாது. இந்த வகையிலேயே தான் இன்று சமூகத்தில் பெண்மை, தாய்மை, மரபுக்கலாசாரம் பற்றி பேசப்படுகின்றது. இவ்வாறு திரும்பத்திரும்ப இவற்றை பலப்படுத்துவதனை செய்வதன் மூலம் தான் ஆணாதிக்க முதலாளிய சமூகத்திலுள்ள அரசு, ஆண்கள் யாவருமே பயனடைந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் மறுப்பதற்கு இல்லை. இந்த ஆணாதிக்க கருத்தியல்களுக்கு எதிராகத் தான் பெண்கள் மும்முரமாக போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் ஆணாதிக்க கருத்துக்களை சுவீகரித்துக் கொண்டவர்க்ள்தான், மரபார்ந்த கலாசாரம் என்ற போர்வையில் ஒழிந்து கொள்ள விரும்புபவர்கள். மேற்கொண்டு கலாசாரம் என்றால் என்ன? எனப்பார்ப்போம். அது என்றுமே மாற்றத்திற்குள்ளாகாத நிலையான ஒன்றா? கலாசாரம் என்பது தேங்கிப்போனதோ, நிலையானதோ அல்ல. அது தொடர்ந்து வளர்கதியில் மாறி வருவது எனலாம். மானிட வளர்ச்சிக் கேற்ப நெகிழ்ச்சியடையக் கூடியதே. எனவே சங்க கால இலக்கியத்தில் தமிழ்ப் பெண் எவ்வாறு கலாசார அடையாளப்படுத்தல்களை கொண்டிருந்தாளோ அதனையே தான் இன்றும் அப்படியே பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பது அறிவிற்கு பொருந்தாததாகும். முன்பெல்லாம் பெண்ணுக்கு ஏட்டறிவு, உத்தியோகம் தேவையில்லை என வீட்டுக்குள் பூட்டி வைத்த காலம் காலாவதியாகிவிட வில்லையா? அவற்றில் எல்லாம் நெகிழ்ச்சி கண்ட தமிழர் கலாசாரம் ஏன் ஆடை அணிகளை மட்டும் கட்டிக்காக்க வேண்டும்? ஆடை அலங்காரம் என்பது அவரவர் உடல் ஆரோக்கியத்திற்கும், சூழலுக்கும், வசதிக்கும், தேவைக்கும் ஏற்ப அணிந்து கொள்வது தான். இன்று பெண்கள் கல்வி, உத்தியோகம் என வெளியுலகிற்கு சமூக உற்பத்திக்கு வருகையில், ஆடை அணியும் மாற்றத்திற்கு உள்ளாகிறது. இன்று இந்து தமிழ்ப் பெண்களில் அனேகர் குதிக்காலைத்தொடும் சேலையை களைந்து விட்டு வசதியாக, தேவைக்கேற்ப, உடல் ஆரோக்கியத்திற்கான சூழலுக்கேற்ற ஆடைகளை தெரிவு செய்வதை பொதுவாகக் காணலாம். பொதுப் பயணிகளின் ஊர்தியில் சன நெருக்கடியான சந்தர்ப்பத்தில், [illegible] மாராப்பு விலகி, முந்தானை மிதிபடும் நிலையில் சேலையை பிடித்துக்கொண்டு வரும் நிலையும் ஏற்படுவதுண்டு. இந்த நிலையானது சொகுசு தனியார் வாகனம் வைத்திருப் பவர்களால் எவ்வளவு தூரம் விளங்கிக் கொள்ள முடியுமோ தெரியாது. ஆதலால் 18ம், 19ம் நூற்றாண்டுகளுடன் காலாவதியாகிப்போன பிற்போக்கு மரபுக் கலாசாரம் என்பது, 21ம் நூற்றாண்டை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் எமக்கு திரும்பத் திரும்ப சலிப்பூட்டும் அர்த்தமற்ற ஒன்றேயென்றால் மிகையாகாது. ஆகையால் இந்த மரபார்ந்த கலாசாரத்தை வளர்ச்சி, தேவை, வசதி, ஆரோக்கியம், சூழல் என்பவற்றை கருத்தில் கொண்டு மாற்றியமைக்க வேண்டிய இந்த காலகட்டத்தில், மாற்றுக் கலாசாரம் பற்றி பேசுவதே பொருத்தமான தாகவிருக்கும்.

அடுத்து பெண்மை பற்றிய கருத்தை பரிசீலிப்போம். இதுவும் மரபார்ந்த கலாசாரத்துடனும் சங்க கால இலக்கியத்துடனும் தான் தொடர்பு படுத்தப்பட்டு பேசப்படுவதாகும். கலாசாரம், மொழி, இலக்கியம் யாவுமே ஆண்களால் படைக்கப் பட்டதுடன், ஆணாதிக்க கருத்தியல்கள் புகுத்தப்பட்டவையே ஆகும். பெண்களிடையேயுள்ள உயிரியல் வேறுபாட்டிற்கு மேலாக அவர்களது ஆளுமை நடத்தைகள் போன்ற உளவியல் பண்புகளிலும் வேறுபாடுகளை (Gender) பால்நிலை சமூகமானது கற்பிக்கின்றது. இந்த வேறுபாட்டையே ஆண்மை (Masculine) பெண்மை (Femenine) என கூறுவர். உதாரணமாக 'சிக்மன் பிராய்ட்' என்ற உளவியலாளரின் கருத்துப்படி 'ஆண்மை' என்பது அதிகாரம், சுயம், சர்வவியாபகம், வீரம் என்பதைக் குறிப்பதாகும். 'பெண்மை' என்பது தங்கியிருத்தல், அன்பு, இரக்கம் என்பதைக் குறிப்பதாகவும் கூறுகிறார். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என தமிழ் இலக்கியத்தில் கூறப்படுவை யையே அவரும் குறிப்பிடுகிறார். இது 19ம், 20ம் நூற்றாண்டுகளின் ஆரம்பத்திலேயே பேசும் பொருளாகவிருந்து காலாவதியாகிப் போனதாகும். இன்று 20ம் நூற்றாண்டு கடைக் கூறுகளில் நவீன உளவியலாளர்கள் பிராய்ட்டின் கருத்தை மறுதலித்துள்ளார்கள். அதேவேளை நவீன மானிடவியலாளர்கள் பல்வேறுபட்ட பழங்குடிகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் படி இருபாலாரிடையேயும் ஆண்மை, பெண்மை பண்புகள் காணப்படுகின்றன என்ற முடிவை வைத்துள்ளார்கள். ஆண்களிடம் பெண்மைப் பண்புகளும், பெண்களிடம் ஆண்மைப் பண்புகளும் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ''வோல்காவில் இருந்து கங்கா வரை' எனும் நூலில் புராதன சமூகம் பற்றி கூறபடுகின்றது. அஃதே பெண்கள் ஆயுதங்கள் தாங்கி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை காட்டுகின்றது. இஃதானது பெண்களிடம் வீரப் பண்பு இருந்துள்ளது என்பதையே குறிக்கின்றது. இந்த ஆண்மை பெண்மை பால் வேறுபாடு (Gender) என்பது சமூகத்தினால் உருவாக்கப்பட்டதேயன்றி இயற்கையாக அமைந் ததல்ல என்ற முடிவிற்கு ஆய்வாளர்கள் வந்துள்ளார்கள்.

பெண்ணிலைவாதிகள் இந்த பால் வேறுபாட்டை எதிர்த்தே வந்துள்ளார்கள். 'பல்வேறு பெண்ணிலைவாதிகள் பெண்மை குறித்து விமர்சித்தாலும் அவர்கள் கூட பல இடங்களில் அதன் சாதகங்களை அனுபவித்திருக்கிறார்கள்' என கலாநிதி அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இஃது விமர்சனத்திற்குரிய கருத்தாகும். பால் வாதமிகுந்த ஆணாதிக்க சமூகத்தில் வாழும் பெண்கள் தவிர்க்க முடியாமல் சாதகமானவற்றை அனுபவித்திருக்கலாம். இந்த ஆணாதிக்க சமூகமானது ஆண்கள் பெண்களுக்கென குறிப்பான ஆளுமை பண்புகளை கற்பித்து இவற்றின் அடிப்படையில் சமூகப் பாத்திரங்களை வகுத்து உற்சாகப்படுத்தி இன்று நிர்ப்பந்திக்குமளவிற்கு உள்ளது. இளமையிலேயே ஒரு ஆண்பிள்ளை 'ஆண்மையுடனும்' பெண்பிள்ளை 'பெண்மையுடனும்' வளருமாறு நிர்ப்பந்திக்கிறது. இஃதானது இன, நிற, வர்க்க, கலாசார காரணிகளால் செல்வாக்கு செலுத்தப்படுகிறது என்றால் மிகையாகாது. இதனையே சங்க கால இலக்கிய மரபார்ந்த கலாசாரம் எனும் போர்வையில் கலாநிதி அவர்கள் பேசுகிறார்கள். எனவே ஆளுமைப் பண்புகள் என வரும் போது, அன்பு, இரக்கம், சாந்தம், வீரம், அதிகாரம், பொறுமை, சர்வவியாபகம் போன்ற பல்வேறு அம்சங்களும் இரு பாலரிடையேயும் வேண்டப்படும் மானிடப் பண்புகளே ஆகும்.

இன்று உலகப் பெண்ணிலைவாதிகள் பாலியல் உரிமை மறு உற்பத்தி உரிமை, மனித உரிமை பற்றி முக்கிய அம்சங்களாக பேசப்படுகிறது என கலாநிதி குறிப்பிட்டது உண்மைதான். பாலியல் உரிமை என்பதை பெண்ணிலைவாதிகள் ஆணாதிக்க ஒரு தார குடும்ப அமைப்பையே கேள்விக்குள்ளாக்குகிறார்கள். அந்தளவிற்கு உயர் நிலையில் இருந்து ஒத்த பாலிணரின் திருமணத்தையும் ஆதரிக்கிறார்கள். மறு உற்பத்தி உரிமை எனும் போது ஒவ்வொரு பெண்ணும் தமது உடல் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் அவளே குழந்தை பெறுவதா? வேண்டாமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்றளவிற்கு பெண்ணியக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்திருக்கும் இவ்வேளையில் பெண்மைபற்றி பேசுவது என்பது 'குப்பையை கிளரி மணப்பது போலாகும்'. எனவே பழையன கழித்து புதியன புகுவோம். 'அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு நாய்களுக்கு வேண்டுமாம்' என புரட்சிக் கவி பாரதி பல வருடங்களுக்கு முன்பே கூறியிருந்தார். எனவே இந்த சங்க கால இலக்கிய மரபார்ந்த கலாசாரம் பேசும் பிற்போக்கு கருத்துக்களை பெண்கள் மீது மீண்டும் மீண்டும் திணித்து மேலும் மேலும் அடக்குமுறை ஆணாதிக்க சமூகத்திற்கு துணை போகாது அன்று பாரதி கூறிய புரட்சிப் பெண்ணை முதற்படியாக கொள்வோமாக.

சமூகத்தில் பெண்கள் பல வகையான அடக்குமுறைகளுக்குள் நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஆணாதிக்க முதலாளியம், ஆணாதிக்க சமூகம், ஆணாதிக்க ஒருதார, குடும்ப அமைப்பு, ஆணாதிக்க அரசு, உட்பட பல்வேறு நிறுவனங்கள் இதற்கு துணை போகின்றது. உதாரணமாக ஒரு பெண்ணே மரபுக்கலாசாரம் பெண்மை பற்றி பேசுமளவிற்கு இந்த ஆணாதிக்க கருத்தியல்கள் ஆணாதிக்க சமூகத்தில் பலம் வாய்ந்ததாக இருக்கையில் அதனை எவ்வாறு பெண்கள் வென்றெடுப்பது என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாக உள்ளது. சீர்திருத்தம், மனித உரிமை பேசி தீர்த்து விடக்கூடிய விடயமாக இருந்தால் எப்போதோ தீர்த்திருக்கலாம். ''துப்பாக்கிக் குழலிருந்தே அதிகாரம் பிறக்கிறது'' என மாவோ கூறுகிறார். இதற்கு பெண் விடுதலையும் விதிவிலக்காக மாட்டாது. அஃதே பெண்கள் அடக்குமுறைக்கு எதிராக முற்றும் முழுதாக ஈடுபடுவதாயின் அமைப்பாவதும் ஆயுதந் தாங்குவதும் தவிர்க்க முடியாததாகவே அமையும். அதாவது 'புரட்சி' ஒன்றின் வெற்றியுடன் தான் பெண்கள் தமது அடக்குமுறையை உடைத்தெறியலாம் என்பது 'யாராலும் மறுத்துவிட முடியாத உண்மையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக நாடகப் பாரம்பரியத்திற்குப் புதிய வரவுகள்



மலையக மக்களின் வாழ்வியல் துயர்களை வெளிக்கொணரும் கலைவடிவங்களில் தற்கால மலையக நாடகங்கள் மகத்தான பாத்திரம் வகிக்கின்றன. இவை பெரும்பாலும் பாடசாலை நாடகங்களாகவும், ஆசிரியர் மாணவர்களால் நெறியாள்கைக்கும், நடிப்புக்கும் உள்ளான வையாகவும் காணப்படுகின்றன. இந்தவகையில் இலங்கையின் தமிழ்த்தினப் போட்டிகளுக்காக தயாரித்தளிக்கப்பட்ட மலையக வாழ்வியலையும், துயரச் சுமைகளையும் பின்புலமாகக் கொண்ட நாடகங்களில் பொகவந்தலாவ சென்மேரிஸ் மத்திய கல்லூரி மாணவர்கள் வழங்கிய,

**-''வெளிச்சம் வெளியே இல்லை'' (1995)**

*நெறியாள்கை - நிசாம்*

**-''மேட்டு நிலக்கண்ணீர்'' (1996)**

*நெறியாள்கை - கணபதி கனகராஜா*

**-''விடியலைத் தேடும் பூபாளங்கள்'' (1997)**

*நெறியாள்கை - கணபதி கனகராஜா*

என்பனவற்றின் பாத்திரம் மலையகத்தின் நாடகக்கலை வளர்ச்சிக்கும், அது வெளிப்படுத்தும் பொருள், சுவை, சொல் என்பவற்றின் காத்திரத்தன்மைக்கும் கட்டியம் கூறி நிற்கின்றன.

''வெளிச்சம் வெளியே இல்லை'' நாடகம் நிசாமின் நெறியாள்கையில் மாணவர்களின் அற்புதமான நடிப்பாற்றலில் வெளிப்பட்ட போது மலையக அரசியல் சக்திகளை கிலி கொள்ளவும், ஆட்டம் காணவும் செய்வதாக இருந்தது.

அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகளில் மேடையேற்றப்பட தடைவிதிக்கப்பட்டது. பல்வேறு சமூக சக்திகள் குறிப்பாக பத்திரிகைகள் (சரிநிகர், வீரகேசரி, தினகரன்) புத்திசீவிகள், அரசியலாளர்கள், சமூகநலன் விரும்பிகள் இடைவிடாத போராட்டத்தால் அகில இலங்கை ரீதியில் மேடையேற்றப் பட்டதோடு முதல் பரிசினையும் தட்டிக் கொண்டது. எனினும், சமூக நாடகப் பிரிவில் அதற்குரிய ''தங்கமடலை'' மேடையில் வழங்க தமிழ்த் தின விழா ஏற்பாட்டாளர்கள் மறுத்தனர்.

இந்த நாடகம் மலையக தமிழின மக்களின் வாழ்வியல் துயருக்கு பின்னணியான சமூக சக்திகளை அப்பலப்படுத்தியமை, தோட்ட நிர்வாகங்களின் காட்டுதர்பாரை விமர்சித்தமை மக்கள் எழுச்சி கொள்ளும் சூழ்நிலை குறித்த படிமங்களான வெளியிட்டமை காரணமாக மலையகத்தின் தானை தலைமைகளை நடுநடுங்கச் செய்தது.

1996ம் ஆண்டு கணபதி கனகராஜாவின் நெறியாள்கையில் உருவான ''மேட்டு நிலக் கண்ணீர்'' நாடகம் மாணவர்களின் இயல்பான நடிப்பால் மேலும் செழுமை பெற்றது. இந்தியாவில் இருந்து மலையகம் நோக்கிய பயணத்தில் பெரிய கங்காணியும், வெள்ளைத் துரைமாரும் புரிந்த ஏமாற்றுகளையும், மிரட்டல்களையும், மக்களின் அவலங்களையும் மலையகப் பாரம்பரிய கதைப்பாடல்களின் மெட்டிலமைந்த மாரியம்மன் தாலாட்டு, கோடாங்கி, பூசாரிமார் ஊடாக வெளிப்படுத்தும் இந்நாடகம், எழுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எவ்வாறு ஏகாதிபத்திய நலன் சார்ந்த சக்திகளால் ஒடுக்கப்பட்டனர் என்பதையும், கறுப்பு துரைமாரினதும், முதலாளிகளதும், அரசியலாளர்களதும் முகத்திரைகளைக் கிழித்துக் காட்டுகின்றது. அகில இலங்கைத் தமிழ்த் தின விழாவில் இரண்டாம்இடம் பெற்ற இந்நாடகம் கதை கூறும் பாணியிலும், நடிப்பை வெளிப்படுத்துவதிலும் கருத்துக்களை கூறுவதிலும் ஒரு பழைமையும், புதுமையும் கலந்த பாணியிலமைந்துள்ளது.

வெள்ளைத்துரைமாரின் அட்டகாசத்தை அடக்க முடியாத தொழிலாளர்கள் 'கிராமத்து கோடாங்கி' அடிக்கின்றனர். தோட்டத்தில் ஒடுக்குதலுக்கும், சுரண்டலுக்கும் இடையில் துயருறும் மக்கள் தம் மேல் பற்றிய சாமியாட்டம் மூலம் ''கேள்வி சொல்கின்றனர்'' 'பூசாரி யாரு வேணும் என கேட்க சாமியடிகள் தோட்ட துரைதான் வேணும்' எனக்கூறுகின்றனர். இவ்வாறான பாரம்பரிய கலைவடிவூடாக நவீன குறியீட்டு வடிவத்தில் நேரடியாக வெளிப் படுத்தும் மலையக மக்களின் இயலாமையும், வேதனைகளும், பொருமல்களும், உள்மன இடக்கைகளும் வெளிக் காட்டப்படுகின்றன.

போட்டிகளுக்காகவன்றி நாடகமொன்றைப் பேணவென தொடர்ந்து நாடகப் படைப்புக்களை செய்வதென தீர்மானித்துள்ள கல்லூரி, கணபதி கனகராஜாவின் நெறியாள்கையில் அதிபர் அ. இராசையாவின் வழிநடத்தலின் கீழ் ''விடியலைத் தேடும் பூபாளங்கள்'' நாடகம் செழுமையாக வெளிப்பட்டிருக்கிறது.

தோட்டங்களில் நிலவும் தோட்டத்துரைத் தனத்தின் பண்புகளில் ஒன்றான கங்காணிமாருக்கு லஞ்சம் கொடுத்து தொழிலாளரை ஒடுக்கவும், சுரண்டவும், பிளவுப்படுத்தவும் அடிப்படையான துரோகிகளின் கொட்டத்தை அம்பலப்படுத்துவதுடன் ஆரம்பமாகி தப்பு, உடுக்கு, கரகாட்டம் ஊடாக மாரியம்மன் தாலாட்டு வாடிக்கையின் சுமைகளை மீளாத் துயரினை வேதனைக்குரிய மாரியம்மனிடம் கூறுவதாக அமைந்தபாடலுடன் மெருகேறி இறுதியில் தாம் துணிந்துவிட்டோம் இனி உயர்ந்திடுவோம் என தன்னம்பிக்கை பெறுவதாக முடிவடைகிறது கதைப்பாடல்.

தோட்டத் தலைவர்களை பிளவுப்படுத்தும் தந்திரம்.

சாதிப்பிரச்சினை கிளப்பப்படும் பின்னணி.

ஆண்டபரம்பரை என்ற உயர்சாதி திமிரின் பின்னணி

தோட்ட சிறார்களை கொத்தடிமை தொழிலுக்கு கடத்தும் கும்பல்களின் கொட்டம்.

தொண்டர் நிறுவனங்களின் மோசடிகள், பகற் கொள்ளை

மலையக தொழிற்சங்கவாதிகளின் தேர்தல் பித்தலாட்டம்

அரசியல் மோசடிகள்

ஆணைக்குழு அமைக்கின்ற கேலிக்கூத்து

இறுதியில் தொழிலாளர் தன் சுயபலத்தால் சாதிக்க வேண்டியதே விடியல் என்ற குறியீடு.

என மலையக தமிழ் மக்களின் எல்லாத்துயர்களையும் கூறி, துரோகிகளை அம்பலப்படுத்தி இறுதியில் விடியலுக்கான பாதையும் விடியலுக்கான போராட்ட சக்தியையும் வெளிக்காட்டி நிற்கிறது ''விடியலை தேடும் பூபாளம்''

வீட்டு வேலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு நாய், பூனைக்கு கொடுக்கும் உணவு கூட கொடுக்காமல் எஜமானிகள் துன்புறுத்தும் விதம் மனதை உருக செய்கின்றது.

*''போனாளே குடும்பச் சுமையை குறைக்க*
*போனாளே*
*கொழும்பை நோக்கிப் போனாளே*
*பால்குடி மறந்திடா பாச்சிளம் பாலகன்*
*பாலை மறந்து போனாளே...*

*......*
*ஓடி ஓடி உழைத்த பாப்பா உனக்கு*
*ஒய்வெடுக்க நேரம்மில்ல*
*நாய்க்கும் தீனியுண்டு நம்ப வயித்துக்கு*
*தீனியில்லை.''*

என்ற பாடல் நெஞ்சை நெருடும் விதமாய் பாடப்படுகிறது.

மனித உரிமைக்கான போராட்டம்'' என்ற பெயரில் நடக்கும் கேளிகளை மிகச்சரியாக அம்பலப்படுத்துகிறது நாடகம்.

ஏ உழைப்பவனே துயரில் வழியில் வீழ்ந்தவனே சுரண்டல் காரனின் சூழ்ச்சியில் நீ அடிமைப்பட்டுக் கிடப்பது நியாயமா...?

- இந்த விலங்குக்கு வயது 200....

- நீயும் அடிமை, நானும் அடிமை நாளை உன் குஞ்சும் அடிமை....

-200 வருட அடிமைத்தனத்தை அறுப்போம், ஒன்றுபடுவோம், தீப்பிழம்பாய் மாறி எழுவோம் மீண்டும் மீண்டும் தொடர்ந்து போராடுவோம்.

என்ற மாணவர்களின் வீராவேசக் குரல்கள் இறுதியில் ஒன்றுபட்ட முயற்சி.

விடியலைத் தேடும் பூபாளம் அரங்கத்தை வேண்டிநிற்கவில்லை. திறந்த மேடை நாடகமாயினும், பார்வையாளர்களும் நாடக நடிகரும் ஒன்றிணைந்து உணர்கின்ற உத்தி கையாளப்பட்டுள்ளது.

நாடகம் குறியீடுகள், படிமங்கள், பிரச்சாரம் என்பனவற்றை கொண்டிருக்கின்ற போதும் அவை தெளிவான செய்திகளை பாமர பார்வையாளனுக்கும் வழங்குவதில், வெற்றி பெறுகிறது எனலாம்.

''விடியலை தேடும் பூபாளங்கள்'' நாடகம் முடிந்தாலும் கூட எழுந்திருக்க முடியாத பிரமை பிடித்துக்கொள்கிறது. நெஞ்சம் கனக்கிறது. மனதுக்குள் என்னென்னவோ செய்கிறது.

செத்த மனிதருக்கும் செயலுக்கும் கொடுக்கத்தக்க அற்புதமான முயற்சி.

மலையக நாடகப் பாரம்பரியத்தில் இந்நாடகங்கள் ஒரு புதிய வரவுகள் மட்டுமல்ல வரலாற்றை முன்நகர்த்தும் சாதனங்களும் தான் என்பதைக் காலம் உணர்த்தும்.

**பொன். பிரபாகரன்**
**பொகவந்தலாவை**

## படையினரின்...

9. 44 வயது பெண் ஐந்து படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.
*மட்டக்களப்பு, நவம்பர் 1996.*

10. ஆடைத் தொழிற்சாலை ஊழியரான பெண் ஒருவர் இராணுவத்தினர் ஒருவரின் அசிட் வீச்சுக்கு இலக்காகி எரிகாயங்களுக்கு உள்ளானார்.
*டிசம்பர் 1996.*

11. பெண் இராணுவ வீரரினால் அசிட் வீசப்பட்டு எரிகாயங்களுக்கு உள்ளானார்.
*டிசம்பர் 1996.*

12. பெண் கணவனுக்கு உணவு எடுத்துச் செல்லும் போது மூன்று விசேட அதிரடிப் படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டார்.
*மட்டக்களப்பு; ஜனவரி 1997.*

13. ஒரே வீட்டைச் சேர்ந்த மூன்று பெண்கள் மூன்று இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டனர்:
*மட்டக்களப்பு, ஜனவரி 1997.*

14. 18வயதுப் பெண், பொலிஸ் கான்ஸ்டபிளினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டுள்ளார்:
*கம்பஹா ஜனவரி 1997.*

15. பெண் ஒருவர் ஊர்காவல் படையினரால் கொல்லப்பட்டார்.
*அத்துருகிரிய. ஜனவரி 1997.*

16. பெண் ஒருவர் பொலிஸ்காரரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.
*வவுனியா ஜனவரி 1997*

17. 28 வயதுப் பெண் ஒருவர் இராணுவத்தினர் என்று கூறப்படும் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார்.
*இரத்தினபுரி ஜனவரி 1997.*

18. 30 வயதுப் பெண் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டார்:
*மண்டூர், மட்டக்களப்பு ஜனவரி 1997.*

19. உடல் ஊனமுற்ற பெண் ஒருவர் இராணுவத்தினால் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்டார்.
*வலப்பனை, நுவரெலியா, பெப்ரவரி 1997.*

20. 15 வயது பெண் ஒருவர் ஊர்க்காவல் படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார்.
*கந்தளாய் பெப்ரவரி 1997.*

21. இளம் பெண் ஒருவர் மாற்றாந் தந்தையாகிய இராணுவ வீரரினால் தொந்தரவுக்குள்ளானார்.
*மார்ச் 1997.*

22. சுஜித்தாவும் ஜேசுதாவும் புளொட் உறுப்பினர்கள் என்ற சொல்லப்படுவோரால் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டுள்ளனர்.
*வவுனியா மார்ச் 1997.*

23. பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் முன்னேற்றத்திற்கு தடையாயிருந்த பெண் குத்திக் கொலை செய்யப் பட்டார்.
*கல்பிட்டி, புத்தளம் ஏப்ரல் 1997.*

24. பெண் இராணுவத்திலிருந்த தப்பியோடியோரால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.
*களுத்துறை ,வெலிபென்ன மே 1997.*

25. பெண் இராணுவத்திலிருந்து தப்பியோடிய குழுவினரால் குத்திக் கொலை செய்ப்பட்டார்.
*களுத்துறை , மே 1997*

26. 35 வயது கோணேஸ்வரி என்னும் பெண் பொலிஸ் குழுவினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டு பின் கிரனைட்டை பெண்குறியில் வைத்து வெடிக்கச் செய்து கொல்லப்பட்டார்.
*சென்ரல் காம்ப், அம்பாறை மே 1997.*

27. ஒரு குழந்தைக்குத் தாயான பெண் விமானப்படை வீரரால் சுடப்பட்டார்.
*பலாங்கொடை ஜூன் 1997.*

28. 13 வயது பெண் இராணுவத் தினால் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டார்.
*அளவ்வை. குருணாகல் ஜூன் 1997.*

29. 12 வயது பெண் இராணுவத்தி லிருந்து தப்பியோரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டார்.
*கிரிபவ, அநுராதபுரம், ஜூலை 1997.*


30. விஜயராணி இராணுவத்தினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டார்:
*அராலி, யாழ்ப்பாணம், ஜூலை 1997*

31. 22 வயது சந்திரகலா ஆசிரியை இரண்டு இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார்.
*வல்லைவெளி வடமாராட்சி ஜூலை 1997.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நாமம்

திசேரா

தன்னுடைய இறுதிக் காலம் முழுவதும் நான் தான் துணை என்று சொன்ன ஐயா, எதற்கும் எனக்கே முக்கியத்துவம் கொடுத்து அன்பு பொழிந்த ஐயா, என்னை நம்பாமல் நான்பொய் சொல்லி விட்டதாக எண்ணி என்னை வெறுப்பாகப் பார்த்த நிமிடங்கள்... அந்த ஒவ்வொரு செக்கன்களும் முள்ளால் இதயத்தை, எனது நம்பிக்கையை, எதிரே தெரிந்த விடிவெள்ளியை மூடி மறைத்து இல்லாமைப் படுத்திய பொழுதே இன்னமும் இமைக்குள் ஒட்டிக் கிடக்கின்றது. எதையும் கேளாமல் தனது மகனை நம்பாமல் பெரிய சேரின் பேச்சில் மயங்கி கட்டுண்டு கிடந்த பொழுது தான் என்னுடன் எனது படிப்பையும் விழுங்க வாய் திறந்தது. இன்னொரு பார்வையில் அவரைக் குற்றத்தைச் சுமக்கவிட முடியவுமில்லை. அவர் தான் மழைத் தூற்றலுக்குக் கூட பாடசாலையை நெருங்காதவராச்சே. வடகிழக்குப் போல் ஏதாவது பிரச்சசினையா இருந்திருந்தாலும், குண்டு வெடிப்பு, ரவுண்டப் என்றோ அல்லது அகதியாகவோ போயிருப்பார். அதுவு மில்லை. அவரு மட்டும் படிச்சிருந்தா எனை இன்னும் மேலே மேலே தூக்கி விட்டிருப்பார். என்னை நம்பியும் இருப்பார். அந்தாள் போடுற பாணிக்கெல்லாம் ஐயா மயங்கி இருக்க மாட்டார்.

பெரியசேர் என்ன தான் மாயா ஜாலமா கதைப்பார் தெரியுமா? அதனால் எங்கள் பாடசாலைக்கருகில் பாறையே இல்லை. எல்லாம் அவருடைய கதையில் உருகி ஆற்றோடு கலந்து போனது.

அன்றைய காலை அசெம்பிளியில் எல்லோரும் கதைக்காம வரிசையில் நிற்கும் போது தான் ''ஆண்டு பத்துக்கு எக்சாம் பீஸ் பதினேழு ரூபா ஐம்பது சதம் எல்லாரும் குடுத்துப்புடணும்'' என்று உரக்கக் கூறினார். எப்போதும் அவருக்கு எங்கள் வகுப்பென்றால் ''ராபு'' மாதிரித்தான் பிடிக்கவே பிடிக்காது.

பக்கத்து வீட்டு நாதன் கூட ஆண்டு பத்துத் தான் படிக்கிறான். ஆனா அவன் படிக்கிறது டவுன் பெரிய ஸ்கூல்ல. அங்கே பாடவேளை நாற்பது நிமிடமும் படித்துக் கொடுப்பார்களாம். இங்கு போல பத்து நிமிஷம் படிப்பித்திட்டு ''உபதேசம்'' என்று அறுவல் கதையெல்லாம் கேட்க வேண்டியதில்லையாம். நான் இரவில் அவனுடன் தான் படிப்பேன். அவர்களுக்குப் பரீட்சைக் கட்டணம் பன்னிரண்டு ரூபா தானாம். இது மூன்றாம் தவணைப் பரீட்சையாதலால் எல்லோருக்கும் ஒரே வினாத்தாள் தான் மத்திய மாகாணத்திலிருந்து வரும். அப்படியானால் எங்களுக்கு மட்டுமேன் கூடுதலாக கேட்க வேண்டுமென்ற கேள்வி நண்டு போல கல்லிடைக்குள் போய் வரமறுத்துக் கொண்டது.

இதைக் கேட்கப் போன ஐயாதான் பெரியசேர் ஊதிய மகுடிக்குக் கட்டுப்பட்டு அடங்கி வந்து என்னைக் கொத்துவது போல சீறுகிறார். ஏதோ நான் தான் அதிகமாகச் சல்லியை வாங்கிச் செலவழித்து விட்டதாக உறுமுகிறார். குசினி வீட்டுக்குள் இருந்து இருமிக் கொண்டிருக்கும் அம்மாவிற்கு முணுமுணுப்பதும், இடைக்கிடையே உரத்து ''இவனை.. இவன'' என இழுப்பதும் பக்கத்து வீட்டு ''குண்டு மல்லி ரெண்டு ரூபா கூந்தலேறி உதிரும்பூ கோடி ரூபா'' என்பதற்கிடையில் கேட்கிறது. ஏதோ என்னைப் பற்றி பிளேட்டை திருப்பி இருக்கிறார் என்பது மட்டும் அவரது தொந்தியைப் போல பெரிதாக தெளிவாக தெரிந்தது.

சரஸ்வதி பூசையிலிருந்து எங்கள் வகுப்புடன் அதிலும் என்னுடன் இப்படித் தான் எதிர்க் கட்சிக்காரனைப் போலவோ, சமாதானத்தை யுத்தம் நோக்குவது போலவோ பார்வையால் துளைப்பார். பாடசாலை பாடசாலை என நாம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி மரியாதையாக இருந்தால் தோட்டத்துக்கு தண்ணி போடுவதில் இருந்து உடுப்பு தோய்க்கிறது என சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்துவார். இதற்காகவேனும் ''நீங்கள் என் பிள்ளைகளைப் போல'' என்ற வசனத்தைப் பிரயோகித்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது. எங்களது தாய், தந்தையர் தோட்டத்துக் கூலிகள் என்பது சுயநல சுயலாபத்தின் மத்தியில் மறைகின்றது போலும்.

சரஸ்வதி பூசையில் கிளாஸ் பூசைக்கு ஐம்பது ரூபாவும், ஸ்கூல் பூசைக்கு முப்பது ரூபாவுமாக மொத்தம் எண்பது ரூபாய் கேட்டார். அப்போது அம்மா சுகயீனமாக மலைக்கு போகாததனால் அப்பாவின் சம்பளம் மட்டும் தான். அப்பாவிடம் சரஸ்வதி பூசைக்கு பணம் கேட்டால் ''அந்தாள் புள்ளயன்ற சல்லியில தின்னு காலத்த ஓட்டப் பாக்கிறானாக்கும்'' என தரமாட்டேன் என்று விட்டார். பெரியசேர் தான் வகுப்பாசிரியர். ஒவ்வொரு நாளும் ''இந்தப் பிச்சக்காக குடுகாட்டி ஒனக்கு என்னத்துக்குடா ஸ்கூல்'' கேட்டுக்கொண்டே முடியை இழுத்து தலையை குனியவைத்து கையை விரித்து ''படீர்'' என ஒன்றும், கை விரலை மடக்கி கையை குவித்து ''டும்'' ஒன்றும் போட்டு முடியைப் பிடித்து நிமிர்த்தி கன்னங்களில் மாறி மாறி அறைவார். இப்படியே மூன்றுநாள் அவரது கோபத்தை என் மேலுக்கு திணித்தார். அந்தக் கோபத்தில் தான் கண் திறந்தது வாய்; ''சேர் எனக்கு எண்பது ரூபா குடுக்கேலாது. அம்மா சுகமில்லாததனால வேல இல்ல. அதனால கஷ்டம். வேணும்னா வகுப்பு பூசைக்கு அம்பது ரூபா குடுக்கிறன்'' என்றவுடன் கண்களை ரத்தமாக்கி பிதுக்கி சில சென்ரி மீற்றர் முன்னுக்கு தள்ளி அவரது வலது கையால் எனது இடது கன்னத்தில் அறைந்து சொன்னார்.

''எல்லாரும் குடுக்கக்குள்ள உனக்கு ஏன்டா குடுக்கேலாது. ஒங்கப்பன் குடிக்கிற சல்லியில வாங்கித்து வா'' எனவும், ''சேர் அப்பா குடிக்கிறல்லிங்க'' ''என்னடா நாயே எதிர்த்தா கதைக்கிற'' என்று மாறி மாறி அடித்து ''அப்பாவை கூட்டித்து வா'' என்று அனுப்பி விட்டார். எங்கும் உண்மை கதைக்கப் பட்டால் பிரச்சினை தான். கொள்ளையனிடம் போய் இரக்கம் ஒழுக்கம் பற்றிக் கதைப்பது தவறு தான். ஏழாவது அறிவு மூளையில்கிடந்து உணர்த்தியதாய் அறியப்பட்டு நடந்தேன்.

சரஸ்வதி பூசையெல்லாம் முடிந்தபின் போனேன். எதுவும் நடக்காததுவாய் மணி அடித்து, அடித்து அன்று முடிந்து நாளையும் அதைத்தொடர்ந்த பொழுதுகளும் ஒழுகி ஓடிப்போயின. இவைகளுக்கு இடையிலும் எல்லாவற்றுக்கும் (பிரச்சினைகளுக்குத்தான்) நானே சிருஷ்டி என்ற அடிப்படையில் வாங்கி தோலுக்கடியில் சேமித்து வீங்கிய கன்னத்துடன் சென்ற பொழுதுகளும் இடைக்கிடை சிக்குண்டு கிடந்ததும் உண்மை.

அந்த பெரிய சேரைப்போல பேர் போடுறதுக்கும், மற்றவர் உடைமைகளை ஆசைப்படுவதற்கும் எதிர்ப்பவர்கள் தூசு போல பறந்து விடுவார்கள். மற்றவர்களுக்கு சேரவேண்டிய உடைமைக்கு அடிபட்டு அதைத் தட்டிப்பறிப்பதென்பது இங்கு வழமையாகிப் போனது. நான் மாகாண மட்டத்தில் ஓடி முதலாமிடம். எங்கள் பாலா சேர் தான் ஓடுற முறை, வேகத்தை அதிகரிக்க நுனிக்காலைப் பயன்படுத்துதல் என நுணுக்க முறையெல்லாம் சொல்லிக் கொடுத்து. அவரும் என்னுடன் ஓடி ஓடி பயிற்றுவித்தார். அகில இலங்கை மட்டத்துக்காக போகும் பொழுது என்னை தனியா அழைத்து ''பெரிய சேர் தான் பழக்கினாரு'' என்று கூறும்படி சொன்னார். அப்படியே நான் சொன்னாலும் நம்புவதற்கு அவருடைய உடலமைப்பு கூட மறுப்புத் தெரிவிக்கும். இப்படியே நாக்கை தொங்கப் போட்டு அலைவதும், ஊத்தைக் கானிலிருந்து ஆறுவரை எல்லாத்தையும் நக்குவது என ஊறிப்போன நடத்தை. இவர் பழைய கதைகளெல்லாம் கிண்டப் போனா எல்லாம் மூக்கப்பொத்தி ஓடணும். அவ்வளவு நாத்தம். யாரும் நல்லா இருந்தா, படிச்சி இருந்தா பிடிக்காது.

பாலா சேர் புதிதாக ஆசிரிய நியமனம் பெற்று காலையில் வந்தார். பக்கத்து தோட்டத்தில லயத்தில இருந்து தான் வருவார். எங்களுக்கு சந்தோசமான, பெருமையான நிகழ்வாகவே இருந்தது. அந்திக்கு பாடசாலை விட்டதும், ''பாலா ஒரு மாதிரி அவன் கிட்டல்லாம் கூட வச்சிக்க வேணா''ன்னு மரியாதை இல்லாமவெல்லாம் கதைத்தார்பெரிய சேர். ஏனென்று ஆரம்பம் இருட்டி கறுத்து இருந்தாலும் லயத்திலிருந்து வாறது, இனம் இனத்தோடு சேரும் என்பது மாதிரி, சமூகப்பற்று இருந்து ஏங்களை ஆளாக்க முனையலாம் என்று இவர் கேடயமாக்கினார் எங்களை என்பது மாத்திரம் வானத்தை மறைத்து ஏமாந்த மேகங்களை காலம் கொண்டு போக தென்பட்டது. காசுக் கணக்கு, நேர அட்டவணை என்று என்னவெல்லாமோ கேட்டதால், தோட்டத்தில் அந்திக்கு பாலா சேர் வேற கட்சி, பெரிய பெண்கள் படிப்பதால் பிள்ளைகளுடன் கதைப்பது என்று கதைத்துக் கொண்டார்கள்.

அந்தக் கதைக்கு உருவம் கொடுத்தது, பூதாகரமாக்கி அலைய விட்டது இந்த பெரிய சேர்தான்.

''பெரிய சேர், பெரிய சேர்'' என்பது எங்கள் அதிபர்தான். அந்தப்பேர் அவருடைய உருவத்துக்கு மாத்திரமே பொருத்தமானது. மற்றவர்களுக்கு படிப்பிக்க தெரியா. அதுக்கு தெரியா, இதுக்கு தெரியா என குறை கூறுவதும், தன்னை உயர்த்தி இமயமலையாக பரிமாணப்படுத்தி காண்பிப்பதும் தான் தினமும் பாடசாலையில் நடக்கும். பாடசாலைகளில் எல்லாம் பிள்ளைகள் படிக்க வேண்டும், உயர வேண்டும் என்றே தான் எழுதப்பட்டிருக்கும். இங்கு அப்படியல்ல. ''அதிபரின் புகழும் ஆசான் வளமும்'' என்றுதான் படிப்பார்கள். இவருக்காகவே எழுதப்பட்டு ''பேர்'' போடவிரும்புற இவரைக் கண்டாலே எனக்கு மட்டுமில்ல. கிளாஸ்ல ஒருவருக்கும் பிடிக்காது ''சீனியர் பிரிபக்ட்'' ஒருநாள் காரியாலயத்திற்கு வைக்க பூ கொண்டு வராததினால் பூக்கொண்டு வர நாலு கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள வீட்டுக்கு திருப்பி அனுப்பினார். இந்த தூரம் நடந்தே தான் போகவேண்டும். பஸ் இல்லை. ஆனால் பாடசாலை தோட்டத்தில் பூ இருப்பது வேறு விடயம். அங்குள்ள பூக்களைப் பறிக்க விடமாட்டார். அழகு கெட்டு விடுமாம். இப்படியேதான் சல்லிக்கார பையனுகள மட்டும் நல்லா வச்சிருப்பார். லயத்தில இருந்து வந்தா ஒரே வேலை. இதனாலேயே நிறைய பேர் விலகி வேறு பாடசாலையில் சேர்ந்து விட்டார்கள். கடைசியாக விலகியது நாதன்.

அவன் பெரிய சேர் வீட்டில் அவரின் மகனை விட்டுவரப் போனான். (பாடசாலை நேரம்தான் டீச்சர் வீட்டில் தான் இருப்பார். காலையில் ''சைன்'' பண்ணி வீட்டுக்கு போவது அல்லது உட்கார்ந்து கதைப்பது என்பதெல்லாம் சகஜம்) மகேந்திரன் பாடசாலையில் எட்டாம் ஆண்டு படிக்கும் மகேந்திரன் டீச்சரினுடைய உடுப்பு (உடுப்பென்றால் உள்ளாடை முதல் சகலமும்) தோய்த்துக் கொண்டிருக்க ''வெக்கமில்லயாட ஒனக்கு. நீ பயதானே இதெல்லாம் தோய்க்கிற'' என்று சொல்லி விட்டு வந்து விட்டான். நாதனுக்கு அந்திக்கு சரியான அடி. பின்னர் இங்கிருந்து சுதந்திரமாய் போய் விட்டான்.

இது மாதிரியே பலர் மாறிப் போய் விட்டார்கள். சமூகக்கல்வி புத்தகத்துக்குள் இருக்கும் கட்டை மீசை ஹிட்லர் அடிக்கடி என்ன பெரிய மீசையாய் இங்கேயே தங்கிவிட்டார். அதனாலேயே பலர் ஊர்ந்து விட்டார்கள். எனக்குத்தெரிய ஏழுபேர் ஸ்கூலுக்கு வருவதே இல்லை. இதில் சுரேசும், கோபியும் புடவைக் கடையிலும், சாந்தா, ரவி, நாகேஷ் சைவக்கடையிலும் ராஜா செலவுக்கடையிலும், முரளி கண்டியிலயும் இருக்கானாம். கொழும்புக்கு சென்றால் இவரைப் பத்தி கேட்காமலேயே இருக்க மாட்டார்கள். அப்படி அன்பென்பதற்கில்லை. படிப்பை குழிக்குள் புதைத்த பெருமை அவருக்குரியதென்ற நல்லெண்ணத்தில் தான். இவர்களை விட நிறைய பேர் விலகி வேற பாடசாலையில் படிக்கிறார்கள்.

அம்மா சுகமா இருந்து மலைக்கு போனால் அல்லது ஐயா செத்திருக்காமல் இருந்திருந்தால் நானும் வேற பாடசாலையில் படித்திருப்பேன். சமூகத்தை முன்னேற்ற ''நல்ல ஆசிரியனாக'' வந்திருப்பேன். இப்படி இரும்புக் கடையில் துருப்பிடித்திருக்க மாட்டேன். இதையெல்லாம் யோசிக்க அவரைக் கொல்ல வேண்டும். கடித்து தின்ன வேண்டும் போல கடைவாய்ப்பல் முளைக்கும். ஆனால்... ஆனால்... அது நடக்கும் விரைவில் விரைவில் நசுக்கப்பட்ட பலரால் காலத்தால் நடந்தே தீரும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பின் நவீனத்துவம்

## சில விமர்சனக்குறிப்புகள் (இறுதிப் பகுதி)

### பின் நவீனத்துவத்தின் வெகுசனக்கலாசாரப் பாதிப்பு -

பின் நவீனத்துவம் மேற்கத்தேய வெகுசன இலக்கியத்துடன் (Mas Communicatioal literature) சமரசம் செய்து கொண்டு உருவானது எனக் கூறப்படுகின்றது. மேற்கத்தேய நவீனத்துவம் அடிக்கடி அதன் இலக்கியப்படைப்புகள் வெகுசனங்களை விட்டு விலகி நின்றதால் அதில் அலுப்புற்ற பின்நவீனத்துவ படைப்பாளிகள் வெகுசன ரசனைக் கூறுகளான காமம், திகில் என்பவற்றை தங்கள் படைப்புகளில் பயன்படுத்தத் தொடங்கினர். விளைவாக பின் நவீனத்துவப் படைப்பாளிகளின் நாவல், கதை போன்றன, இவற்றைக் காட்சிப்படுத்தலாயினர்.

நாகரிக வளர்ச்சியும் அறிவியல் முதிர்ச்சியும் கண்ட நவீன உலகில் அனைத்து துறைகளும் பரிணாமங்களை தரிசிக்க வேண்டும் என்ற மேற்குலகின் வேணவா மனித வாழ்வின் அடிப்படை பண்புகளிலும் பரிணாமத்தை, வளர்ச்சி நிலையை எதிர்பார்த்து அதனை சீரழித்துள்ளன. ஒழுக்கப் பரிணாமம் "Moral Evolution" என்ற மேற்கத்தேய தத்துவ விசாரணை ஈற்றில் மனிதனை எத்தகைய பெறுமானமுமற்ற ஒரு நிர்வாணப் பொருளாக ஆக்கிவிட்டது. அவ்வகை நிர்வாண நாகரிகத்தையே மேற்கத்தேய கலாசார சூழலில் உருப்பெற்ற இலக்கிய கோட்பாடும் பிரதிபலிக்கின்றது என்பதில் சிஞ்சிற்றும் ஐயமில்லை.

உண்மையில் காமமும், திகிலும் ஒரு வாசகனின் புறவயமான சமூக வாழ்வின் ஒழுக்க விழுமியங்களுக்கு குந்தகத்தை விளைவிக்கின்றதே தவிர மனிதனை ஓர் அர்த்தமுள்ள ஜிவியாக நோக்க பின் நவீனத்துவம் முன்வரவில்லை.


### மன அழுத்தமும் = பின் நவீனத்துவமும்

*Depression and Post Modernism*

நவீன அரசாங்கங்கள் மனித வரலாற்றில் தோன்றிய அரசுகளைவிட அதிகார வர்க்கங்களை (Beroucracy) அதிகம் கொண்டவை. அடக்கு முறை, பொருளாதார நிர்வாக உரிமை, கருத்துத் தொடர்பு மேலாதிக்கம் ஆகியவற்றை அவை தம் அதிகாரத்தின் கீழ் வைத்துள்ளன. இந்நிலையில் படைப்பாளி என்ன செய்யமுடியும்? அவனுடைய பணிகள் என்ன? என்பன விடை கண்டாகவேண்டிய வினாக்களாகும். நவீனத்துவ கால கட்டத்தில் படைப்பாளர்கள் எல்லாவற்றின் மேலும் நம்பிக்கை இழந்தவர்களாக இருந்தாலும் படைப்பின் மீதும் படைப்பாளர் மீதும் மிகவும் நம்பிக்கை கொண்டிருந்தனர். கவிஞனின் தனித்தன்மை அவனுடைய சுதந்திரம் ஆகியவற்றை பெரிதும் நம்பியிருந்தனர். எனவேதான் அவர்கள் தங்கள் நோக்கத்தை அடைந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் மானிட குலத்தை முன்னிறுத்தி பேசலாயினர். ஆனால் பின்நவீனத்துவப் படைப்பாளிக்கு இந்த நம்பிக்கையில்லை. சமுதாயத்திலும் மக்களிடத்திலும் அதிர்ச்சி தருவது சாத்தியம் அற்றது என்ற அவனது நம்பிக்கையில் இத்தகைய அதிகார வர்க்கங்களது அராஜகங்களுக்கான படைப்பாளியின் எதிர்ப்பு, கோபம், வேகம் அனைத்தும் அபத்தமாகி விடுகிறது. எனவே மனப்பிறழ்வுத் தன்மையின் உந்துகணைகள் அவனது இலக்கியப் படைப்பில் நுழைவிக்கப்படுகின்றது. எனவேதான் பெரும்பாலான பின்நவீனத்துவப் படைப்புகளில் விரக்தி, நம்பிக்கையீனம் இழையோடுவதை அவதானிக்கலாம்.

பின் நவீனத்துவப்படைப்புகளில் ஆங்கிலம் வழியாக கிடைப்பவற்றில் லெஸ்லி பீட்டரின் 'Waiting For the end' (முடிவுக்காக காத்திருத்தல்) ஜாய்ஸ் கரோல் ஏட்ஸ் எழுதிய Matter and Energy (சடமும் சக்தியும்) டானியல் ஸ்டோன் எழுதிய "The Suicide Acadamy" தற்கொலைக் கழகம் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

மேற்குறிப்பிட்ட அனைத்துப் படைப்புகளும் நவீனத்துவத்தில் இல்லாத இன்னொரு குறைபாட்டைக் கொண்டிருப்பதாக ஆங்கிலத் திறனாய்வாளர் அங்கலாய்க்கின்றனர். அதுவே இறுக்கமான மொழி நடையும் கருத்து நிலைச் சிக்கலுமாகும். இதனால் வாசகர்கள் சிலரிடம், வாசித்து விளங்காவிடினும் தானும் வாசித்துள்ளேன்



என்ற தாழ்வு மனப்பான்மையை பின்நவீனத்துவப் படைப்புகள் தோற்றுவிக்கின்றன. அதேபோல் மிக நுட்பமான மொழி அமைப்பியலையும் குறையீட்டியலையும் இவை பயன்படுத்தியுள்ளன. மற்றும் குறிப்பிட்ட ஒரு சூழலை மாத்திரம் இவை விழித்துப் பேசுகின்றன. நவீனத்துவ இலக்கிய அமைப்புகள் போன்று மனித இனத்தையே விழித்துப் பேசும் பண்பு இவற்றில் அறவே இல்லை. பன்முகத்தன்மை பின்நவீனத்துவப் படைப்பில் இல்லாத நிலை அதன் மற்றொரு குறைபாடாகும்.

எது எவ்வாறிருப்பினும் பின்நவீனத்துவ இலக்கியப் போக்கு கணிசமான செல்வாக்கை கிழக்கத்தேய நாடுகளில் பெற்றுக்கொள்ளவில்லை. எமது அயல்நாடான இந்தியாவில் கூட சமூக சீர்திருத்த நாவல்கள், கவிதைகள் பெரும்பாலும் யதார்த்த வாதத்தைச் சார்ந்தே வெளிவந்துகொண்டிருக்கின்றன. மறுபுறம் நவீனத்துவ அலைகளே இந்திய மொழிகளில் வலுவாக வீசிக்கொண்டிருக்கின்றன.

நவீனத்துவம் இந்தியாவில் சுதந்திர தாகத்திலும் சுதந்திரத்துக்கான போராட்டத்தை வழிநடாத்துவதிலும் அதற்குரிய பங்காற்றியுள்ளது. மானுட சமத்துவத்தையும் தார்மீக சரிவுகளையும் முன்னிறுத்திப் பேசுவதில் விவாதிப்பதில் நவீனத்துவம் ஓரளவு முன்னிற்கின்றது. ஆனால் பின்நவீனத்துவம் சூழல் மீது அக்கறையோ சூழல்மீது பிடிப்போ இல்லாத விமர்சனங்களை வெறும் மேற்கத்தேய போக்குக்கூடாக அறிமுகப்படுத்துகின்றது. பின்நவீனத்துவம் உருவாக காரணமாக அமைந்த மேற்கத்தேய சமூக சூழல் கிழக்கத்திய சமூக சூழல், பண்பாடு, கலாசாரம், நாகரீகம் என்பவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். சடவாதத்தையும் (Meterialism) பயனீட்டு வாதத்தையும் (Utilieriarism) அடிப்படையாகக் கொண்ட மேற்கு நாகரீகம் மதத்தையும் தனிமனித சமூக நலன்களையும் அனுசரிக்கும் கிழக்கத்தேய நாடுகளின் மீது திணிக்கும் ஒரு கலாசார மேலாதிக்கத்தின் (Cultural Hegemony) பிரத்தியட்சமான வெளிப்பாடே பின் நவீனத்துவ இலக்கியப் போக்கு என்பது மிகையன்று.

இலக்கியம் உட்பட அனைத்தையும் வர்த்தகத்தன்மை கொண்ட நுகர் பொருளாகக் கருதும் மேற்கு நாகரீக வாழ்க்கை முறை (Life Systam) எப்போதும் தனது சிந்தனையை சர்வமயப்படுத்தவே (Globalization) முனைந்துள்ளன. அதற்கான மற்றொரு ஊடகமாக அது இன்று பின் நவீனத்துவம் என்ற மறை கரத்தைப் பிரயோகிக்கின்றது. இதன் மூலம் மேற்குலகில் தோன்றிய அனைத்து இலக்கியவாதிகளும் மனித வாழ்விற்குப் பாதகமான அம்சங்களையே முன்னிறுத்தினர் என்று பொருள் அல்ல. பலர் சிறந்த ஆக்க இலக்கியங்களின் முக்கியத்துவத்தையும் முன்மொழிந்துள்ளனர்.

"The Great Poets are Judged by the Frame of Mind they induce" என்று கூறிய Emenson, The Fundemental of Poem is the Criticism of Life என்ற Arnold ஆகியோர் மேற்கத்தேய இலக்கியப் பிரதிநிதிகளே எனினும் சமுதாயத்தின் முன்னோக்கிய வளர்ச்சிப் போக்கிற்கும் இலக்கியத்திற்குமிடையிலான இன்றியமையாத தொடர்பை உணர்த்தியவர்களுள் இவர்கள் முக்கியமானவர்கள்.

எனவே, பின்நவீனத்துவ இலக்கியப் போக்கை கீழைத்தேய நாடுகளின் படைப்பாளிகள் உள்வாங்குவது எப்போதும் பாதகமான விளைவுகளையே கொண்டு வரும்; ஏனெனில் நாம் முன் குறித்துக் காட்டியது போல் பிரபஞ்சம் மனிதன் வாழ்க்கை ஆகியவற்றை சத்தியம், உண்மை, நன்மை என்பவற்றோடு இணைத்து உருவாக்கப்படுவதே உண்மையான இலக்கியம். கவிஞர்கள் பயனற்றவர்கள் அவர்களை நாடு கடத்த வேண்டும் என்று கண்டித்த பிளேட்டோ, கவிஞர்கள் ஒருவகையில் ஞான ஆசிரியர்கள் என்று சிலாகித்தது மானுடத்தின் விமோசனத்திற்கும் இலக்கியத்திற்கும் இடையிலான இணைப்பை புடம் போட்டுக் காட்டுகிறது.

**துணை நின்றவை.**


1. இலக்கியக்கலை = ஞானசம்பந்தன்.
2. கலை இலக்கியக் கோட்பாடுகள்.
3. தேசிய இலக்கியமும் மரபு போராட்டமும். - சுபைர் இளங்கீரன்
4. இலக்கியத் திறனில் ஒரு பார்வை, - அந்தனி ஜீவா.
5. World literature perpectives and prospects.
6. ART and Literature Stalin.
7. சுபமங்களா - 1996
8. கணையாழி - 1996 ஜனவரி


# குறிப்பேடு

## கவனிக்க வேண்டிய ஆபாசம்

கடந்த இதழில் வந்த குறிப்பேடு பற்றி தன் கருத்துக்களை ஆதங்கமாக சரிநிகருக்கு எழுதியனுப்பியுள்ளார் சி. சிவசேகரம் அவர்கள். குறிப்பேட்டை வாசிக்கும் வாசகர்களுக்காக அக் கடிதத்தை அவ்வாறே பிரசுரிக்கிறோம். இது ஒருவகைப் பொறுப்பெடுப்பு.

'கோழைத்தனம்', 'தனிப்பட்ட தாக்குதல்' என்ற இரு விடயங்களை அவர் சுட்டிக் காட்டுகிறார். இதுவரை வந்த குறிப்பேடுகளில் இவை இருந்ததா என்பதை வாசகர்கள் தீர்மானிக்கட்டும். ஆனால் 'அறியாமை' இருந்திருக்கலாம் என்று யாரும் சொன்னால் ஒத்துக் கொள்கிறேன். பல்வேறு விடயங்கள் பற்றி அறிவதற்கான, அறிந்தவர்கள் பேச எழுத வைப்பதற்கான நோக்கங்களை 'குறிப்பேடு' கொண்டிருந்தது என்பதும் பொய்யான ஒன்றல்ல.

''பத்தி எழுத்து, மறைந்திருந்து தாக்கும் விஷ விலங்குகட்கு நிழல்தரும் பற்றை ஆகிவிடக்கூடாது என்பது,என் விருப்பம். இது பற்றி முன்பும் சரிநிகருக்கு எழுதியிருக்கிறேன். தமது கோழைத்தனமான தாக்குதல்கட்குத் தக்க கவசம் மாதிரி, அதுவும் தானறியாத கவசமணிந்த துரியோதனன், போர்க்களத்தில் இயங்க முடியாது, ஒரு பொதிமாடு போல நின்றது மாதிரி மதிலுக்குப் பின்னாலிருந்து கல்லெறிகிறவர்கள் சிலர், புனைபெயர்களைப் பாவிப்பார்கள். இவ்விதமான கோழைத்தனத்துக்கு அவர்கள் பொறுப்பேற்க முடியாத பட்சத்தில் வெளியிடும் ஏடாவது பொறுப்பேற்க வேண்டும்.

விஷயச் சார்பாக எழுதுவதற்கு அல்லாமல் தனிப்பட்ட தாக்குதல்களுக்காகவே பத்திகளும், புனைபெயர்களும் பயன்படுவது நல்ல ஏடுகட்கு உகந்ததல்ல. பல சமயம் ஒரு ஏடு அதன் மிகக் கீழ்த்தரமான ஒரு எழுத்தாலேயே மதிப்பிடப்பட இடமுண்டு. எந்தவிதமான விமர்சனம் ஈழத்தில் பரவலாக இல்லை என்று பெருமையடைகிறோமோ அதையே வளர்த்தெடுப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறவர்கள் நம்மைச் சீண்டி விட முயலும் போதும், அந்த மட்டத்திற்கு இறங்காமலே நம்மால் எழுத இயலும். சரிநிகரில் 'குறிப்பேடு' எனப்படும் (சத்யா) பத்தி பற்றி நான் எழுதுவது அவரது எழுத்துப் பற்றிய மரியாதையால் அல்ல. அது வரும் ஏடு பற்றிய மரியாதையாலே தான். அல்லாத பட்சத்தில், வேறு இடங்களிற் செய்துள்ளது போல, அதை அலட்சியம் செய்திருப்பேன்.

பாரதி பற்றி மகாகவி என்கிற பிரேமை(?)களையப்படுவதன் அவசியம் பற்றி யாரோ தமிழகத்தில் எழுதியது, இங்கு சரிநிகர் 128ல், அன்று பாரதியை 'மகாகவி' என்று அழைக்க மறுத்த 'சனாதனிகளை' மறந்து வாய்ப்பாடு மாதிரி ஒப்பிக்கப்படுகிறது. பாரதியின் பேரின் முன்னுள்ள எந்த அடைமொழியையும் தூக்கி எறிந்து விட்டாலும் பாரதியின் கவிதைகள், எந்த மயக்கத்தின் துணையுமின்றி, மலைபோலத்தான் இன்னமும் ஓங்கி நிற்கின்றன. (இது எங்கள் மண்ணின் மஹாகவிக்கும் பொருந்தும்) பாரதியைப் பார்ப்பான் என்ற ஒரே காரணத்துக்காக நிராகரிக்கும் சில தலித்தியப் புனிதத்துவவாதிகளது நோக்கத்தை அறியாமல், அவர்கள் எங்கேயோ வாசித்து, பாதி விளங்கியும் பாதி விளங்காமலும் எழுதுகிற 'விஞ்ஞான ரீதியான' விளக்கங்களை எல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் நாங்கள் இல்லை. தலித்தியம் பேசி தலித்துக்களையே பிளவுபடுத்துகிற இவர்களைப் போலன்றி அண்டை மாநில தலித் படைப்பாளிகள் ஞானிகள். அவர்களுக்குப் பாரதியின் அருமை விளங்கும். தமிழ்நாட்டில் தலித்தியம் பேசுகிற பலரை விட, பாரதி தாழ்த்தப்பட்ட மக்களது பெரிய நண்பன் என்பது பற்றிப் பறை சாற்றும் எவருக்கும் எந்த மயக்கமும் இல்லை.

மேற்கோள் கூறப்படும் விமர்சனக் கட்டுடைப்புத் திருவாசகத்தின் பெருமையைக் கவனிப்போம்.

''விமர்சனத்தின் வேலை பிரதியின் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பது அல்ல. பிரதி என்ன பொருள் கொள்கிறது என்பதைக் காட்டிலும் அது என்ன செய்கிறது, அதாவது வாசகன் மீது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகிறது எனச் சொல்வதே நம்பணி'' இங்கே எந்த வாசகன் சார்பாக விமர்சகனின் தேடல் நடக்கிறது? வாசகனுக்கு வாசகன் வேறுபாடு இல்லையா? வாசகனில் காலத்துடன் மாற்றம் நிகழ்வது இல்லையா? அப்படியாயின் எந்த நேரத்தில் எந்த வாசகனின் சார்பில் விமர்சகனது தேடல் நிகழ்கிறது? வாசகன் மீதான விளைவுகள் பற்றிய கூற்றை வழங்க முனையும் விமர்சகனுக்கு அக்கூற்றை வழங்க என்ன தகுதி இருக்கிறது?

ஒரு எழுத்தையே புரிந்து கொள்ளத் திணறுகிற விமர்சகன், ஒரு வாசகர் சமூகம் கருதுவது பற்றிச் செம்மையாக எழுத முடியுமா? உண்மையில், தங்களுடைய மன விகாரங்களைப் படைப்பாளி மீது சுமத்துவதற்கு வாசகனை ஒரு வாகனமாக்குகிற முயற்சிகளை அண்மையில் நிறையவே கண்டுள்ளோம்.

இனி 'ஆத்மா'வின் விமர்சனக் கூட்டம்பற்றி குறிப்புக்கு வருவோம். தன்னுடைய கண்ணோட்டத்திலிருந்து தன் கவிதையைப் பார்க்குமாறு வேண்டுதல் விடுத்த 'ஆத்மா', அன்று 'நான் எனக்கு மனதில் படுகிற மாதிரித்தான் எழுதுவேன் என்று கூறி விமர்சனக் கருத்து எதையுமே, விமர்சர்கள் பொதுவாக அவருக்கு அனுதாபமாகவே விமர்சித்ததைக் கூடக் கணிப்பில் எடாமல், ஏற்க மறுத்தது பற்றிப் பத்திக்காரர் ஏனோ சொல்லவில்லை.

எப்போதும் 'வாசக விளைவுகளின்' படியே விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதில்லை. தான் ஒரு வாசகன் என்ற நிலையினின்று விமர்சகன் பூரணமாக ஒதுங்குவது இயலாதது தான். ஆயினும். ஒரு படைப்பின் செய்நேர்த்தி, கருத்துத்தெளிவு, அழகியற் கூறுகள் என்பன பற்றியும் ஒரு படைப்பு முன்வைக்கப்படும் முறை அது கூறமுனைவதற்கு எவ்வளவு வலிவு சேர்க்கிறது என்பது பற்றியும் நேர்மையாக மதிப்பிட நம்மிற் பலருக்கு இயலும்.

படைப்பாளியின் பார்வையின்று விமர்சகர்களைப் பார்க்கும்படி வேண்டும் படைப்பாளி, (விமர்சகர் உட்பட) வாசகர்களது நிலையிலிருந்து தன் படைப்பை ஒரு சிறிதாவது பார்த்தால் பல படைப்புக்கள் மேலும் செம்மையாக அமைய இடமுண்டு. அந்தப் பத்தியின் இறுதியில் வருகிற வாக்கியங்கள் பற்றி நான் சென்ற மாதம் நுஃமான் மூலம் அறிந்தேன். கவனிப்பதற்கே தகாத பிதற்றல்களை மீளவும் சரிநிகரில் கொட்ட வேண்டிய தேவை விளங்கவில்லை.

(சுபமங்களாவில் அ. மார்க்ஸ் ஆகியோர் விடாது எழுதி வந்தபோது, கோமல் சுவாமி நாதன் பார்ப்பனர் என்ற தகவலை ஒருவேளை அவர்கள் அறியாமலிருந்திருக்கக்கூடும்)

எதையோ பற்றி ஆபாசம், ஆபாசம் என்று அலறுகிறவர்கள், இந்த இலக்கிய ஆபாசம் பற்றிக் கொஞ்சம் கவனிக்கலாம்.''

சிவசேகரம்.

www.tamilarangam.net









# இந்திய ஜனாதிபதியும் பிரேமதாசவும் ஒடுக்கப்பட்ட மக்களும்

கே. நந்தரத்ன

தமிழில் : ரத்னா

கடந்த இரண்டு வாரங்களுக்குள் இந்தியாவில் நிகழ்ந்த இரத்தம் சிந்தாத அமைதியான புரட்சியை, ஆசிய சமூகத்தை நன்கறிந்தவர்களுக்கு கூட விளங்கிக்கொள்ள முடியாமலிருந்திக்கும். எழுபது வயதான கோச்சேரி ராமன் நாராயணன், புதிய இந்திய ஜனாதிபதியாக ராஷ்டிரபதி பவனை அடையும்போது, இந்திய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டாம் கௌதம புத்தராக விளங்கிய அம்பேத்கரின் சிலைக்கு செருப்பு மாலை அணிவித்த சம்பவத்துக்கு எதிராக குழப்பம் ஏற்படுத்தியதன் காரணமாக, தாழ்த்தப்பட்டவர்கள் பன்னிருவர் மும்பாயில் கொல்லப்பட்டனர். நூறுபேர் வரையில் காயமடைந்தனர்.

இந்திய சனத்தொகையில் 60% மான தலித்களில் (Untouchables) ஒருவர் நாட்டின் ஜனாதிபதி பதவியை அடைய, இந்தியா ''ஜனநாயக சுதந்திரம்'' பெற்று 50 வருடங்கள் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. சனத்தொகையில் பெரும்பான்மையானோராயினும் ''தீண்டத்தகாத'' தலித்கள், இந்து இந்தியாவின் ஒரு பகுதியை ஒரு போதும் கோர வில்லை. சுதந்திர இந்தியா, தாகூரின் இலட்சிய நாடாக மாறாததன் காரணமாக கோபமடைந்த சீக்கியர்கள் தாம் சுதந்திரத்திற்காக சிந்திய இரத்தத்திற்கு பழிவாங்க நேரு - காந்தி பரம்பரையை சுட்டுக்கொன்றது போல் இவர்கள் சுட்டுக் கொள்ள வில்லை. ஆயினும் அவர்கள் பார்ப்பனியத்தின் மீது தாக்குதல் தொடுக்க மறக்கவில்லை. அத்தாக்குதல் 1950ல் அம்பேத்கர் உடன் 10 லட்சம் தலித்கள் புத்தமதத்தைத் தழுவிக் கொண்டதன் மூலமாக மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி நாராயணன் தலித் குலத்தில் பிறந்தாலும் அவர் பிரபுக்கள் இனத்தைச் சேர்ந்தவர் என்ற தர்க்கம், படித்தவர்கள் மத்தியிலுள்ளது. லண்டன் பல்கலைக் கழகத்தில் பொருளியல் பட்டம் பெற்று, ஹெரல்ட் லஸ்கியின் (என்.எம்.பெரேராவின் குரு) சீடராகி, ஸ்ரீ நேரு அவர்களின் மூலம் தூதுவர் சேவைக்குச் சென்ற நாராயணன் இந்தியபிரபு வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் எனினும், பிராமண சாதியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா ராஷ்டிரபதி பவனிலிருந்து வெளியேறும் போது அவ்விடத்தை பெற நாராயணனுடன் போட்டியிட்டு 50,000 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்த (நாராயணனுக்கு 9,56,290 வாக்குகள்) முன்னாள் தேர்தல் ஆணையாளர் டி.என்.சேஷன் அவர்களைப் பார்க்கும் போது, அவர் பிரபுத்துவத்தை விட தலித்தை பிரதிநிதித்துவப் படுத்தினார் என்பது தெளிவு. மும்பாயில் சாதி மேலாதிக்கம், செருப்பு மாலைகள் அணிவிப்பதும், கொலை செய்வதில் ஈடுபடுவதும் இதன் ஒரு பகுதியாகவே ஆகும்.

''சுதந்திர இலங்கையில்'' ஜனநாயக புரட்சி 'ஹின்ன வம்சத்'தைச் சேர்ந்த (சலாகம சாதியின் ஒரு கிளைச்சாதி) ஆர். பிரேமதாச



ஜனாதிபதியாகியதன் மூலம் பூரணத்துவம் அடைந்ததாக தயான் ஜயதிலக்க கூறிக் கொள்வார்.

பிரேமதாசா ஜனாதிபதியாகியமை, இலங்கையின் தாழ்த்தப்பட்டவர்களது கீரிடத்தை சுமக்கவே என ஏன் கருதமாட்டீர்கள் என ஜயதேவ உயங்கொட எம்மைக் கேட்கக்கூடும். ஜனசவிய - கிராம எழுச்சி வாதம் என்பவற்றை நாம் பிரேமதாசாவுக்கு தயாரித்துக் கொடுத்தது அவர் தாழ்த்தப்பட்டவர்களது ஜனநாயகத்துக்காக போரிட்டதன் காரணமாக என சாதி ராஜ்யத்திலிருந்து குதித்து வந்த சுசில் சிறிவர்தன தர்க்கம் பேசலாம். இவற்றுக்கு சிறந்த பதில் தெற்கின் பொது வேளார் சாதியைச் சேர்ந்த குணதாச அமரசேகர அவர்களிடம் உள்ளது. அவர் ஒரு முறை இவ்வாறு கூறினார்.

''கண்டி யுகத்துக்கு முன் சிங்கள பௌத்தர்களுக்கிடையே சாதி பேதம் இருக்கவில்லை. நாயக்கர் ஆட்சியின் கீழேயே இந்து சாதி வாதம் இலங்கையில் தோன்றியது. சிங்கள பௌத்தர்கள் சாதிவாதிகள் எனின், சனத்தொகையில் 1% கூட அற்ற ஹின்ன வம்சத்தை சேர்ந்தவர் எவ்வாறு இலங்கை ஜனாதிபதி ஆக முடியும்''.

கராவ, சலாகம, துராவ போன்ற சாதிகள் இலங்கை சாதிப்படிநிலை வரிசையில் இறுதியாக தள்ளப் பட்டிருப்பினும், அவர்கள் அரசியல் மற்றும் பொருளாதார துறைகளில் கொய்கம சாதியினர் அளவுக்கு ''ஜனநாயகத்தை'' சிங்கள சமூகத்தில் அனுபவிக்கிறார்கள். தயானின், உயங்கொடவின் புத்திக்குள் இது அடங்கவில்லை போலும். இந்தியாவின் தலித்களுக்கு ஒப்பாக ஜனநாயகமிழந்த இலங்கைத் தாழ்த்தப்பட்டவர்களுக்குள் அடக்கப்படக்கூடியவர்கள்; தேவ (வகும்புர), பத்கம (பது), நெக்கத்தி (பெரவாதன), போதி (பன்னதுர), விஷ்வ (நவன்தன்ன) போன்ற சாதிகளைக் கூறிக் கொள்ளலாம். கின்னர (பாய் பின்னுபவர்கள்), கத்தர, காடி (ரொடி) போன்ற சாதிகளைச் சேர்ந்தவர்கள் சனத்தொகையில் சிறுபான்மையினராயினும் தாழ்த்தப்பட்டோர்களில் உள்ளடக்கப்படுகின்றனர்.

பீகார் மாநிலத்தில் லல்லு பிரசாத் யாதவ், உத்தரப்பிரதேச மாநிலத்தின் மாயாவதி ஆகியோர் தலித் குலத்திலிருந்து வந்து முதலமைச்சர் ஆகி பெற்ற அதிகாரம், இன்னும் இலங்கை அரசியலில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைக்கவில்லை. அவ்வாறான அதிகாரம் - சாதி அரசியல் அதிகாரம் ஏ.வி. சுரவீர மற்றும் சிறில் மத்தியூ போன்றவர்களுக்கு கிட்டுமாயின் அவர்கள் மாயாவதி போல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேற்றுமை காட்டிய ஒடுக்கும் சாதியினரை, குற்றஞ்சாட்டி சிறைக்கு அனுப்புவர். இலங்கையில் இது போன்ற அரசியல் பலம் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு மட்டுமே உண்டு. அவர் சாதி வேற்றுமைகளுக்கெதிராக தண்டனைக் கோவைகளை உருவாக்கியுள்ளார்.

தலித்களின் ஜனநாயகத்தைக் கோரும் தனிநபர் போராட்டம் பூலான்தேவி ஊடாக, வீரப்பன் ஊடாக வந்தாலும் தர்மதுன் ஜயசிங்க (கரன் தெனிய) அல்லது சரத் விஜேசிங்க (கேகாலை) தேவ-பத்கம போன்றோர் இணைந்து மேற்கொண்ட போராட்டத்தில் அவ்வாறான பாத்திரங்களை பெற முடியவில்லை. இந்திய நக்சலைட் போன்று விஜேவீரவும், தேவ-பத்கம போன்றோரும் ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் போது இவர்களின் மீது சவாரிவிடவே முயற்சித்தனர். அதேபோல் நக்சலைட்டுகள் போன்று ஜே.வி.பியும் மாவோவாதமும் காட்டும் அரசியல் உறவு இந்தோ - இலங்கை குப்பை அரசியலை உறுதிப்படுத்துகின்றது.

இந்திய அரசியலமைப்பைத் தயாரிப்பதில் அம்பேத்கர் அவர்களுக்கு கிடைத்த இடத்தை விட கூடிய அதிகாரம் 1972 அரசியலமைப்பை தயாரிக்கும் வேளை கொல்வின் ஆர் டி சில்வா அவர்களுக்கு கிடைத்தது. 1978 அரசியலமைப்பை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் ஆர்.பிரேமதாச அவர்கள் ஐ.தே.கவின் பிரதித் தலைவராக விருந்தார். எனினும் தலித் குலத்தைச் சேர்ந்த அம்பேத்கார் தயாரித்த யாப்பில் இந்திய தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைத்த உரிமை, பலபிட்டிய சலாகம சாதியைச் சேர்ந்த கொல்வின் ஆர் டி சில்வாவின் யாப்பின் மூலமோ, பலபிட்டிய, சலாகம சாதியைச் சேர்ந்த ஹின்ன எனும் கிளைச் சாதியைச் சேர்ந்த ஆர்.பிரேமதாச அதிகாரமிக்கவராக விருந்தபோது செய்யப்பட்ட யாப்பின் மூலமோ இலங்கையின் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைக்கவில்லை.


ஜனாதிபதி பிரேமதாச இலங்கையின் தாழ்த்தப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தியிருப்பாராயின் இவ்வாரம் இந்தியாவின் பீகார் மாநிலத்தில் இடம்பெற்ற அரசியல் கிளர்ச்சி இலங்கையில், பிரேமதாசாவின் மரண ஊர்வலத்தின் போது நடந்திருக்கும்.


பல லட்ச டொலர்களை ஊழல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்திற்காக இந்திய கூட்டரசாங்கத்தை ஆட்டு வித்துவிட்டு கடந்த ஜூலை 25 லாலு பிரசாத் யாதவ் ராஜினாமா செய்தார். அதற்குப்பதிலாக பீகார் தலித்கள் முதலமைச்சர் பதவியை கல்வியறிவற்ற யாதவ்வின் மனைவி ராப்ரி தேவியிடம் ஒப்படைத்தனர். எனினும் பிரேமதாசா மரணச் சடங்கின் போது ஹேமா பிரேமதாசாவுக்காக இவ்வாறான கோரிக்கையை முன்வைத்த கலபொட ஞானிச்சர தேரருக்கு ஒடுக்கப்பட்ட சாதியினரிடமிருந்து ''பீகார் ஆதரவு'' கிடைக்கவில்லை.

இந்திய ஒடுக்கப்பட்டவர்களின் இவ்வாறான போராட்டம் எதை கற்பிக்கின்றது? இது தொடர்பாக நம் ஞாபகத்திற்கு வருவது இந்தக் கூற்றுத்தான்.

''சுதந்திரம், காதலைப் போன்று வெற்றிக்கொள்ள வேண்டியதொன்று. காதல் புரியாமல் காதல் கிடைக்காது என்பது போன்று, போராடாமல் சுதந்திரம் கிடைக்காது''

ராவய





## சிறிசேனகூரே...

குரேயை வாசலில் நிற்க வைத்துவிட்டே அந்த வீட்டை உடைத்து அவர்கள் அதை சுத்தப்படுத்தியதே போதிய சான்றாகும்.

ஒருவகையில் இந்தத் தீர்ப்பு - இது உயர்நீதிமன்றத் தீர்ப்பாகையால் - இத்தகைய எழுந்தமான நடவடிக்கைகளிலிருந்து மக்களை ஒரளவுக்கு பாதுகாக்கும் ஒன்றாகக் கொள்ளப் படலாம்.

ஆனால் இந்த மாதிரி எதேச்சதிகார நடவடிக்கைகளின் போது, சிறிசேன குரே போன்ற வசதிவாய்ப்புள்ளவர்களுக்கு மட்டுமே நீதி கேட்க வாய்ப்பு இருக்கிறது. நாளாந்தம் கைது செய்யப்பட்டு கேவலமான முறையில் நடாத்தப்படும் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்களுக்கு எல்லாம் இந்த நாட்டில் நீதியின் கருணையை எட்டும் வாய்ப்பு இல்லை. ஒரு இஷினி விக்கிரமசிங்க, ஒரு சிறிசேன குரே போல அநியாயமாக கைது செய்யப்பட்ட எத்தனை தமிழ் இளைஞர்கட்கு இந்த நாட்டில் விடுதலைக் கிடைத்திருக்கிறது?

இதுதான் இன்றைய யதார்த்தம்.

இந்தத் தீர்ப்புக்கும் அதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கும் காரணமாக இருந்த சந்திராஜனந்த டி சில்வாவை அரசாங்கம் பதவி நீக்குமா? அல்லது அவர் பதவி விலகுவாரா அல்லது அப்படியே தொடர்ந்து அதே பதவியில் இருப்பாரா? என்ற கேள்விகள் எழுகின்றன. ஐ.தே.கவின் (அதுவும் ஜே. ஆர். ஆட்சிக்காலத்தில்) காலத்தில் என்றால், அவருக்கு பதவி உயர்வுகூடக் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தப் பதவி மிக உயர்ந்த பதவிகளில் ஒன்று என்பதால், வேறு உயர் பதவி இல்லாமல் இருக்கும் நிலை இருப்பதால் அவர் ஒரு அமைச்சராகக் கூட ஆக்கப்பட்டிருக்கலாம்... இந்த அரசாங்கம் என்ன செய்யப்போகிறதோ தெரியவில்லை.

நீதிமன்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கம் அரசுக்கிருந்தால், நிச்சயமாக சந்திரானந்த டி சில்வா விரைவில் பதவி உயர்த்தப்படுவார்.

அதை மதிக்கும் நோக்கம் இருந்தால் பதவி இறக்கப்படுவார் அல்லது மாற்றப்படுவார்.

அதைக் கணக்கெடுக்க வில்லையென்றால், அப்படியே தொடர்வார்.

அரசு எதைச் செய்யப்போகின்றது என்பதை இன்னும் ஒரு சில மாதங்களுள் தெரிந்து கொள்ள முடியும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்நிலைவாதத்தில் தெளிதல் வேண்டும்!

கலா என்ற பெண் கவிஞரின் கோணேஸ் வரிகள் என்ற கவிதையை வாசித்தபோதே அவரை ஒரு ஆளுமை மிக்கவராக இனங்கண்டேன். ஆனால் இப்போதுதான் அவர் ஒரு பெண் என்பதை ஆசிரியர் குழுவின் குறிப்பினூடாக அறிகிறேன்.

ஆபாசமான மொழியில் இக் கவிதை உள்ளது என்ற விமர்சனத்தை வைக்கின்றவர்களில், பெண்ணிலைவாத தளத்திலிருந்து ஒரு சாராரும், சரிநிகரின் ஆசிரியர் குழுவைத் தாக்கவேண்டும் என்ற குழுமனப்பான்மையில் இனவாதத்தோடும் உள்ளது எனக்கூறும் மறுசாராரும் உள்ளனர். இந்த இரண்டாவது தரப்பினர்தான் முன்னர் ஒருமுறை என்.ஆத்மாவின் 'ஆணலை' என்ற கவிதையிலும் இனவாதம் உள்ளது என முட்டையில் மயிர்பிடுங்கும் குதர்க்கத்தோடான விமர்சனத்தை முன்வைத்தனர்.

ஒரு படைப்பில் வருகின்ற ஒரு பாத்திரத்தினூடாக அல்லது கவிதையென்று வருகிறபோது கவிஞருக் கூடாக குறித்த சூழ்நிலையில் வருகின்ற சில சிங்கள நாயே, புத்தரின் வழிவந்தவர்களே என்ற சில உணர்ச்சி வார்த்தைப் பிரயோகங்களை மட்டும் பொறுக்கிக்கொண்டு அது இனவாதத்தன்மையைக் கொண்டது எனக்கூறுவது சிறு பிள்ளைத்தனமானதோடு அத்துறையில் அவர்களது அறிவீனத்தையுமே காட்டுகிறது. இவ்விதம் விவாதிக்கின் ரஷ்ய மாகலைஞன் பியோதர் தாஸ்தயேவ்ஸ்கியிலிருந்து நோபல் பரிசுபெற்ற சம காலக் கலைஞரான நாடின் கோடிமர் வரை அவர்களது படைப்புக்களில் வருகின்ற பாத்திரங்கள் பேசுகின்ற உரையாடல்களைக்கொண்டு அவர்களை இனவெறியாளர்கள் என முத்திரை குத்தலாம். ஒரு படைப்பு தன்னளவில் முழுமையானது ஒவ்வொரு படைப்புக்கு பின்னாலும் ஒரு கருத்தியல் இருக்கிறது. ஒரு படைப்பை முழுமையாக்கிக்கொண்டு அதற்குப் பின்னாலிருக்கிற கருத்தியலின் அடிப்படையிலேயே அது இனவாதத்தன்மை கொண்டதா ஆணாதிக்க அடிப்படையிலானதா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

நவீன ஈழத்துத் தமிழக் கவிதைக்கு 'கோணேஸ் வரிகள்' இல் கலா பயன்படுத்திய மொழி புதியது அல்ல.

*எங்கள் ஆண் உடம்பு*
*ஏன் எழுவதில்லை?*
*எங்கள் யோனிகள்*
*ஏன் அரிப்புக்கொள்வதில்லை.*

என்று 1977ம் ஆண்டிலேயே 'எகிப்தின் தெருக்களிலே' என்ற கவிதையில் சண்முகம் சிவலிங்கம் எழுதியுள்ளார்.

***(பக் 40. நீர் வளையங்கள்)***

*நிர்வாணம் கொண்டு*
*தமிழர்கள் அனைவரும்*
*தெருக்களில் திரிக*

***என்று 1981ல் சேரன் எழுதுகிறார்.***

1987ல் வந்த சேரனின் கவிதையொன்று பின்வருமாறு போகிறது.

*இந்தப்பாழாய்ப்போன இலங்கை*
*இந்து சமுத்திரத்தில்*
*இந்தியாவின் ஆண்குறி மாதிரி துருத்திக்கொண்டு*
*நிற்கிறது.*

1984ம் ஆண்டு வெளிவந்த சு. வில்வரெத்தினத்தின் 'அகங்களும் முகங்களும்' என்ற கவிதைத்தொகுதியில் வீழ்ச்சி என்ற, விபச்சாரி வீட்டுக்குச் சென்ற ஒரு ஆணைப்பற்றிய கவிதையில் ஆண்குறியினுடைய விறைப்பு, சுருக்கம் முதலியன செழுமையான ஒரு படிமமாகக் கையாளப்பட்டிருக்கின்றது.

1986ம் ஆண்டு வெளிவந்த வ.ஐ.ச. ஜெயபாலனின் ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும் என்ற எண்பதுகளின் முற்பகுதியில் சிறீலங்கா படையினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டு வரலாறாகிய ஒரு ஈழத்தமிழ்ப் பெண் போராளியின் உண்மைக் கதையை அடிப்படையாகக்கொண்ட நீண்ட கவிதைக் காவியத்தில் பின்வருமாறு வருகிறது.

*உங்கள் பார்வையில் நாங்கள் அனைவரும்*
*நடமாடுகின்ற யோனிகள் தானே*
*கை கால் முளைத்த முலைகள் தானே*
*எம்முடை மனிதம்*
*எம்முடை ஆளுமை*
*எதுவும் கண்களில் படாதே*

***(பக் 33, ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்)***

1991ல் எழுதிய என்னுடைய கவிதையான 'ஷெல் குத்துதலில்' பின்வருமாறு வருகிறது.

*சவங்களின் விதைகளும் யோனிமடல்களும்*
*நள்ளிரவில் சவங்கள் என்முன்*
*எழுந்து நின்றன*
*கால்கள் இல்லாது குறியில் தாங்கி நடந்தன.*

***(பக். 25. வசந்தம் 91).***

இங்கே குறி என்று நான் எழுதுவது ஷெல்லினால் காலை இழந்த சடலங்கள் கால் இல்லாதபோது விறைப்படைந்த ஆண்குறியினால் நடப்பதையே. இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கே.எஸ். சிவகுமாரன் ஆண்குறியை தவிர்த்து Crutches என மொழி பெயர்த்திருந்தார்.

இவையெல்லாம் எமது ஞாபகத்துக்கு வருகின்ற வரிகளே. இதை விட வேறுபலவும் இருக்கக்கூடும்.

மேலே நான் உதாரணத்துக்குத் தந்த கவிதைகளில் ஆண், பெண் பிறப்புறுப்புக்கள் சார்ந்த மொழியை ஒரு உத்தியாகப் பயன்படுத்துவதற்கூடாக அவர்கள் சொல்ல வருவது வேறு. பாலியல் உணர்ச்சியை தூண்டுவதற்காக அல்ல. குறித்த சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைக்குப்பின்னாலும் குறித்த சேரனுடைய முதற்கவிதைக்குப் (தமிழர்கள் அனைவரும்...) பின்னாலும் இருக்கிற கருத்தியல்கள் முறையே வர்க்கப் போராட்டமும் சாதிப்போராட்டமும் தான். (இது ஒரு நீண்ட கட்டுரைக் கூடாக விளக்கவேண்டிய விடயம் இங்கு சுருக்கமாகவே எழுதமுடிகிறது.)

இதுவரைகால ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபில் இவ்விதமான 'ஆபாசமொழி' பயன்படுத்தப் படுவதுத் தெரியாமல், இப்போது கலா இவ்விதமாக எழுதிவிட்டாரே என்று செல்வி திருச்சந்திரன் சீறுவது தான் வேடிக்கையானது. நான் அறிந்தவரையில் கலாதான் இவ்விதமான துணிகரமான மொழியைப் பயன்படுத்துகிற முதல் ஈழத்துப் பெண் கவிஞர். ஆக, அவர் ஒரு பெண்ணாக இருந்து கொண்டு இவ்விதம் எழுதிவிட்டாரே என்பதுதான் செல்வியின் கோபம் போலும். எனவே ஆண்களானால் ஆண்குறி, பெண்குறி பற்றி எதுவும் எழுதலாம். பெண்கள் என்னென்று எழுதுவது என்ற அடிப்படையில் பெண்ணிலைவாதியாகிய செல்வி திருச்சந்திரனிடமேயே ஊறிப்போயுள்ள ஆணாதிக்க கூறுகளையே இது காட்டுகிறது.

இது வரை காலமும் இவ்விதம் ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபில் மொழி பயன்படுத்தப்படுவது தனக்குத் தெரியாது என்று செல்வி கூறுவாராயின் கோணேஸ் வரி கவிதை பற்றிய விமர்சனத்தை முன்வைக்க அவருக்கு தார்மீக உரிமை அல்லது அருகதையில்லாமற் போய் விடுகிறது.

கலா பெண்ணிலைவாதம் பற்றி கட்டுரை எழுதவில்லை. அது ஒரு கவிதை. ஒரு கலை. கலை பற்றி துறைசார்ந்த அறிவு இல்லாமல், அல்லது அதன் கருத்தியல் பெண்ணியல்வாதம் என்றால் விமர்சிப்பதற்கு முதல் கலை பற்றிய துறைசார்ந்த அறிஞர் ஒருவரோடு கலந்துரையாடாமல் இவ்விதமான ஒரு விமர்சனத்தை வைப்பது நியாயமானதல்ல.

மறுதலையாக இவ்வளவு காலமும் பாலியல் சார்ந்த மொழி கவிதையில் பயன்படுத்துவது பற்றி தனக்குத் தெரியும் என்று செல்வி சொல்வாரானால் ஏன் இவ்வளவு காலமும் எதிர்க்குரல் எழுப்பாதவர் இப்போது கலா (ஒரு பெண் என்பதால்) என்றவுடன் எதிர்ப்புக்குரல் எழுப்பவேண்டும்?

திருச்சந்திரனுடைய பெண்ணிலைவாதத்தின் ஆழம் இவ்வளவுதானா?

தமிழச்சிகளே என்று எழுதுவது இனவாதம் என்றால் பாரதிதாசனும் ஒரு இனவாதிதான். ஏனெனில் தமிழச்சி என்ற பதத்தை ஆரம்பகாலங்களில் பயன்படுத்தியவர்களில் பாரதிதாசன் முதன்மையானவர்.

கோணேஸ்வரியை பாலியல் வல்லுறவுக்குக் குட்படுத்தியவர்கள் அதன் பின்னரும் துன்பம் வருகின்ற போது புத்தரை மனசார வழிபடுவார்கள். இனவாத அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள் என்பவர்கள் தனிப்பட்ட ரீதியில் கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும், புத்தரின் வழிவந்தவர்களாக தங்களைக் காட்டிக்கொள்வார்கள். இதைத்தான் கலா தனது கவிதைக்கூடாக செய்கிறாரே தவிர புத்தரை கொச்சைப்படுத்தவில்லை.

கையாலாகாத்தனத்தின் மிக உச்ச எதிர்ப்புணர்வையே ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுகிறபோது உணர்வாள்.

அத்தகைய அவலத்தை துஷ்யந்தி சரிநிகரில் சொன்னமாதிரி ஒரு சிறுகவிதைக்கூடாக கலா உணர்த்தியிருக்கும் இக்கவிதையின் ஆற்றலைக் கண்டு நானும் வியக்கிறேன். அவலம் மிக உச்சமாக இருக்கிறபோது அதை வெளிப்படுத்துகிற மொழியும் அவ்வாறு தானே இருக்க வேண்டும்.

ஊர்வசி போன்ற சில பெண் கவிஞர்களைப் போல இடையில் நிறுத்திக்கொள்ளாது கலா தொடர்ந்தும் எழுதவேண்டும். கலை இலக்கியம் பற்றி புரிதல் இன்றி வரட்டு விமர்சனங்களை வைக்கும் பெண்ணிலைவாதிகளே உங்களது முதல் எதிரிகளாக இருக்கின்றனர் என்பதை மனதில் வைத்திருந்தாலே போதுமானது.

**நட்சத்திரன் செவ்விந்தியன்**



# அமைதி நகரின் மன்னம் பெரிகள்

அழகிய மன்னம்பெரி
அவள் ஒரு போராளி
அவளை அவர்கள் பிடித்தனர்
ஒரு அழகி என்பதால்
அவளிடம் ரகசியங்கள்
இருந்ததால்
அவளை அவர்கள் சிதைத்தனர்
நிர்வாணமாக குறையுயிராக
தெருவிலே விட்டுச் சென்றனர்

அழகிய மன்னம்பெரி
ஆனால் அவளைப் போல
அவளது மரணம்
அழகானதேயல்ல

அழகிய கிரிஷாந்தி
இவள் ஒரு போராளியல்ல
ஆனாலும் அவளை அவர்கள் பிடித்தனர்
கைதடி வெளியெல்லாம்
அவள் கதறிய குரல் அலைய
அவளை அவர்கள்
பலமுறை சிதைத்தனர்
பிறகு
கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்
அவளைத் தேடிச் சென்ற
தாயை தம்பியை அயலவரை
எல்லாரையுமே
கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்.

அழகிய ரஜினி
இவளும் ஒரு போராளியல்ல
ஆனாலும் அவளை அவர்கள் பிடித்தனர்
யாருமில்லாத வீடொன்றின்
சுவர்களில்
அவள் அழுத குரல்
மோதி அழிய
அவளை அவர்கள் சிதைத்தனர்
பிறகு
கழுத்தை நெரித்து ஒரு
மலங்கிடங்கில் புதைத்தனர்.

ரஜினி, கிரிஷாந்தி
இருவரும்
அமைதி நகரின் மன்னம்பெரிகள் ........
விதவை அரசி
சொன்ன
பொய்களின்பின்
சென்றார்கள்
தனியே சென்றார்கள்
வெண்தாமரைப் பொறிகளில்
சிக்கினார்கள்.

அமைதி நகரம்
அவர்களின்
அழகை இளமையைக் கேட்டது.
அதன் சாப இருளில்
பேய்கள்
பலம் மிகப் பெற்றெழுந்து
மன்னம் பெரிகளைத்
தூக்கிச் செல்கின்றன
மன்னம்பெரிகளுக்கு ஆபத்து
தனியாகப் போகும்
எல்லா அழகிய பெண்களுக்கும்
ஆபத்து.

மன்னம்பெரிகளின் கதறல்
அமைதி நகரெல்லாம் நிறைகிறதே........

கைதடி வெளியே
செம்மணி வெளியே ஐயோ
அமைதி நகரமே
அமைதி நகரமே
அருவருப்பானதொரு பொய்யே
உனக்கும் ஐயோ..........

இதோ
சமாதானம்
அதன் மரண நெடியுடன்
ஒரு மாய வலையென
எமது நகரங்களின்மீது
விழுகிறது.

வருகிறார்
விதவை அரசி
வெற்றிக்கொடி
வெண்தாமரை
இரண்டிலும் குருதி வடிய

அதே
வசியச் சிரிப்பு
அதே வெறித்த விழிகள்
அதே முறிந்த
வாக்குறுதிகள்.

வருகிறார் விதவை அரசி

கவனம்
அமைதி நகரின் மக்களே
கவனம்
அழகிய எல்லாச் சிறு
பெண்களும் கவனம்
மன்னம்பெரிகளின் ஆவி
விரைவில்
விதவை அரசிகளைத் துரத்தும்
முன்பொரு விதவையின்
வெற்றிக் கொடி
அறுந்து
மண்ணில் வீழ்ந்தது போலே
மன்னம்பெரிகளின் ஆவி
எழும்
அதுவரை
அமைதி நகரின் மக்களே
கவனம்
அழகிய எல்லாப் பெண்களும்
கவனம்

யாகத்தில் நிராகரிக்கப்பட்ட
சதிதேவியின் கோபத்தோடு
புல் மூடிய
புதை குழி நீத்து
எல்லா
மன்னம்பெரிகளும்
எழுக

அமைதி நகரம் அழைக்கிறது
அமைதி நகரம் அழைக்கிறது
அதன் வாசலிலே
கிரிஷாந்தி
அமைதியுறா மனத்தினளாய்..........
அன்றொரு நாள்
ஊழிப் பெரு நடனம் தோன்றக்
காரணமாயிருந்த
சதி தேவியின் விழிகளைப் பெற்று
கைதடி வெளியெலாமாகி
செம்மணி வெளியெலாமாகி
வாசலிலே கிரிஷாந்தி.

**மன்னம்பெரி:** ஒரு அழகு ராணி. ஜே.வி.பி போராளி. 1971 ஜே.வி.பி கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டு கடுமையாகச் சிதைக்கப்பட்டு பின் சுட்டுக் கொல்லப்பட்டாள். அவள் சிதைத்துக் கொல்லப்பட்ட விதம் பின்னாளில் சிறிமாவோ ஆட்சிக்கு எதிரான மேடைகளில் அதிகமதிகம் சொல்லப்பட்டது. மன்னம்பெரியின் ஆவி, சிறிமாவோ தோற்கும் வரை துரத்திச் சென்றது.


**சதிதேவி:** ஒரு புராண நாயகி: தட்சனின் மகள். தன் தந்தையை மீறி சிபெருமானைத் திருமணம் செய்தார். பிறகு தட்சன் யாகம் செய்த போத சிவனார் எச்சரித்ததையும் மீறி, அங்கு சென்றார். அங்கே யாகசாலையில் தந்தை தட்சனால் அவமதிக்கப்பட்டார். அதனால் தற்கொலை செய்துக் கொண்டார். இறந்த தன் மனைவியின் உடலை ஏந்திய படி கோபமடைந்த சிவனார் ஆடியதே ஊழிப் பெரு நடனம்.

*யாழ்ப்பாணம் மாணவர் ஒன்றியத்தால் 31.10.96 வெளியிடப்பட்டு இரகசியமாக விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரக் கவிதை.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# " எனது நோக்கம் இ.தி.மு. கழகத்திற்கு ஒரு அறிமுகத்தை வழங்குவது மட்டுமே! "

பெ. முத்துலிங்கம்

பெ. முத்துலிங்கத்தின் நூல் எஸ்.வி.ஆரின் கற்பனையை முடுக்கிவிட்டிருக்கிறது எனத்தொடக்கிய சிவசேகரம், இலங்கைத் திராவிடர் முன்னேற்றக் கழகம் சாதித்தது ஒன்றுமில்லையென்பதுடன், அது அரைடசின் பேரையாவது கொண்டிருக்கவில்லையெனக் கூறுகின்றார்.

தொண்டமானுக்கு எதிராக ஈடு கொடுக்கும் வகையில் செயற்பட்ட அமைப்புகளையே மலையகத்தில் காணப்பட்ட சக்திகள் என சிவசேகரம் கூற விழைகிறார். இதன்படி அஸீஸ் தொண்டமானுக்கு சவாலாக இருக்கவில்லையென்றும் வெள்ளையன் தலைமையில் சிறிது முற்போக்கான மாற்று இருந்தது என்றும், செங்கொடிச் சங்கம ஈடு கொடுத்து நின்றாலும் அரசியல் தவறுகளால் பலவீனப்பட்டு விட்டதென்றும் கூறுகின்றார்.

மலையகத்தின் தொண்டமானுக்கு எதிரான நிரந்தரமான பலமான சக்தியொன்று இருந்ததில்லையென்பதை சிவசேகரம் அறியார். மாறாக, குறுகிய ஆயுட்காலத்தைக்கொண்ட சக்திகள் காலத்திற்கு காலம் காணப்பட்டன. இச்சக்திகளில் ஒரு சில; தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்தும், அதற்கு புறவியலாகவும் தோன்றியுள்ளன. இவ்வாறு தோன்றியவைகள் அக்குறிப்பிட்ட ஆயுட்காலத்திற்குள் தொண்டமானை ஆட்டம் காண வைக்கும் சக்தியாக இருந்துள்ளன. இவ்வகையில் தொண்டமானுக்கு எதிராக தொண்டமானின் அமைப்புக்குள்ளிருந்தே தோன்றிய முதலாவது சக்தியான அஸீஸின் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அறுபதுகளில் பாரிய சக்தியாக எழுந்தது. அஸீஸின் தலைமையில் தோன்றிய இச்சக்தி பெரும்போராட்டத்தின் மத்தியிலேயே தன்னை வலுப்படுத்திக்கொண்டது. தொண்டமானுக்கிருந்த ஆளுமை காரணமாக அஸீஸின் தொழிற்சங்கத்தை முதலாளிமார் சங்கம் அங்கீகரிக்கவில்லை இதனால் டயகம தோட்டத்தில் பெரும் வேலை நிறுத்தம் ஒன்று நடந்ததுடன், ஆப்பிரஹாம்சிங்க என்ற சிங்களத்தொழிலாளர் கொல்லப்பட்டார். இதன் எதிரொலியாகவே அஸீஸ், 1956ல் ஆட்சியமைத்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விளைவாக ஏழு பேர் ஒன்று சேர்ந்தால் அவர்களுக்கு ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கலாம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டமே பின்னர் வெள்ளையன் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் உட்பட பல தொழிற் சங்கங்கள் தோன்றக் காரணமாயிருந்தது. இப்போராட்டத்தின் பின் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமானுக்கு சவாலாகத் தோன்றிய சக்தி வாய்ந்த சங்கமாக இருந்தது.

தொண்டமான் கூறுவது போல் அஸீஸ் பெரிய சவாலாக இருக்கவில்லை என சிவசேகரமும் பாட ஆரம்பித்துவிட்டார். அஸீஸின் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் எவ்வாறு உருவாகியது, பின்னர் அது இ.தொ.காவுடன் இணைந்து மீண்டும் அது எவ்வாறு பிரிந்தது என்பதனைப்பற்றி சிவசேகரம் அறிந்து கொள்ளல் நன்று. அது மட்டுமல்ல, தோட்டத்தினுள் நுழைவதற்காக அஸீஸ் மேற்கொண்ட போராட்டங்களைப் ப்பற்றி சற்று வாசித்தறிதல் நன்று.

இதேவேளை 60, 70களில் வெள்ளையன் தலைமையில் சிறிது முற்போக்கான மாற்று இருந்தது என்கிறார் முற்போக்கு என எதனை சிவசேகரம் நினைக்கின்றார் என்பதே கேள்விக்குறியாக இருக்கின்றது. ஏனெனில் அறுபத்தைந்தில் ஆட்சி பீடமேறிய டட்லி சேனநாயக்காவின் அரசு அதன் செனட்சபையில் ஒரு அங்கத்துவத்தை இ.தொ.காவிற்கு வழங்கியது. இச்சந்தர்ப்பத்தில் இ.தொ.காவின் பொதுச் செயலாளராக கடமையாற்றிய அதே நேரத்தில் கண்டி திரித்துவக் கல்லூரியில் கல்வி கற்ற வெள்ளையன், அப்பதவியை தொண்டமான் தமக்கு வழங்குவார் எனக்கருதினார். ஆனால் அதனை தொண்டமான் அண்ணாமலைக்கு வழங்கினார். இதனால் மனமுறிந்த வெள்ளையன் தான் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்தினாலேயே தமக்கு அப்பதவி வழங்கப்படவில்லையென்றும், அண்ணாமலை பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் என்பதனாலேயே அவருக்கு வழங்கப்பட்டது என்று பிரச்சாரத்தை முன்வைத்து தொழிலாளர் தேசிய சங்கத்தை உருவாக்கினார். மலையகத்தில் எண்பது வீதமானோர் தாழ்த்தப்பட்ட சமூகம் எனக்கூறப்படும் சமூகத்தவர்களாக இருக்கின்றமையினால், அச்சங்கத்தில் இணைய ஆரம்பித்தனர்.

இதனைக் கண்ணுற்ற புத்திசாலித் தொண்டமான் டட்லி சேனநாயக்கவுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு செனட் சபையில் மேலும் ஒரு அங்கத்துவத்தை பெற்றார் இவ்வங்கத்துவத்திற்கு வெள்ளையனின் சமூகத்தைச் சார்ந்த யேசுதாசன் அவர்களை நியமித்தார் இதன் மூலம் வெள்ளையனின் பிரச்சாரத்தை முறியடித்ததுடன் இ.தொ.காவிற்கு எதிரான சவாலையும் முறியடித்தார். எவ்வாறாயினும் இ.தொ.காவிற்கு அடுத்ததாக அதிகளவு தொழிற்சங்க அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது. சிவசேகரம் கூறுவதன்படி இது ஒரு சிறிது முற்போக்கான மாற்று என்பது உண்மையா என்பதனை வாசகர்களே தீர்மானிக்கலாம்.

இதனையடுத்து சிவசேகரம் கூறுவதன் படி தோழர் என். சண்முகதாசனின் தலைமையின் கீழ் இயங்கிய செங்கொடிச் சங்கம் 1969 - 1970 பதுகளிலேயே பெருமளவு அங்கத்துவத்தைக்கொண்ட தொண்டமானுக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கும் சங்கமாக காணப்பட்டது. செங்கொடிச் சங்கம் ஏனைய இரு சங்கத்தினைப்போல் அதற்குள்ளேயேயிருந்து வெளிவராததால் பெருமளவு இ.தொ.கா. அங்கத்தினர்களை உள்வாங்க முடியாது இருந்திருந்தது. ஆயினும் தோழர் என் சண்முகதாசன் பால் ஏற்பட்டிருந்த மதிப்பு மற்றும் அவருடன் இணைந்து செயற்பட்ட தோழர்கள் ஒ.ஏ. இராமையா, ரோசாரியோ போன்றவர்களின் அர்ப்பணிப்புகளினால் தொண்டமானுக்கு எதிரான சக்தியாக உருவெடுக்க முடிந்தது.

இக்காலகட்டத்திலேயே இலங்கை திராவிட இயக்கமும் தொண்டமானுக்கு எதிரான சக்தியாக வலுப்பெற்றது. வித்தியாசம் யாதெனில், செங்கொடிச்சங்கம் மார்க்சிய சித்தாந்தத்தின் அடிப்படையில் தொண்டமானை எதிர்த்தது. திராவிட இயக்கமோ, தேசியவாதக் கொள்கையிலிருந்து தொண்டமானை எதிர்த்தது. இன்னுமொரு வித்தியாசம் யாதெனில், செங்கொடிச் சங்கம் தொழிற்சங்க ரீதியாக தொண்டமானுக்கு எதிராக தொழிலாளர்களை அணிதிரட்டியது. ஆனால், திராவிட இயக்கம் தமிழ் தேசியவாதத்தின் அடிப்படையில் மலையக மக்களை அணிதிரட்டியது. தொழிற்சங்க அணிதிரட்டலுக்கு மாறாக, பகுத்தறிவு மன்றம், பெரியார் மன்றம், அண்ணா மன்றம், வள்ளுவர் மன்றம் போன்றவைகளை தோட்டங்களில் அமைத்ததன் மூலம் தனது இயக்கத்தோழர்களை அணிதிரட்டியது. திராவிட இயக்கமும் அறுபதுகள் முதல் எழுபதுகள் வரையிலான காலகட்டத்திலேயே தோட்டங்களில் மன்றங்கள் அமைக்கும் பணியினை முன்னெடுத்தது.

சிவசேகரம் கூறுவதுபோல் தொழிற்சங்கமின்றி மலையகத்துள் (தோட்டத்துள்) நுழைவது கடினமே. ஆயினும் இதனை இ.தி.மு.கவே அறுபதுகளில் மன்றங்கள் அமைப்பதனூடாக முறியடித்தது. இதற்கு இன்னுமொரு புறக்காரணி சிவசேகரத்தின் கணிப்பின்படி சவாலாக இருக்காத அஸீஸின் தோட்டம் புகுதல் தொடர்பாக போராடிப் பெற்ற உரிமையும் ஒரு காரணமாகும்.

1958ல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா சிங்கள மொழிச்சட்டத்தினை அமுல்படுத்தியபின் அது நாள்வரை மத எதிர்ப்பு, மற்றும் சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்த இ.தி.மு.க.மொழியுரிமை தொடர்பாக குரலெழுப்ப ஆரம்பித்தது. இதன் பின் இ.தி.மு.கவின் செல்வாக்கு அதிகரிக்கலாயிற்று. செங்கொடிச் சங்கம் உட்பட அனைத்து தொண்டமான் எதிர்ப்பு தொழிற்சங்கங்களுக்கும், இ.தி.மு.கவிற்கும் உள்ள வித்தியாசம் யாதெனில், தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களை தமது சங்கத்தில் அணிதிரட்டுவதுடன், தொண்டமானுக்கு எதிரான வாய்மூல எதிர்ப்பினை தெரிவித்து வந்தன. ஆனால், இ.தி.மு.க. மன்றங்கள் அமைப்பதனூடாக தொண்டமானுக்கு எதிரான வாய்மூல எதிர்ப்பினைத் தெரிவித்தது. இதனை சிவசேகரம் அறியார்.

சாதியொழிப்பு பிரச்சினையைப் பொறுத்த மட்டில் தோழர் என். சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் உட்பிரவேசம் தொடர்பாக பாரிய போராட்டத்தை முன்னெடுத்தது. இதனைத் தவிர சிறு சிறு போராட்டங்களை ஆங்காங்கே வடக்கில் நடாத்தியது. ஆனால் பெரும் சாதியெதிர்ப்பு பிரச்சாரத்தை கடுமையாக மேற்கொண்டது. இ.தி.மு.க. வடக்கில் கந்தசாமி கோயில் போல் ஒரு போராட்டத்தை நடாத்தாவிட்டாலும் கடும் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இதனால் சாதிவெறியர்களால் இ.தி.மு.க. உறுப்பினர் தாக்கப்பட்டுள்ளனர். இதனை எப்படி சிவசேகரம் அறிவார். இ.தி.மு.கவின் சாதியெதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்ட வடக்கின் தோழர்கள் பலர் கொழும்பில் இருக்கின்றனர்.

சிவசேகரம் கூறியுள்ளார். இ.தி.மு.ச அரைடசினாவது இருந்ததில்லையென்று. சிவசேகரம் என் நூலை வாசித்திருந்தால் இ.தி.மு.க. எங்கெங்கு கிளை விட்டிருந்தது, எவ்வகை நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதனை அறிந்திருப்பார்.

இ.தி.மு.க. அரைடசினாவது இருந்திருந்தால் 1962ல் இ.தி.மு.க. ஹட்டனில் நடாத்திய மாநாட்டிலும், ஊர்வலத்திலும் பங்குகொள்ள தமிழரசுக்கட்சி தலைவர் தந்தை செல்வா இணங்கியிருப்பாரா? ஆயிரக்கணக்கான இ.தி.மு.க. தோழர்கள் ஊர்வலம் செல்ல அதன் மத்தியில் தந்தை செல்வா தனது முதலாவது மலையக அரசியல் பயணத்தை மேற்கொண்டமையை சிவசேகரம் அறிவாரா? மேலும் அதேயாண்டு இ.தி.மு.க. அரசாங்கத்தினால், தடைசெய்யப்பட்டமை அது அரை டசின் உறுப்பினர்களை கொண்டிருந்தமையினாலா?

இவை மட்டுமல்லாது 1963ல் இ.தி.மு.க. பண்டாரவளையில் நாடற்றோர் மறுப்பு மாநாட்டை நடாத்தியது, அரை டசின் பேருடனா? இம்மாநாட்டையும், ஊர்வலத்தையும் சிங்கள இனவாதிகள் தாக்கியமையும் அதனைத்தொடர்ந்து அப்பிரதேசம் முழுவதும் இனக்கலவரம் பரவியமை இ.தி.மு.க. அரைடசினைக் கொண்டிருந்தமையினாலா? மேலும் 1970ல் சீனாக்கொல்லை தோட்டத் தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபின் இ.தி.மு.க. நோர்வூட்டில் நடாத்திய கண்டனக் கூட்டத்தில் இந்நாட்டு அரசியலில் திருப்பு முனையை ஏற்படுத்திய ரோகண விஜேவீரவும், மற்றும் பிரபல தொழிற்சங்கவாதியான பாலதம்புவும் பங்கேற்றமை இ.தி.மு.க. அரைடசின் உறுப்பினர் களைக் கொண்டிருந்தமையினாலா?

இன்று இ.தொ.கா உட்பட பல மலையக தொழிற்சங்கங்களில் உயர் பதவியை வகிக்கும் உறுப்பினர்கள் பலர் அன்றைய திராவிட இயக்கத்தின் உறுப்பினர்கள் என்பதை சிவசேகரம் தமது முன்னாள் நண்பரான தோழர் ஒ.ஏ.இராமையாவை சந்தித்து இ.தி.மு.க. வினைப்பற்றி அறிந்துகொள்ளும்படி கேட்கின்றேன்.

இவற்றுடன் எஸ்.வி.ஆர் எனது நூலுக்கு எழுதிய விமர்சனத்தை வாசித்து புளங்காகிதமடைந்த சிவசேகரம் எஸ்.வி.ஆர். பெ.மு.வின் கவனமற்ற சொற்பிரயோகத்திற்கு செமத்தியாக சாத்திவிட்டார் எனக் கூறியுள்ளார். பார்ப்பனனையும், பாம்பையும ஒன்றாகக் கண்டால் முதலில் பார்ப்பனனை அடித்துக் கொல் என பெரியார் கூறியுள்ளார் என எனது நூலில் எழுதியதை எஸ்.வி.ஆர் விமர்சித்துள்ளார். பெரியார் அப்படிக்கூறவில்லையெனக்கூறும் எஸ்.வி.ஆர். நான் மேற்கோள்காட்டிய ரி.ராமமூர்த்தியின் நூலே இதற்கு காரணமென்கிறார். ஆனால் பெரியார் இதனை என்றாவது மறுத்துள்ளாரா? என சிவசேகரம் கேள்வியெழுப்பியுள்ளார். இக்கேள்வியையே நானும் எஸ்.வி.ஆரிடம் கேட்கிறேன், ஏனெனில், தமிழக திராவிட இயக்கத்தில் இச்சொல் மிக சக்திவாய்ந்த சொல்லாக இருக்கின்றது.

இவற்றுடன் எஸ்.வி.ஆர். எனது நூலுக்கு எழுதிய விமர்சனத்தில் இலங்கை சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம் பற்றிய பகுதியில் பல ஆதாரங்களை சேர்க்கும் வகையில் இலங்கை சுயமரியாதை இயக்கத்தின் ஆரம்பகால தகவல்களை இந்தியாவில் வெளிவந்த 'குடியரசு' இதழை ஆதாரம் காட்டி எழுதியுள்ளார். இலங்கை சுவடிகள் திணைக்களத்தில் 'குடியரசு' இதழ்களை காணமுடியவில்லையென்பது ஒரு புறமிருக்க எனது பிரதான இலக்கு ஐம்பதுகளின் பின் ஸ்தாபனமயமாகி இலங்கை அரசியலில் தாக்கத்தை உண்டுபண்ணிய இளஞ்செழியன் தலைமையிலான இ.தி.மு.கவின் தோற்றத்தைப்பற்றிய அறிமுகத்தை வழங்குவதகவே இருந்தது. முழுமையான சுயமரியாதை இயக்கத்தின் வரலாற்றை எழுத முயன்றிருப்பின் எஸ்.வி.ஆர். அவர்கள் கூறுவது போல் நான் தமிழகத்திற்குச் சென்று எனது ஆய்வினை மேற் கொண்டிருப்பேன். அது எனது நோக்கமல்ல. மேலும் எஸ்.வி.ஆர். சுட்டிக்காட்டியுள்ள தகவல் உண்மையாயினும் திராவிட இயக்க செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் சிறுசிறு குழுக்களாகவும் கொழும்புக்கும், தமிழகத்திற்கும் மட்டும் தொடர்புள்ள தனிமைப்படுத்தப்பட்ட குழுக்களாக இருந்துள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது. எனவே எஸ்.வி.ஆர். தந்த முக்கியமான தகவல்களை வைத்துக்கொண்டு செமத்தியாக சாத்தி விட்டார் எனப் புளங்காகிதமடைவது வெறுமனே காழ்ப்புணர்ச்சியையே வெளிப்படுத்துகின்றது.

மேலும் ஒரு தகவலையும் கூற வேண்டும். எனது நண்பரான அன்டனி ஜீவா ஊடாக எஸ்.வி.ஆரிடம் எனது நூலுக்கு விமர்சனமொன்றினை எழுதக்கோரியதும் நானே. எமது வேண்டுகோளின்படி எமக்கு எழுதியனுப்பிய விமர்சனத்தை வாசித்தபின்னர் அதனை சரிநிகர் ஊடாக வெளிக்கொணர முன்வந்ததும் நானே. எனது நூல் வெளிவந்த ஒரு சில மாதங்களின் பின்னர் எஸ்.வி.ஆரும், வ.கீதாவும் எழுதிய ''பெரியார் சுயமரியாதை சமதர்மம்'' என்ற நூல் என் கரம் கிட்டியது. அதனை வாசித்தே நான் பல தகவல்களை அறிந்து கொண்டேன். இதனாலேயே எனது நூலுக்கு விமர்சனம் எழுதக்கூறினேன். ' ஓர் உண்மையான மார்க்சிய எழுத்தாளன் ஆக்கபூர்வமான விமர்சனத்தைக் கண்டு வெதும்பமாட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

# எரிக்கப்பட்ட நூலகத்தை புனரமைக்கப்போகிறவர் யாரோ?

யாழ் பொது நூலகம் 31.05.1981 அன்று இரவு சிங்களக் காடையர்களாலும் அரச படையினராலும் எரியூட்டப்பட்டது. (நூலக காவலாளியின் நீதிமன்ற வாக்கு மூலம்) நூலகம் எரிக்கப்பட்டபோது அப்போது மகாவலி, காணி, அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திஸாநாயக்கா யாழ்ப்பாணத்திலேயே இருந்தார். இவை உலகறிந்த விடயங்கள், இந்த நூலக எரிப்பு ஐ.தே.க. அரசுக்கு உலகெங்கும் ஓர் அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டது. இதனால் நூலக புனரமைப்புக்கென முன்னாள் யாழ் அரச அதிபரும், வடகிழக்கு மாகாண ஆளுநருமான லயனல் பெர்னாண்டோ தலைமையில் ஒரு குழுவை நியமித்தது அப்போதைய அரசு. இக்குழுவும் நூலக புனரமைப்புக்கென 10.5 மில்லியன் ரூபாவை சிபாரிசு செய்தது. ஆனால் ஜே.ஆரின் பதவிக்காலம் முடியும் வரை நூலக திருத்த வேலைகளெதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

பின்னர் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் தனது அரசியல் எதிரியான காமினியை ஓரம் கட்டுவதற்கு யாழ் பொது நூலக புனரமைப்பை ஓர் கருவியாக பயன்படுத்தி வந்தார். யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டது காட்டுமிராண்டித்தனமான செயல் எனவும் தனது பதவிக்காலத்தில் எப்படியும் நூலகத்தைக் கட்டியே தீருவேன் எனவும் கூட்டங்களில் பேசிவந்தார் பிரேமதாச அவர்கள். ஆனால் பிரேமதாசவின் ஆட்சிக்காலத்திலும் நூலக புனரமைப்பு நடவடிக்கைகளெதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் தேர்தல் காலத்தில் ஐ.தே.கவினால் எரிக்கபபட்ட யாழ் பொது நூலகத்தை நாம் பதவிக்கு வந்ததும் கட்டியெழுப்புவோம் என பிரச்சாரம் செய்து வந்தது. ரிவிரச -2 இராணுவ நடவடிக்கையின் பின் அரசின் பிரச்சாரம் மேலும் தீவிரமாகியது. அரச தொடர்பூடகங்கள் யாழ் பொது நூலக புனரமைப்பு பற்றி தலைப்புச் செய்திகளை வெளியிட்டன.

நூலக புனரமைப்புக்கென குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் பலர் சென்று எரிந்த நூலகத்தைப் பார்வையிட்டனர். தென்னிலங்கையில் ஒரு வீட்டுக்கு ஒரு புத்தகமும் ஒரு செங்கட்டியும் சேர்க்கத்திட்டமிட்டுள்ளோம். இவை யாவும் தொடர்பு சாதனங்களில் வெளியிடப்பட்ட செய்திகள். நடைமுறையில் நூலக புனரமைப்புக்கு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

கடந்த 10.08.1997 அன்று யாழ்ப்பாணப்பத்திரிகையாளர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் யாழ் பொதுஜன நூலக நூலகர் தனபாலசிங்கம் அவர்கள் கருத்துதெரிவிக்கையில் நூலக புனரமைப்பு பற்றி இதுவரை தனக்கு எதுவித தகவல்களும் கிடைக்கவில்லையெனவும் தன்னுடன் இதுவரை எவரும் இது குறித்து தொடர்பு கொள்ளவில்லையெனவும் குறிப்பிட்டார். அத்துடன் ரிவிரச - இராணுவ நடவடிக்கையின் 2,65,000 நூல்கள் தொலைந்துள்ளதாகவும் கூறியுள்ளார். மேலும் 1995ம் ஆண்டு தான் கொழும்பு சென்றபோது எடுத்து வைத்து விட்டு வந்த கலைக்களஞ்சியங்களும் இதுவரை வந்து சேரவில்லையெனவும் சுண்டிக்குளி கிளை நூலகத்தில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால் அதனை வேறிடத்திற்கு மாற்றத்தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார். நூலகம் எரிக்கப்பட்டு பதினாறு வருடுங்கள் கழிந்து விட்டன. ஜே.ஆர், பிரேமதாச, சந்திரிகா ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் நூலகம் புனரமைக்கப்படவில்லை. அடுத்தது யார்?

**பரமர்**

# கிளிநொச்சி: 19ம் நூற்றாண்டை நோக்கி மக்கள்!

யாழ்குடாநாட்டுக்கான தரைப்பாதையை திறப்பதற்கான அரசின் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையாலும், ஏற்கெனவே நடந்து முடிந்த சூரியக்கதிர்-2, சத்ஜய இராணுவ நடவடிக்கைகளினாலம்இடம்பெயர்ந்த மக்கள் நிரம்பிப்போயுள்ள கிளிநொச்சி மாவட்டம்இன்றும்மிகவும்மோசமான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பெருகிப் போயுள்ள அகதிமுகாம்கள், உணவுப் பொருட்களுக்கான கடும் தட்டுப்பாடு, மருத்துவ உபகரணங்கள் மருந்துப் பொருட்கள் இன்மையால் அவதியுறும் நோயாளர்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் என்று அங்குள்ள பிரச்சினைகள் சொல்லிமாளாது.

"இதையெல்லாவற்றையும் விட பாடசாலைகள் முழுவதும்இடம்பெயர்ந்தோரின் இருப்பிடங்களாக மாறியுள்ளதால் அழிந்து கொண்டிருக்கும் எமது இளம்சந்திதியினனின்கல்வித்துறைஎன எல்லாமே அழிந்து கொண்டிருக்கின்றன." என்று கூறுகிறார் அண்மையில் அரச அலுவலாக கொழும்பு வந்திருந்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தில்லை நடராஜா. அவரை சரிநிகர் சந்தித்த போது அவர் தந்த தகவல்களில்சில:

ஜூன் 30ம் திகதி வரையான கணக்கெடுப்பின்படி கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய கிரதேசங்களை சேர்ந்த மொத்தம் 8,655 குடும்பங்கள் (37,147 ஆட்கள்) நலன்புரி நிலையங்களிலும் 43832 குடும்பங்கள் (1,66,263 ஆட்கள்) தமது நன்பர்களுடனும் உறவினர்களுடனும் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜூலை மாதத்திற்கு 950 மெ.தொன் மாவும் 300 மெ.தொ. சீனியும் தேவைப்பட்ட போதும் 505 மெ.தொ. மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளது. சீனி யூலை மாதத்துக்கு முற்றாகவேவழங்கப்படவில்லை. தவிரவும்ப.நோ.கூ.சங்கங்களில்கையிருப்பிலுள்ள அரிசியோ மிகச்சராசரி அளவே இருக்கிறது. அங்குள்ள மோசமான நிலைமைகளை சமாளிக்க அது போதாததாகவே உள்ளது. இது தவிர ரிவிரெச-2, சத்ஜய நடவடிக்கைகளால்இடம்பெயர்ந்தவர்களுக்கு எதுவித உலர் உணவு பொருட்களும் வழங்கப்படவில்லை. ஜயசிக்குறுவின் காரணமாக இடம்பெயர்ந்த 993 குடும்பங்களுக்கு 3 நாட்களுக்கு சமைக்கப்பட்ட உணவும் 2 வாரங்களுக்குரிய உலர் உணவுப்பொருட்களுமே வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அரசாங்க அதிபர், நான்கு மாத காலத்துக்குப் போதுமான உலர் உணவுப்பொருட்களை வழங்குமாறு கோரியிருந்தும் அவை வழங்கப்படவில்லை என்கிறார்.

இதை விடவும் மோசமான விடயம் என்னவென்றால், வழமையை விட இடப்பெயர்வால் மக்கள் தொகை அதிகரித்திருக்கும் ஒரு பிரதேசத்துக்கு வழமையை விட அதிகளவு வைத்திய சேவை உத்தியோகத்தர்கள் தேவைப்படும்நிலை இருந்தபோதும், ஏற்கெனவே சாதாரண நிலைமைகளில், அங்கீகரிக்கப்பட்ட அளவுபரா வைத்திய சேவை உத்தியோகத்தர்கள் கூட நியமிக்கப்படாமல் உள்ளனர்.இந்த வெற்றிடங்களில் ஒன்றான, நுணுக்குக்காட்டி தொழில்நுட்பவியலாளர் வெற்றிடங்களுக்காக நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்ட 12 பரீட்சார்த்திகளின் பெயர்கள் இறுதி முடிவுக்காக அனுப்பப்பட்டிருந்த போதும், எந்த முடிவும் எடுக்கப்படாமலேயே இருக்கின்றன. இதிலுள்ள துயரம் என்னவென்றால் மலேரியா நோய் இருக்கின்றதா இல்லையா என்பதை பரிசோதிப்பதற்கு எடுக்கப்பட்ட பல இரத்த மாதிரிகளை கொண்ட மென்தகடுகள் சோதிக்கப்படாமலேயே குவிந்து கிடக்கின்றன என்பதாகும்.

பெருமளவுக்கு மலேரியா தொற்று உள்ள ஒரு பிரதேசத்தில் இத்தகைய நிலை நிலவுவது மிகவும் துரதிருஸ்டவசமான ஒன்றாகும். யூன் மாதத்தில் மட்டும் மலேரியாவுக்காக சிகிச்சையளிக்கப்பட்ட 281 நோயாளிகளில் 5 பேர் இறந்துள்ளனர். மருந்து வசதியின்மை உரிய நேரத்தில் பராமரிக்கப்படாமை என்பனவே இவற்றுக்கான காரணங்களாகும். பல்வேறு நோய்களால் இறந்தோர் தொகையில் மலேரியா நோயால் பீடிக்கப்பட்டு இறந்தோர் தொகையே அதிகமாக உள்ளது."

"மருந்துப் பொருள் தட்டுப்பாடு ஒரு நிரந்தரமான பிரச்சினையாக இங்கு உள்ளது."

-இவ்வாறு அரசாங்க அதிபர் தில்லை நடராஜா வழங்கிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் இவ்வாறான பாராமுகமான நடவடிக்கைகள் தொடர்வதில் பெரும்பாலும் அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் அக்கறையற்ற போக்கினாலேயே நடக்கின்றன. அதுவும் மலேரியா நோயனால் மனிதர்கள் இந்த 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இறக்கின்றார்கள் என்றால் அந்த நாடு மக்களுக்கு எந்த நூற்றாண்டு வாழ்க்கையை வழங்கியுள்ளது என்பது வெளிப்படை.

# அரசியல்வாதிகள் தலையீடு நியமனக் கடிதம் வாபஸ்!

வடகிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிற்றூழியர் தரத்திலான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, கடந்த 1995 ஜூலையில் மாகாண கல்வியமைச்சின் செயலாளரினால், விண்ணப்பங்கள் கோரப்பட்டு, 1996 ஜனவரி, பெப்ரவரியில் தொடர்ச்சியான நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டது. இந்நேர்முகத் தேர்வில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட சுற்று நிருபத்திற்கு அமைவாக பாடசாலையுட்பட அரச நிறுவனங்களில் தொண்டர்களாகக் கடமையாற்றியோருக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது.

நேர்முகப்பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு, சென்ற மே 96ல் செயலாளர் நியமன முன்னோடிக் கடிதத்தை அனுப்பி, அவர்களது ஆவணங்களின் போட்டோ பிரதிகளை மாவட்டக் கல்விப்பணிப்பாளரின் அத்தாட்சியுடன் பெற்றுக் கொண்டார்.

இதனையடுத்து நியமனக்கடிதங்களைத் தபாலிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், நேர்முகப்பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக ஆளுநரிடம் சில அரசியல்வாதிகள் புகாரிட்டனர். இதில் வேடிக்கை யாதெனில், பெப்ரவரி 96இல் நடந்து முடிந்த நேர்முகத் தேர்வில் குளறுபடிகள் நடந்துள்ளதாக மூன்று மாத இடைவெளியின் பின்னரே, குறிப்பாக, நியமன முன்னோடிக் கடிதம் அனுப்பப்பட்ட பிற்பாடே புகாரிடப்பட்டது. அவர்கள் சொல்வது போல் நேர்முகப் பரீட்சையில் மோசடிகள் நடந்திருப்பின், அது பெப்ரவரியிலோ அல்லது மார்ச்சிலோ சுட்டிக்காட்டப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இந்த அரசியல்வாதிகளுக்கு நியமன முன்னோடிக் கடிதம் அனுப்பப்பட்ட பின்னரே ஞானோதயம் பிறந்துள்ளது. இந்தக் காலம் கடந்த ஞானோதயத்தின் பின்னணி என்னவெனில், குறிப்பிட்ட அரசியல்வாதிகள் இச்சிற்றூழியர் நியமனத்தில் கோட்டா முறையை வேண்டிக் கொண்டதாகும்.

முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட வடகிழக்கு மாகாண ஆளுநர், இதுபற்றி விசாரணை செய்யுமாறு கல்வியமைச்சின் செயலாளரைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரும் விசாரித்து நேர்முகப்பரீட்சையில் முறைகேடுகளோ/ அரசியல் தலையீடுகளோ இடம்பெற வில்லை என்று அறிக்கை சமர்ப்பித்தார் தவிரவும், மாகாண கல்விப்பணிப்பாளரும் மாவட்டக் கல்விக் காரியாலங்களுக்குச் சென்று இது விடயமாக ஆராய்ந்தார். இவ்விடயம் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருந்தது கோடிட்டுக் காட்டவேண்டிய விடயமாகும்.

ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொணரப்பட்ட இவ்விடயத்தில், நேர்முகப்பரீட்சையில் தெரிவானோர்க்கு நியமனங்களை வழங்குமாறு பணிக்கும் உத்தரவு, மாகாண சபைக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

ஆனால், அரசியல்வாதிகளின் நெருக்குதல் காரணமாக மீண்டும் நேர்முகப் பரீட்சையை நடாத்துமாறு ஆளுநர் செயலாளரைப் பணித்துள்ளார். 900 பேரை நியமிக்கத்தக்கவாறுள்ள இவ்வெற்றிடத்திற்கு வடகிழக்கிலிருந்து 16,500 பேர் விண்ணப்பிதிருந்தனர். விண்ணப்பத்தாரிகள் அதிகரிப்புக் காரணமாக, நேர்முகப் பரீட்சை நடந்து முடிவதற்கு இரண்டு மாதங்கள் எடுத்தன. இந்நிலைமையில் மீண்டும் நேர்முகத் தேர்வு நடந்தால் அது முடிவடைந்து நியமனங்கள் வழங்கப்படுவதற்கு எத்தனை மாதங்கள் செல்லுமோ யாரறிவார்.

நேர்முகப்பரீட்சை மீண்டும் நடைபெறும் பட்சத்தில் அரசியல் தலையீடுகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாததே எனப் பேசப்படுகின்றது. மேற்சொன்ன தகவல்களும் இதனை ஊர்ஜிதப்படுத்துவதாகவே உள்ளது.

சுற்று நிருபத்திற்கு அமைவாக தகுதியானோர் இனம் காணப்படுவதோடு, அரசியல் தலையீடு இடம்பெறுவதற்கு அனுமதி வழங்காது சுமார் ஒன்றரை வருடங்களாக நியமனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர் பார்ப்பாகும்.

**எம். அனஸ்**

# கொழும்புக்கு வர ஒரு ரூபா வரி!

கொழும்பு நகருக்குள் வரும் அனைத்து தனியார் வாகனங்களுக்கும் ஜனவரியிலிருந்து ஒரு ரூபா வரி அறவிடப்படும் என பெருந்தெருக்கள் அமைச்சு குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இம்முறையின் கீழ் பெறப்படும் வருமானம் பெருந்தெருக்களைப் பராமரிக்கப் பயன்படும் எனவும், இம்முறை, அடுத்த வருடம் ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

ஒரு நாளைக்கு சுமார் 25,000 வாகனங்கள் வரையில் கொழும்புக்கு வருவதாகவும் இதனால் வாகன நெருக்கடிகளும், வீதி பழுதடைதலும் இடம் பெறுகின்றன எனவும் இதனால் இவற்றை நிவர்த்தி செய்ய பெரும் தொகைப் பணம் செலவாகின்றது எனவும் அமைச்சர் பௌசி அவர்கள் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

# பத்திரிகையாளர்கள் சங்கம்!

யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் சங்கம் ஒன்று உருவாகியுள்ளது. ஈழநாடு, ஈழநாதம், முரசொலி மற்றும் கொழும்பு பத்திரிகையாளர்கள் இதில் உறுப்பினர்கள். ஈழநாடு, ஈழநாதம், முரசொலி இவற்றில் பணியாற்றிய பலர் வேலையின்றி உள்ளனர். இவர்களுக்கு சில பொருள் உதவி செய்ய தொண்டர் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்